விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 18 வெள்ளிக்கிழமை (02.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 073

# இலங்கையில் தமிழர்கள் மீதான பாதுகாப்புப் படையினர், பொலிஸாரின் சித்திரவதைகள் தொடர்கின்றன

## புதிய ஆதாரங்களை வெளியிட்டது அல்ஜஸிரா ஊடகம்

(கட்டார்) இலங்கையில் தமிழர்கள் மீதான சித்திரவதைகளை பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றனர் என்பதற்கான புதிய ஆதாரங்களை அல்ஜஸிரா சர்வதேச ஊடகம் வெளிப்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட தமிழர்களின் வாக்குமூலங்களுடன் அந்த ஊடக்ம் புதிய ஆதாரங்களையும் வெளிப்படுத்தியுள்ளது. (23-ம் பக்.)




வடமராட்சி பகுதியில்

## 10 கிலோ கஞ்சாவுடன் 5 சந்தேக நபர்கள் கைது

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் கஞ்சா விநியோக நடவடிக்கை ஒன்றை முறியடித்த நெல்லியடி பொலிஸார் பத்து கிலோ கிராம் கேரளக் கஞ்சாவை மீட்டதுடன் சந்தேக நபர்கள் ஐவரினையும் கைது செய் 23

## முன்னாள் போராளிக்கு கடும் அச்சுறுத்தல்

தி கார்டியன் செய்தி வெளியீடு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி ஒருவருக்கு கடும் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 23

## பொன்சேகாவுக்கு நாம் பயமில்லை

கூட்டு எதிர்க்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு பொன்சேகா அல்ல பத்து பொன்சேகாக்கள் வந்தாலும் கூட்டு எதிர்க்கட்சியை அச்சுறுத்த 23

முல்லை வட்டுவாகலில்

## பறக்கவிடப்பட்ட சிவப்புக் கொடி



(குருமன்காடு)

முல்லைத்தீவு வட்டுவா 23

## காணாமல் போனோரினை தேடிவரும் உறவினர்களில் மற்றுமொரு தந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டோரை தேடி வருகின்ற வயோதிப பெற்றோர்களில் மற்றுமொருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் திருநெல்வேலி இராமநாதன் வீதியை சேர்ந்தவரும் கால்நடை வைத்திய சாலை உத்தியோகத்தருமான நாகலிங்கம் சத்தியவாகீஸ்வரன் (வயது74) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த தந்தையுடைய மகனான ச.ரஜீவன் (வயது30) என்பவர் 2006ஆம் ஆண்டு இராணுவத்தினரால் அவரது 23

## ஊழல், மோசடிகளுக்கு எதிரான கொள்கையில் மாற்றம் இல்லை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழல், மோசடிகளுக்கு எதிரான தனது கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்நறுவை - கிரித்தலே பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரை 24



காணாமற்போனோர் அலுவலகத்தில்

## இரு முன்னாள் இராணுவ அதிகாரிகள் நியமனம்

ஏமாற்றம் தருவதாக உறவுகள் தெரிவிப்பு

(கொழும்பு)

காணாமற்போனோர் அலுவலகத்துக்கான தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களை நியமித்தமை தொடர்பான அறிவிப்பு தமக்கு ஏமாற்றத்தை தருவதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அமைப்பு தெரிவித்தது.

காணாமற்போனோர் அலுவலகத்துக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பில் உறவினர்களை காணாமல் போகக் கொடுத் 23

## காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் அமைப்புக்கு

அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் வரவேற்பு



(கொழும்பு)

காணாமற்போனோர் அலுவலகத்துக்கு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையானது, முக்கியமானதொரு நகர்வு என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார். 24

## தொடர்ந்து போராடுங்கள் கேப்பாப்புலவு மக்களிடம் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமது பூர்வீக நிலங்களை விடுவிக்க கோரி கேப்பாப்புலவு மக்கள் மேற்கொண்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்றுடன் ஓராண்டை பூர்த்தி செய்துள்ள நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

இதன் போது அவர், 24

## ஐ.நா மனிதவுரிமை கூட்டத்தொடரில் தமிழ் மக்கள் பேரவையின் பிரதிநிதிகள்

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தகவல்



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் 37ஆவது கூட்டத்தொடர் இடம்பெற்று வரும் நிலையில் அதற்கு தமிழ் மக்கள் பேரவையினை பிரதிநிதித்துவப்படுத்தி சிலர் செல்லவுள்ளதாக வட மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் தமிழ் மக்கள் பேரவையின் கூட்டமானது இடம்பெற்றிருந்து. இக் கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்க 23

தமிழர்களின் உரிமை தொடர்பாக

## ஐ.நா சபையிடம் நீதி கோரி ஈருருளியில் பயணம் ஆரம்பம்



23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்டு மக்களுக்கு செய்ய வேண்டிய பணிகளில் குறைபாடுகள் இருக்காது

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் செய்ய வேண்டிய பணிகளை எவ்வித குறைபாடுமின்றி மேற்கொள்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலநறுவை திக்கல்புர ஸ்ரீ சுதர்மாராம விகாரையில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள மகா சங்கத்தினருக்கான விடுதியை கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதில் உரையாற்றிய ஜனாதிபதி,

நாட்டின் மீதும் மக்கள் மீதும் கொண்டுள்ள அன்பின் அடிப்படையில் உண்மையான அபிவிருத்தியின் தேவையை தான் மனச்சாட்சியுடன் மேற்கொள்வதாக தெரிவித்த ஜனாதிபதி, ஊழல் மோசடி இல்லாமல் அந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன் கொண்டு செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக கூறினார்.

கடந்த மூன்று வருட காலப் பகுதியில் பொலநறுவை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பது எந்தவொரு அரசாங்கத்தின் கீழும் அந்த மக்களுக்கு நிறைவேற்றப்படாத அபிவிருத்திப் பணிகளாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இது பல வருடங்களாக திட்டமிடப்பட்டு மக்களின் தேவைகள் குறித்து அறிந்து மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளாகும் எனத் தெரிவித்தார்.

மக்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம், வீதிகள் புனரமைப்பு, நீர்ப்பாசனம், குடிநீர் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள அபிவிருத்திக்காக விரிவான நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவில் காணிகள் இல்லாத மக்களுக்கு பிசோபுர பிரதேசத்தில் காணிகளை பெற்றுக்கொடுப்பதற்காக அடுத்த வாரம் விண்ணப்பம் கோரப்பட உள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

சங்கைக்குரிய மெதகம சோமானந்த நாயக்க தேரர், சங்கைக்குரிய அம்பலிந்தே குணரத்ன நாயக்க தேரர், திக்கல்புர ஸ்ரீ சுதர மாராம விகாரையின் விகாராதிபதி தெவ கொட தம்மானந்த நாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர், பொலநறுவை மாவட்ட செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, மெதரிகிரிய பிரதேச செயலாளர் டி.எம்.கருணாரத்ன ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-4)

# கோத்தபாயவை பிரதமராக்க ஜனாதிபதி முயற்சிக்கின்றார்

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை பிரதமராக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

இதன் ஊடாக அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ஜனாதிபதி முயற்சிப்பதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்க வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் அரசியல் அவசியம் என்ன என்பது கடந்த உள்ளூராட்சி தேர்தலில் அவர் செயற்பட்ட முறையில் தெளிவாக தெரிகின்றது. அவர் ஜனாதிபதி பதவியை விட்டு விலக மாட்டார். அது தெளிவாகியுள்ளது.

இதனால் மீண்டும் ஜனாதிபதியாக அவருக்கு, மகிந்தவிடம் உள்ள வாக்குகள் அவசியம். இதன் காரணமாக மகிந்த ராஜபக்ஷவை தவிர அவரது குடும்பத்தின் ஏனையவர்களின் ஆதரவை பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் அவருக்குள்ளது.

எனவே கோத்தபாய ராஜபக்ஷவை இணைத்துக் கொண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4)

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

■ வட மாகாணப் பரீட்சைகள்
■ மத்திய அரச பரீட்சைகள் என்பவற்றுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**தொடர்பு**
**0766883394**
D.M.I
**வெலிங்டன் சந்தி**
(41-1757)

# தேசிய பட்டியலூடாக வந்தவர்கள் ஐ.தே.கவை அழிவு பாதைக்கு இழுக்கின்றனர்

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பட்டியலின் ஊடாக வந்த ஓரிருவர் ஐக்கிய தேசியக் கட்சியை அழிவுப் பாதைக்கு இட்டு செல்வதாக கட்சியின் உப தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின்ன உடன்மறுசீரமைப்பு செய்ய வேண்டும். மேலும மாரப்பன குழுவின் ஊடாக மக்கள் ஆணையை பெற்ற என் மீது ஆணை இல்லாதவர்கள் தீர்மானம் எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மொதர, கிம்புலாகலவில் விளையாட்டு கழகமொன்றுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

தேசிய பட்டியலின் ஊடாக வந்த ஓரிருவர் ஐக்கிய தேசியக் கட்சியை அழிவுப் பாதைக்கு இட்டு செல்கின்றனர். இவ்வாறான ஓரிருவரினால் கட்சிக்கு ஏற்பட்ட பாதிப்புகளை பின்நகர்த்த முடியாத அளவிற்கு பாதிப்புக்கு உரியதாக உள்ளது.

எனவே நாம் ஐக்கிய தேசியக் கட்சியை பற்றி சிந்திக்க வேண்டும். தற்போது கட்சியை மறுசீரமைக்க நேரம் வந்துள்ளது. ஆகவே உடனடியாக கட்சியை மறுசீரமைக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியை மாத்திரமின்றி ஏனைய கட்சிகளையும் மறுசீரமைக்க வேணடும். ஏனெனில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அத்தனகல்ல தொகுதியை பொறுப்பேற்ற போதும் அதில் தோல்வி அடைந்துள்ளது.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியினை உடன்மறுசீரமைப்பு செய்ய வேண்டும். மேலும மாரப்பன குழுவின் ஊடாக மக்கள் ஆணையை பெற்ற என் மீது ஆணை இல்லாதவர்கள் தீர்மானம் எடுக்கின்றனர்.

இந்நிலையில் நான் நிதி அமைச்சராக பதவி வகித்த போது மாணவர்களுக்கான காப்புறுதிகள் மற்றும் டெப் கணினி வழங்குவதற்கான திட்டங்களை நானே ஆரம்பித்தேன். எனினும் இதற்கு சொந்தம் கொண்டாடுவதற்கு பலர் முனைகின்றனர் என்றார். (ம-4)



**சொல்லால் மட்டுமல்லாது**
**செயலாலும் நன்றி**
**செலுத்த வேண்டிய தருணம் இது**



என் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய
தமிழ் உறவுகளே!
மாற்றத்தையும் ஏற்றத்தையும் வரவேற்றும் எதிர்பார்த்தும்
நடந்து முடிந்த தேர்தலில் நம்பிக்கையுடன் எனக்கு வாக்களித்த
உங்கள் அனைவருக்கும் சொல்லால் மட்டுமல்லாது செயலாலும் நன்றி
செலுத்த வேண்டிய, என் கடமையை நிறைவேற்ற வேண்டிய தருணம் இது.
**மாற்றத்திற்கான தொடக்கப் புள்ளியை நீங்கள் காட்டியுள்ளீர்கள்**
இது ஒரு காலத்தின் தேவை
வரலாற்றை ஏற்றமிகு ஒன்றாக மாற்றும் தருணமும் இது தான்
அந்த வகையில் நீங்கள் சிந்திக்க தொடங்கி விட்டீர்கள் என்ற உன்னதமான
செய்தியை இந்தத் தேர்தலின் மூலம் உலகறிய வைத்தமைக்கு நன்றி
எம் மண்ணிற்காக எம் மொழிக்காக எமக்காக தம் இறுதி மூச்சு வரை சுதந்திர
வேட்கையுடன் போராடி மாவீரராய் மனங்களில் நிலைத்து வாழ்பவர்கள்
உங்கள் சிந்தனை மாற்றத்தால் புத்துயிர்ப்பு கொள்வார்கள் என்பது உறுதி.
**நிச்சயம் வரலாறு எம் மண்ணையும் மக்களையும் விடுதலை செய்யும்**
வாருங்கள் எம் ஆறாத துயரங்களை மட்டுமல்ல எம்முடன் வாழும் மாறாத
மனங்களையும் மாற்றி ஒரு புது விதியை தோற்றுவிப்போம்.
"அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சி நடத்தும் அல்லது அதிகாரம் செலுத்தும் விவகாரம் அல்ல. மக்களுக்கு சேவை புரியும் பணி மக்களின் நலவாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு" என்ற தலைவரின் வரிகளை நெஞ்சில் நிறுத்தி
தமிழ் தேசியத்தின் எழுச்சிக்கனவுகளுடன் விடுதலை விடியலை நோக்கிய
இலக்குடன் பயணித்த என் தந்தையின் உறுதியான அடிச்சுவட்டில் நான்
உங்களுடன் இறுதிவரை பயணிப்பேன். இது என் வாக்குறுதி மட்டுமல்ல மன-
உறுதியும் கூட....
நான் என்றும் உங்களுடன் இறுகக் கைகோர்த்து இயங்குவேன். புத்தெழுச்சி
கொள்ள ஒன்றுபட்டு உழைப்போம் வாருங்கள்



"மீண்டும் தொடங்கும் மிடுக்கு"

எல்லோருக்கும் என் நன்றிகள்
அன்புடன்
வரதராஜன் பார்த்திபன்



(3084)

# கண்ணீர் அஞ்சலி



திரு.**வைரவன்**
**விக்கினேஸ்வரன்**

வேலணை பிரதேச சபையில் ஊழியராக கடமையாற்றும் திரு.வைரவன் விக்கினேஸ்வரன் அவர்கள் காலமானதையிட்டு துயர் அடைவதுடன் அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சாங்கம்**
**வேலணை பிரதேச சபை**

(3080)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித நாணயம் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail.srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(-7742)

# கண்ணீர் காணிக்கை



திருமதி
**இராசம்மா**
**நாகலிங்கம்**



செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லக் குழந்தைகளின் வாழ்வியல் நலனுக்காக பல வழிகளிலும் பேருதவி ஆற்றி வரும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு.நா. வேதநாயகன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி இராசம்மா நாகலிங்கம் அவர்கள் 27.02.2018 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைந்தோம். இவர் தம் பிரிவால் ஆறாத் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா எல்லாம் வல்ல உருத்திர புரிசுவரன் சந்நிதியில் சங்கமமாகி நித்திய வாழ்வு பெற இறையருளினை இறைஞ்சுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக்குழந்தைகள்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

(C-1755)


# மௌனம் ஒரு யுத்தக்குற்றம்

## சிரியாவில் தொடரும் இனப்படுகொலைக்கு எதிராக யாழ்.நகரில் நேற்றுக் கண்டனப் போராட்டம்






(படங்கள் :உ.சாளின்)




(யாழ்ப்பாணம்)

சிரியாவில் தொடரும் இனப்படுகொலைக்கு எதிராக நேற்று யாழ். பேருந்து நிலையம் முன்பாக கண்டனப் போராட்டம் ஒன்று தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. சிரியா கௌடாவில் இடம்பெற்று வரும் போரில் பல ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். இதில் அதிகமாக அப்பாவிக் குழந்தைகளே கொல்லப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட, காயமடைந்த குழந்தைகளின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பரவி உலகம் முழுவதிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. 2009 இல்இதே போன்ற அழிவை ஈழத் தமிழினமும் சந்தித்திருந்தது. இந்த நிலையிலேயே அழிவை எதிர்கொண்ட இனம் என்ற வகையில் சிரிய மக்களுக்காக ஈழத்தமிழ் இளைஞர்கள் குரல்கொடுக்க ஆயத்தமாகி யுள்ளனர்.

நேற்று முற்பகல்10 மணியளவில் யாழ்.பிரதான பேருந்து நிலையம்முன்பாக கண்டனப் போராட்டம் நடைபெற்றது. நாம் யுத்தத்திற்கு எதிராகப் பேசாமல் விட்டால், படுகொலைகளுக்கு எதிராக எழுந்து நிற்காவிட்டால் குழந்தைகளும் பெண்களும் ஆண்களும் கொல்லப்படுவதை வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தால் நாம் மனிதர்களா? மானுட அறத்தின் கூட்டு மனச்சாட்சியில் நாமும் இணைந்து நின்று எதிர்க்க வேண்டும்.

நம்மால் படுகொலைகளை நிறுத்த முடியாமல் போனாலும் போகலாம். ஆனால் படுகொலை நிகழும் போது பார்த்துக் கொண்டிருந்தவர்களாக இருப்பதை விட நிறுத்த முயற்சி செய்தவர்களாக இருப்போம் எனப் போராட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

2009 இல் முள்ளிவாய்க்கால், 2018 இல் சிரியா, எங்களுக்கு யுத்தத்தின் வலிகள் தெரியும் என எழுதப்பபட்ட பதாகைகளை இளைஞர்கள் ஏந்தியிருந்தனர். இந்தப் போராட்டத்தில் முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4-106)

## தேசியப்பட்டியல் மூலம் வந்த ஒருசிலரால் பாரதூரமான அழிவு முன்னாள் அமைச்சர் ரவி விசனம்

(கொழும்பு)

தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு வந்து அமைச்சர் பதவிகளை பெற்றுக் கொண்ட சிலர், கட்சியை அழிவின் விளிம்புக்குள் தள்ளியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.



முகத்துவாரம் - கிம்புலாஹெல பிரதேசத்தில் விளையாட்டு சங்கங்களுக்கு விளையாட்டு உபகரணங் களை வழங்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

எந்த வாக்கு வங்கியும் இல்லாது தேசியப் பட்டியல் மூலம் வந்துள்ள ஒரு சிலர் கட்சிக்கு செய்துள்ள அழிவானது மீண்டெழ முடியாத அளவுக்கு பாரதூரமா கியுள்ளது.

இவ்வாறான நிலைமையில், கட்சிக்குள் மக்கள் உணரும்படியான மாற்றத்தை ஏற்படுத்தி இளைஞர்கள் முன்னுக்கு வர சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனவும் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

## வடக்கிற்கு ஒரு சட்டம் தெற்கிற்கு இன்னொரு சட்டமா?

## மகிந்த அணி எம்.பி.ரோஹித கேள்வி

(கொழும்பு)

ரணில் - மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் வடக்கில் ஒருசட்டத்தையும், தெற்கில் இன்னுமொரு சட்டத்தையும் அமுல்படுத்தி வருவதாக முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிரணி குற்றம் சாட்டியுள்ளது.



நல்லாட்சி அரசாங்கத்தின் அராஜகத்தை எதிர்த்து தெற்கில் போராடுகின்ற வர்கள் மீது தாக்குதல் நடத்தியும் சிறையில் அடைத்தும் அராஜகத்தை அரங்கேற்றும் அரசாங்கம் வடக்கில் இராணுவ முகாம்களுக்கு முன்பாக நடத்தப்படும் போராட்டங்களை அமைதிப் போராட்டங்கள் எனக் கூறு வது வேடிக்கையாக இருப்பதாகவும் ஒன்றிணைந்த எதிரணி குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழிநடத்துகின்ற ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று வியா ழக்கிழமை பகல் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, குருநாகல் தம்புத்தேகம நகரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயக் குடும்பங் கள் உட்பட பொதுமக்களுக் கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

"ரத்துபஸ்வல மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை சுட்டிக்காட்டியே இந்த அரசாங்கம் ஆட்சிப்பீடத்திற்கு வந்தது. இன்று இந்த அரசாங்கம் செயற்படுவது எவ்வாறு? அப்பாவி மக்களின் தலைகளை உடைத்து, பொலிஸ் நிலையத்திற்குள் அழைத்துச்சென்று அங்கேயும் தாக்கி அகிம்சையான விவசாய மக்களுக்கு அநியாயங்களை செய்கிறது.

இந்த நாட்டில் மக்களுக்கு அரிசியை வழங்கும் விவசாயக் குடும்பங்கள் மற்றும் விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஜனாதிபதி ஆட்சி செய்யும்போது விவசாயக் குடும்பங்களைத் தாக்குகின்ற தருணத்தில் ஜனாதிபதி எவ்வாறு நீங்கள் மௌனமாக இதனைப் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள் என்ற கேள்வியை தொடுக்கின்றோம்.

எமது நாட்டில் ஆர்ப் பாட்டம், போராட்டங்களின் போது பொலிஸாரை இரண்டு நோக்கங்களுக்காக அரசாங்கம் ஈடுபடுத்துகிறது. வடக்கில் ஒருசட்டமும், தெற் கில் இன்னொரு சட்டமும் செயற்படுத்தப்படுகிறது. வடக்கில் சிவாஜிலிங்கம் ஆர்ப்பாட்டம் செய்யும் போது, இராணுவ முகாம்களுக்கு முன் பாக போராட்டம் செய்யும் போது, வடமாகாண சபை அமைச்சர் ஒருவர் தேசியக் கொடியை ஏற்றுவதை நிரா கரித்தபோது அதனை கண்டு கொள்ளாதிருக்கின்றனர். அங்கு நடத்தப்படும் போரா ட்டங்கள் அமைதிப் போராட் டங்கள்.

சில சந்தர்ப்பங்களில் அரச தலைவர்களும் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு விரைகின்றனர். மிகுந்த பாசத்துடன் அவர்களுடன் கலந்துரையாடுகின்றனர். ஆனால் தெற்கில் ஒருவர் தண்ணீர்கோரி போராட்டம் செய்யும்போது விரட்டிவிரட்டி அடிக்கின்றனர். மத்தள சர்வதேச விமான நிலையத்தை விற்பனை செய்யும்போது அதற்கெதிராக போராடிய நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களை சிறை வைத்தார்கள். மாற்றம்தான் என்ன? மத்திய வங்கி மோசடி தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பொலிஸில் ஒப்படைக்க வேண்டும். ஆனால் அவருக்கே இன்று பொலிஸார் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பொலிஸ் ஆணைக்குழுவை வினைத்திறன் மிக்கதாக மாற்ற பிரதமர் ரணில் தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழுவுக்கு புதிய அதிகாரிகளை நியமித்து அதனை வினைத்திறன் மிக்க நிறுவனமாக மாற்றியமைக்க பிரதமர் ரணில் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரதமர்சட்டம்ஒழுங்கு அமைச்சைப் பொறுப்பேற்றவுடன் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து தேசிய பொலிஸ் ஆணைக்குழுவை பலப்படுத்தும் நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (இ-7)

டர்பன் டெஸ்ட் 1ம் நாள்

# வோர்னர், ஸ்மித் அரைச்சதம்

# முதல் நாள் நிறைவில் ஆஸி 5/225



ஸ்மித், வோர்னர் அரைச்சதம் கடந்து கைகொடுக்க, தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி ஸ்திரமான நிலையில் உள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப பயணம் மேற்கொணடுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் நேற்று டர்பனில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**வோர்னர் அபாரம்**

அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர், பான்கிராப்ட் (5) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. கவாஜா (14) ஏமாற்ற, வோர்னருடன் இணைந்தார் அணித் தலைவர் ஸ்மித். டெஸ்ட் அரங்கில் 28ஆவது அரைச்சதம் அடித்தார் வோர்னர். இது, தென்னாபிரிக்க மண்ணில், இவர் அடித்த தொடர்ச்சியான 6ஆவது அரைச்சதமாக அமைந்தது. இவர் 51 ஓட்டங்களுடன் பிலாண்டரின் வேகத்தில் டி வில்லியர்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

**ஸ்மித் அரைசதம்**

அடுத்து வந்த ஷோன் மார்ஷ் சற்று தாக்குப்பிடித்தார். டெஸ்ட் அரங்கில் தொடர்ந்து 5ஆவது அரைச்சதம் எட்டிய அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் (56), ஷோன் மார்ஷ் (40) மகராஜ் 'சுழலில்' சிக்கினர்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, போதிய வெளிச்சமின்மை காரணமாக, முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

மிட்சல் மார்ஷ் (32), பெய்ன் (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில், பிலாண்டர்2, மகராஜ்2, ரபாடா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

போட்டியின் 2ஆம் நாளாட்டம் இன்றாகும்.

# கரைசேர்க்க தோனி இல்லையே


## சுயசரிதை நூலில் கங்குலி ஆதங்கம்

கடந்த 2003 உலக கிண்ண அணியில் தோனி இருந்திருக்க வேண்டும் என விரும்பினேன், என கங்குலி தெரிவித்தார்.

இந்திய அணி முன்னாள் அணித் தலைவர் கங்குலி (வயது-45), மொஹமட் அசாருதினுக்கு பின் வெற்றிகரமான, துணிச்சலான அணித்தலைவர் என்று பெயர் பெற்றவர். இவர், 'தி செஞ்சரி இஸ் நொட் எனப்' என்ற பெயரில் சுயசரிதை எழுதியுள்ளார். இதில் பல்வேறு ருசிகரமான தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

இதில் தோனி குறித்து கங்குலி கூறியுள்ள தகவல்கள்:

அணித் தலைவர் என்ற முறையில் அணியிலுள்ள சக வீரர்கள், நெருக்கடியான நேரங்களில், எப்படி சமாளித்து, சவாலை எதிர்கொள்கின்றனர் என்பதை தொடர்ந்து கண்காணிப்பேன். இவ் விடயத்தில் சிறப்பாக செயல் படக்கூடியவர் தோனி. கடந்த 2003 உலக கிண்ண தொடருக்கான இந்திய அணியில் இவர் இடம் பெற வேணடும் என விரும்பினேன்.



**சரியான கணிப்பு**

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியின் போது, இதை சக வீரர்களிடம் தெரிவித்தேன். இவர் இருந்திருந்தால், போட்டியின் முடிவு மாறியிருக்கலாம்.

தோனி அப்போது, இந்திய ரயில்வேயில் டிக்கெட் கலெக்டராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். இவர் குறித்து 2004இல் தான் எனக்கு தெரியவந்தது. இவரது திறமை, தொடக்க நாளில் இருந்தே என்னை கவர்ந்தது. நாளுக்கு நாள் இது அதிகரித்தது.

இவரைப் பற்றிய எனது கணிபபு, அடுத்தடுத்த ஆண்டுகளில் மிகச்சரியாக அமைந்தது, மகிழ்ச்சி தந்தது. பல்வேறு சாதனைகளை தகர்த்த தோனி, இப்போதும் அதே வேகத்துடன் செயற்படுவது வியப்பாக உள்ளது.

**திடீர் கோரிக்கை**

கடந்த 2008ல் எனது கடைசி டெஸ்ட். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நாக்பூரில் விளையாடினோம். இப்போட்டியின் ஐந்தாவது நாள் காலையில் என்னிடம் வந்த தோனி, 'நீங்கள் தலைவராகச் செயல்படுங்கள்' என, கோரிக்கை வைத்தார். இதை ஏற்க மறுத்து விட்டேன்.

கடைசியில் இந்திய வெற்றி பெறும் நிலையில் இருந்தது. இம்முறை மீண்டும் வந்த தோனி, மறுபடியும் அதே கோரிக்கையை வைத்தார். இம்முறை நான் மறுககவில்லை. ஏனெனில், இந்திய அணிக்கு தலைவராக களமிறங்கி எட்டு ஆண்டுகள் ஓடி இருந்தன.

**உங்கள் வேலை**

மீண்டும் அதே நாளில், அவுஸ்திரேலிய அணியின் கடைசி விக்கெட்டை வீழ்த்த, எனது விருப்பப்படி களத்தடுப்பை மாற்றி அமைக்கவும், பந்துவீச்சில் மாற்றங்களும் கொண்டு வந்தேன். இருப்பினும், அந்த நேரத்தில் எனது மனது அலை பாய்ந்தது. தலைமைப் பணியில், கவனம் செலுத்த முடியவில்லை. இதனால், மூன்று ஓவர்களுக்குப் பின், மீண்டும் அவரிடமே, தலைமைப் பொறுப்பை ஒப்படைத்து,' இது உங்கள் வேலை எம்.எஸ்.,' என்று கூற, இருவரும் சிரித்தோம்.

இவ்வாறு தனது சுய சரிதையில் கங்குலி தெரிவித்துள்ளார்.

**முதலும் முடிவும்**

தோனி, கடந்த 2004 இல் பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகம் ஆனார். அணித் தலைவராக கங்குலி இருந்தார். இவரது திறமை பார்த்து வியந்த கங்குலி, பாகிஸ்தானுக்கு எதிராக போட்டியில், 3ஆவது இடத்தில் களமிறக்கினார். இதில் 148 ஓட்டங்கள் குவித்தார் தோனி.

இதன் பின், தொடர்ந்து ஏறுமுகம் தான். 'ரி20', ஒருநாள் அணியை தொடர் ந்து டெஸ்ட் அணிக்கும் தலைவர் ஆனார் தோனி. கங்குலியின் கடைசி டெஸ்டில் (2008), இவர்தான் தலைவராக இருந்தார். சர்வதேச கிரிக்கெட்டில், வெகு விரைவில் கங்குலி ஓய்வுபெற்றதற்கு, தோனி தான் காரணம் என, ஒரு சிலர் கூறினர்.

ஆனால், 2003இல், தோனி அணியில் இடம்பெற வேண்டும் என, கங்குலி விரும்பியதாக தெரிவித்துள்ளது, அவர்களுக்கு இடையில உள்ள நட்பை வெளிப்படுத்தியுள்ளது.

# கிரிஜ்மன் '100'



அத்லெட்டிகோ மட்ரிட் கால்பந்து அணி சார்பில் அன்டோனி கிரிஜ்மன் 100 ஆவது கோலை பதிவு செய்தார். இவரின் அசத்தல் ஆட்டம் கைகொடுக்க லா லிகா போட்டியில் அத்லெட்டிகோ அணி 4-0 என்ற கணக்கில் லெகன்ஸ் அணியை வென்றது.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்து போட்டி நடக்கிறது. மட்ரிட் நகரில் நடந்த லீக் போட்டியில் அத்லெட்டிகோ மட்ரிட், லெகன்ஸ் அணிகள் மோதின. 26ஆவது நிமிடத்தில் அத்லெட்டிகோ அணியின் கிரிஜ்மன் முதல் கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய இவர் (35வது நிமிடம்) இரண்டாவது கோல் அடித்தார். இதனால், முதல் பாதியில் அத்லெட்டிகோ 2-0 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியிலும் கிரிஜ்மானின் கலக்கல் ஆட்டம் தொடர்ந்தது. இவரின் காலில் சிக்கிய பந்தை, தடுக்க எதிரணி வீரர்கள் திணறினர். இதை பயன்படுத்திய இவர், (56,67) அடுத்தடுத்து இரண்டு கோல் அடித்தார். எதிரணியின் முயற்சிக்கு எவ்வித பலனும் கிடைக்கவில்லை. முடிவில், அத்லெட்டிகோ மட்ரிட் அணி 4-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

**100 கோல்**

இதில் துடிப்பாக செயற்பட்ட கிரிஜ்மன், நான்கு கோல் அடித்தார். இதன் மூலம், அத்லெட்டிகோ மட்ரிட் அணிக்காக தனது 100 ஆவது கோலை பதிவு செய்தார். இதுவரை இவர் 101 கோல் அடித்துள்ளார்.

**2ஆவது முறை**

பிரான்ஸ் வீரர் அன்டோனி கிரிஜ்மன் (வயது-26), இப்போட்டியில் மிரட்டிய இவர், 'ஹட்ரிக்' கோல் அடித்தார். இதன்மூலம், லா லிகா தொடரில் தொடர்ந்து 2ஆவது முறையாக 'ஹட்ரிக்' சாதனை நிகழ்த்தினார். இதற்கு முன், கடந்த 25ஆம் திகதி நடந்த போட்டியிலும் இந்த இலக்கை எட்டி இருந்தார்.

**3ஆவது வீரர்**

அத்லெட்டிகோ மட்ரிட் அணிக்காக 21ஆவது நூற்றாண்டில் 100 கோல் அடித்த 3ஆவது வீரர் என்ற பெருமை பெற்றார் கிரிஜ்மன். இதற்கு முன், செர்ஜியோ அகுரோ (101), பெர்னாண்டோ டோரஸ் (124) இந்த சாதனையை நிகழ்த்தி இருந்தனர்.

# போர்க் குற்றங்களை நிராகரிக்கும் எமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## சரத் வீரசேகர உறுதி

(கொழும்பு)

போர்க்குற்றங்களை நிராகரிக்கும் எமது நிலைப்பாட்டை இம்முறையும் ஜெனிவாவில் தெரிவிப்போம் என எலிய அமைப்பின் பிரதிநிதியாக ஜெனிவா செல்லவுள்ள முன்னாள் பிரதி அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

எதிர்வரும் 16 ஆம் திகதி அவர் ஜெனிவா செல்லவுள்ளதாகவும் அறிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் முன்னாள் பிரதி அமைச்சர் சரத் வீரசேகர எலிய அமைப்பின் பிரதிநிதியாக ஜெனிவா செல்லவுள்ளதாக தெரிய வருகின்றது.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறையும் எலிய சார்பில் நான் ஜெனிவா பயணமாகின்றேன். எதிர்வரும் 16 ஆம் திகதி பயணமாக நினைத்துள்ளேன். இம்முறையும் நாங்கள் எமது நிலைப்பாட்டினை உறுதியாக தெரிவிக்க வேண்டும். ஏனெனில் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனேயே இலங்கையின் சர்வதேச தரப்பிடம் அடிபணிய வைத்துவிட்டது. கடந்த 2015 ஆம் ஆண்டு ஜெனிவா கூட்டத்தொடரின் போது இலங்கையில் புதிய அரசியல் அமைப்பு கொண்டுவரப்படும், பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும், காணாமல் போனோர் காரியாலயம் அமைக்கப்படும் என்ற வாக்குறுதிகளை கொடுத்தும் யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரிக்கப்படுவதாக வாக்குறுதி வழங்கியும் எமது இராணுவத்தை தண்டிக்கும் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துவிட்டது.



ஆகவே இலங்கை அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத வரையில் சர்வதேசம் தொடர்ச்சியாக இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து அதன்மூலமாக தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

எவ்வாறிருப்பினும் நாம் தொடர்ச்சியாக எமது இராணுவத்தை காப்பாற்றும் நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகின்றோம். இம்முறையும் நாம் இலங்கை இராணுவத்தை காப்பாற்றும் வகையில் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம். ஜெனிவாவில் எமது கரங்களை பலப்படுத்தும் தரப்பை சந்தித்து அவர்களின் ஆதரவினை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுப்போம். சர்வதேச சிங்கள அமைப்புகள், சிங்கள மக்களைச் சந்தித்தும் எமக்கு ஆதரவான நகர்வுகளை முன்னெடுக்க அழுத்தம் கொடுப்போம்.

எமது இராணுவத்தை தண்டிக்கும் எந்தவொரு நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுக்க இடமளிக்க மாட்டோம். அதற்கான குரலாகவே நாம் ஜெனிவாவில் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றோம்.

இந்த அரசாங்கம் முன்னெடுத்த தேசத்துரோக செயற்பாட்டை நாம் சாதாரணமாக விடப்போவதில்லை. எமது ஆட்சியில் இவர்கள் அனைவரையும் கண்டிப்பாக தண்டிப்போம். இன்று இராணுவத்தை குறைகூறும் நபர்கள், சர்வதேச நாடுகளில் இருந்துகொண்டு புலிகளை ஆதரிக்கும் நபர்கள் இலங்கையை பழி தீர்க்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். எனினும் பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கையில் இலங்கையின் தேசியக் கொடியை தரையில் வீசி கால்களால் மிதித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். இவை அனைத்துமே இலங்கையில் ஒற்றுமையாக வாழும் தமிழ், சிங்கள மக்கள் மத்தியிலேயே முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் பிரதி அதிபர்
**திரு.அமிர்தலிங்கம் வத்சலன்**
(Bsc, Dip.in Edu.)

கல்வி நிர்வாக சேவை
தரம் III இற்கான பரீட்சையில்
சித்தியடைந்து பதவியுயர்வு
பெற்றுச் செல்வதனை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulation

ஆசிரியர் கழகம்,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

(3074)



## பேரவைச் செயலகம், வடக்கு மாகாண சபை

### பேரவைச் செயலகச் சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல் - 2018/2019

வடக்கு மாகாண பேரவைச் செயலக பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான மற்றும் தகைமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைகளை பின்வருமாறு கோருகின்றார்.

**01.** தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் 02.03.2018 தொடக்கம் 23.03.2018 வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரையான அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் (021 205 7081) மீளளிப்புச் செய்யப்பட முடியாத வைப்புத் தொகையாக ரூபா 1,000ஐ செலுத்தி பேரவைச் செயலகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**02.** விலைக் கேள்விகள் 23.03.2018 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இச் செயலகத்தில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக் கேள்விகள் அனைத்தும் 23.03.2018 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும்.

**03.** "பேரவைச் செயலகச் சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல் - 2018 / 2019" என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**04.** எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலை மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.

**05.** கிடைக்கப் பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

(சி-1754)

பேரவைச் செயலக பெறுகைகள் குழு,
வடக்கு மாகாணசபை, A-9 வீதி,
கைதடி.

க.தெய்வேந்திரம்.
தலைவர்.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: BBA, MBA/ வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/7549 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ தனியார் தொழில்<br>தொ.இ: G/6687 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்: BSc/ பொறியியலாளர் லண்டன்<br>தொ.இ: B/7551 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா: 17 செவ் 8 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6698 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/7553 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6699 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: A/L/ அவுஸ்ரேலியாPR<br>தொ.இ: B/7555 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6704 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தமிழ் மக்கள் பேரவை கட்சிகளுக்கு அடிமைப்படாது

## தமிழ் மக்களின் முன்னேற்றமே குறிக்கோள் இணைத்தலைவர் விக்னேஸ்வரன் திட்டவட்டம்

(யாழ்ப்பாணம்)

குறிக்கோள்களை முன்வைத்து மிக அமைதியாக முன்னேறி வரும் தமிழ் மக்கள் பேரவை கட்சிகளுக்கு அடிமைப்படாது தமிழ் மக்கள் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டு சேவையில் ஈடுபடும் என தெரிவித்த தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களுள் ஒருவரும், வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன், மக்களின் சேவை யொன்றே எமது இயக்கத்தின் குறிக்கோள் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் விசேட கூட்டம் நேற்று யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் இணைத் தலைவர்களுள் ஒருவராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பேரவை தனது வேகத்தைக் கூட்டிப் பயணிக்க வேண்டிய தருணம் தற்போது உருவாகியுள்ளது. சென்ற முறை நாம் கூடிய போது தேர்தல்கள் விரைவில் நடைபெற இருப்பதாகக் கூறினோம். ஆனால் தேர்தலில் தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கம் என்ற ரீதியில் பக்கச் சார்பற்று விளங்கும் என்றும் கூறப்பட்டது.

ஆனால் எம்முடன் இருக்கும் கட்சிகள் தேர்தலில் கலந்து கொண்டதை தமிழ் மக்கள் பேரவை எதிர்க்கவில்லை. தேர்தல் முடிவுகளின் படி எமது இயக்கம் வெளியிட்டு வந்த கருத்துக்கள், கொள்கைகளை மக்கள் போதிய அளவு ஏற்றுக் கொண்டதாக தெரியவந்துள்ளது.

இது எமது கொள்கைகளுக்கு வெற்றி என்றே கூற வேண்டும். அதாவது எம்முடன் சேர்ந்திருந்த சேர்ந்திருக்கும் கட்சிகளின் வெற்றிகள் ஒருபுறமிருக்க இயக்கமான எமக்கும் கடந்த தேர்தல் சில உண்மைகளைப் புலப்படுத்தியுள்ளது. ஏனெனில் தமிழ்த் தலைமைத்துவம் தாம் கூறுவதையே மக்கள் என்றும் போல் ஏற்க வேண்டும் என்று தேர்தலின் போது கூறிவந்தது. எம்மைத் தீவிரப் போக்குடையவர்கள் என்று போட்டுடைத்தது.


ஆனால்கணிசமான அளவு மக்கள் அவர்கள் கருத்துக்களை நிராகரித்தார்கள். இதன் பொருட்டு தமிழ்த் தலைமைகளின் தற்போதைய கருத்துக்கள் முற்றிலும் மாறிவருவதை நாம் காண்கின்றோம். எம்மைத் தீவிர போக்குடையவர்கள் என்று குறை கண்டுபிடித்தவர்கள் இப்பொழுது தாமும் அதே கொள்கைகளை, கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கொண்டிருக்கின்றனர்.

வடக்கு கிழக்கு இணைப்பு வேண்டும் என்கின்றார்கள், சுயாட்சி வேண்டும் என்கின்றார்கள், தேசியம் பேசுகின்றார்கள், சமஷ்டி வேண்டும் என்கின்றார்கள். வீம்பில் பேசிய சிலர் தொடர்ந்து நாம் கூறிவந்த கருத்துக்களை இப்பொழுது விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருக்கின்றார்கள் போல் தெரிகின்றது.

ஆனால் தமிழ் மக்கள் பேரவை கட்சித் தலைமைத்துவங்களின், தமிழ்த் தலைமைத்துவங்களின் எழுச்சி வீழ்ச்சிகளுடன் சம்பந்தப்பட்ட ஒரு இயக்கம் அல்ல. அதற்கு கட்சி ஒழுங்கமைப்பு இல்லை, ஆனால் நிர்வாக ஒழுங்கமைப்பு உண்டு. கட்சி எதிர்பார்ப்புக்கள் இல்லை, ஆனால் தமிழ் மக்கள் அனைவரதும் எதிர்பார்ப்புக்களும் எமது எதிர்பார்ப்புக்களே. கட்சிகளின் ஆதரவாளர்கள் கட்சியையே முதன்மைப் படுத்துகின்றார்கள்.

பேரவையின் ஆதரவாளர்கள் பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள். ஆனால் கொள்கை ரீதியில் ஒன்றுபட்டவர்கள். அவ்வாறான கொள்கை ரீதியான ஒற்றுமையே இப்பொழுது முரண்டு பிடித்த எமது தமிழ்த் தலைமைகளையும் எம் மொழியைப் பேசவைத்துள்ளன. ஆனால் அதற்கான காரணங்கள் பல இருக்கலாம். அரசியல் ஆய்வாளர்கள் அவற்றைக் கண்டுபிடிப்பார்கள் என்று நம்புகின்றேன். தலைமைகள் யதார்த்தத்தை நோக்கிப் பயணிப்பது வரவேற்கத்தக்கதே.

தமிழ் மக்கள் பேரவை எம் மக்களை ஒன்று சேர்ப்பது, புரிந்துணர்வுடனான அவர்களின் குரல்களை ஒலிக்கச் செய்வது, தமிழ் மக்களின் குற்றம் குறைகளை எடுத்துக்காட்டி எம்மை நாமே முன்னேற்றிச் செல்வது, அரசியல் ரீதியாக எமது உரித்துக்களைப் பெறப் போராடுவது.



உலகத் தமிழ் மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்குதல் போன்ற பல குறிக்கோள்களை முன்வைத்து மிக அமைதியாக முன்னேறி வருகின்றது.

அந்த வகையில் எமது இளைஞர்களை ஒன்று சேர்க்கும் ஒரு பாரிய பொறுப்பு எம்மேல் சுமத்தப்பட்டுள்ளது. படித்த, பட்டம் பெற்ற, பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறப் படித்துக் கொண்டிருக்கும் இளைஞர் யுவதிகளும், படிப்பை இடைநிறுத்தி வேலைகளுக்காக அலைந்து திரியும் இளைஞர் யுவதிகளும், விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்,யுவதிகளும் இன்னும் பல இள நெஞ்சங்களும் "உங்கள் தமிழ் மக்கள் பேரவைக்கு எப்பேர்ப்பட்ட ஆதரவை நாம் வழங்கலாம்" என்று கேட்டு வருகின்றார்கள்.

சில மாதங்களுக்கு முன்னர் என்னை வட மாகாண சபையில் இருந்து வெளியேற்ற நடவடிக்கைகள் எடுத்த போது வந்து என்னைச் சந்தித்து தமது ஆதரவை நல்கிய பெரும்பான்மையான இளைஞர் குழாம்கள் எம்மோடு இணைந்து பயணிக்க நாட்டம் கொண்டுள்ளனர். அவர்களை ஒன்றிணைக்க எனக்கு அவகாசம் கிடைக்கவில்லை. எனினும் தொடர்ந்து அவர்கள் தமது கருத்துக்களை எனக்கு வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

தற்போது எமது இளைஞர் அணிகளை உருவாக்க தக்க தருணம் வந்துள்ளது. வட- கிழக்கு மாகாணங்களில் இளைஞர் அணிகளை ஒன்று சேர்க்கவும் அவர்களுக்கு எமது தமிழ் மக்கள் பேரவையூடாக போதிய அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வேண்டியுள்ளது.

அதன் பொருட்டு எம்மிடையே போதிய கரிசனை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றைய சூழலில் எமது மக்களிடையே புதியதொரு கலாசாரத்தை உண்டுபண்ண வேண்டிய ஒரு கடப்பாடு எம்மைச் சார்ந்துள்ளது.

கட்சிகளுக்கு அடிமைப்படாது தமிழ் மக்கள் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டு சேவையில் ஈடுபட வேண்டியுள்ளது. இளைஞர், யுவதிகளுக்கு ஆற்றல் அளிக்கும் செயற்றிட்டங்களை உருவாக்க வேண்டும்.

உதாரணத்திற்கு பல துறைகளில் தகைமையும் திறனும் அடைய புலமைப் பரிசில்கள் பல நாடுகளால் வழங்கப்படுகின்றன. அவற்றை எம் மக்கள் பாவிக்க முன்வரலாம். அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை எமது பேரவை எடுக்கலாம்.

சில அரசியல் கட்சிகள் நாங்கள் இந்தியாவுடன் கிட்டிய உறவைப் பேணுவதை விரும்புகின்றார்கள் இல்லை. தமிழ் மக்களுக்கு போரின் கடைசி நாட்களில் நடந்தவற்றிற்கு இந்தியாவும் பொறுப்பு என்ற முறையில் அவ்வாறான ஒரு எண்ணம் அவர்களுக்கு இருக்கலாம்.

ஆனால் அன்றைய நிலை வேறு. இன்றைய நிலை வேறு. இந்தியாவின் அனுசரணை இல்லாமல் வட- கிழக்குத் தமிழ் மக்கள் தமது நியாயமான குறிக்கோள்களை அடைய முடியாது என்ற எண்ணம் கொண்டவர்களும் எம்முள் இருக்கின்றார்கள். ஆகவே எம்மிடையே இது பற்றிய கருத்து வேறுபாடுகளை முடிந்தளவு நீக்குவது அவசியமாகின்றது. எல்லா விடயங்களிலும் எம்மிடையே கருத்தொருமிப்பு ஏற்பட முடியாது. ஆனால் ஒருவர் ஒருவர்க்கான கருத்துக்களைப் புரிந்து கொண்டு முன்னேறலாம்.

எமது தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சியாக மாறுமா என்ற கேள்வி மேலும் மேலும் எம்மிடம் கேட்கப்படுகிறது. ஒரு மக்கள்- இயக்கம் கட்சிக் கட்டுக்கோப்புக்களில் சிலவற்றைப் பின்பற்றலாம். ஆனால் கட்சியாக மாறிவிடக் கூடாது. அதனால்தான் நாங்கள் சென்ற தேர்தலின் போது எமது கொள்கைகளை, நோக்குகளைக் கட்சிகள் வெளிக்காட்டுவதை வரவேற்றோம்.

ஆனால் நாங்கள் அவர்களுடன் சேர முன்வரவில்லை. மக்கள் இயக்கத்தைக் கட்சிகள் ஆதரிக்கலாம். கட்சிகளை மக்கள் இயக்கம் ஆதரித்தால் அது மக்கள் இயக்கமாக இருக்க இலாயக்கற்றதாகிவிடும். ஒவ்வொரு கட்சிக்கும் ஏதோ ஒரு அடையாளம் உண்டு. வரலாறு உண்டு. மக்களிடையே மக்கள் இயக்கத்திற்கு இருக்கும் அடையாளம் வேறு. நாம் கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். மக்களுடன் நேரடியாகத் தொடர்பை ஏற்படுத்த விரும்புபவர்கள். மக்களின் சேவையொன்றே எமது இயக்கத்தின் குறிக்கோள். எந்த நன்மைகளையும் எமது இயக்கம் எவரிடமும் எதிர்பார்க்காது. ஆனால் எம்மைத் திறம்பட நடத்த எம் மக்கள் தரும் கொடைகளே எம்மை வழிநடத்துவன.

இந்த அடிப்படையில் நாங்கள் மத்திய குழுவாக இங்கு இன்று நேற்று கூடியிருக்கும் அதே வேளையில் எமது குறிக்கோள்களை நெறிப்படுத்தும் போது கட்சி அரசியல் சார்பற்ற ஒரு சிலரை செயற்குழுவாக நியமித்து அவர்கள் ஊடாக தீர்மானங்களை எடுத்தால் நல்லது என்று அபிப்பிராயப்படுகின்றோம்.

மத்திய குழு இன்றிருப்பது போல் தொடர்ந்து இருக்கும். எமது மத்திய குழு முன் போல காலத்திற்கு காலம் கூடும். ஆனால் எங்களுள் இருந்து ஒரு சிலரை செயற்குழுவுக்கு நியமிக்க உத்தேசித்துள்ளோம். இந்தக் குறைந்த தொகையினர் வேண்டும் போது மாதாமாதம் கூடலாம். மத்திய குழு அங்கத்தவர்கள் வேண்டும்போது தமது அறிவுரைகளை எமக்கு வழங்கலாம். ஆனால் இறுதித் தீர்மானங்கள் இந்த செயற்குழுவையே சாரும்.

நிர்வாகத் திறன் கருதியும், குறைந்தோர் கூடிய கெதியில் கூட முடியும், தீர்மானங்களை எடுக்க முடியும் என்ற காரணத்தாலும், தீர்மானங்களைக் கட்சி அரசியல் சார்ந்து எடுக்காமல் இயக்கத்தின் குறிக்கோள்களை மையமாக வைத்து எடுக்கவும் இந்த வழிமுறை பலனளிக்கும் என்று எண்ணுகின்றோம்.

கட்சி அரசியல் வேறு, அரசியலில் நாட்டம் வேறு. முடிந்த வரையில் அரசியலில் நாட்டமும் கட்சி அரசியலில் வெகுவாக ஈடுபடாதிருப்பவர்களையே செயற்குழுவில் நியமிக்கக்" கருதியுள்ளோம்.

எமது தேர்வு பின்வருவோரை உள்ளடக்கியுள்ளது. எங்களுள் 11 பேரை அடையாளங்கண்டுள்ளோம். தேர்தல்களுடனும் கட்சி அரசியலுடனும் வெகுவாக இணைந்த எமது சகோதர சகோதரிகளை நாம் செயற்குழுவிற்குள் சேர்க்கவில்லை. எங்கள் ஏற்பாட்டை எமது மத்திய குழு ஏற்றால்செயற்குழுவை இன்றே நியமித்து வேலைகளைத் தொடங்கலாம்.

எமது முதல் வேலையாக 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு திருகோணமலையில் பொதுமக்களுக்கு அரசியல் ஞானம் புகட்டும் கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தவுள்ளோம். எமது மக்களை ஒன்றிணைத்து அந்தக் கூட்டத்திற்கு கொண்டுவர நீங்கள் ஒவ்வொருவரும் உதவ வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் கூட்டத்திற்கு வருவீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மக்கள் பேரவை தொடர்ந்து எம் மக்களின் விமோசனத்தில் கரிசனை காட்ட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் ஒவ்வொருவரும் தாங்கள் மக்கள் சேவையில் எவ்வாறு இறங்க முடியும் என்று எமக்குத் தெரியப்படுத்தினால் நல்லது. உதாரணமாக எமது வைத்தியர்கள் ஒரு அரைநாள் இலவச வைத்திய முகாம் ஒன்றை நடத்த நடவடிக்கைகள் எடுக்கலாம்.

நாங்கள் வெறுமனே அரசியல் பேசுவதால் மக்களுக்கு நன்மை ஏற்படாது. அரசியல் ஞானமும் பொருளாதார நன்மைகளையும் அவர்கள் பெற வேண்டும். இதற்காக நாங்கள் ஒவ்வொருவரும் பாடுபடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காததால்

# நல்லாட்சி மீது நம்பிக்கையில்லை

## கனேடிய வெளியுறவு அமைச்சர் ஜெனிவாவில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நல்லாட்சி அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதாக, கனேடிய வெளியுறவு அமைச்சர் கிறிஸ்டியா ஃபிறிலண் (Chrystia Freelan) தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைப் பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடரின் நேற்று முன்தின அமர்வில் உரையாற்றும் போது கனேடிய வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் "மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மைத்திரி -ரணில் நல்லாட்சி அரசாங்கத்தின் மூன்று ஆண்டு கால ஆட்சியில் எதுவித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் ஏற்றுக் கொண்டு இணை அனுசரணை வழங்கிய பிரரேரனையின் பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

சமாதானம் - நல்லிணக்கம் - பொறுப்புக்கூறல் - அரசியல் தீர்வு உள்ளிட்ட பல உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்படுவது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## பிரதமர் ரணிலுக்கு எதிரான

# நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான சு.கவின் முடிவு நாட்டிற்கு சார்பாக அமையும்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாக ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முடிவானது நாட்டிற்கு சார்பாக அமையும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# சுதந்திரதின நினைவு முத்திரை வெளியீடு



(கொழும்பு)

70 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவு முத்திரையும் முதல் நாள் அஞ்சலுறையும் வெளியிடும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினதும் தபால் திணைக்களத்தினதும் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதனிடையே ஒலிம்பிக் பதக்கம் பெற்ற இலங்கையின் முதலாவது விளையாட்டு வீரரான டங்கன் வைட்டின் நூறாவது பிறந்த தினத்தையொட்டிய விசேட முதல் நாள் தபாலுறையும் இதன்போது வெளியிடப்பட்டது. விளையாட்டு வீரரான டங்கன் வைட்டின் நூறாவது பிறந்த நாள் மார்ச் முதலாம் திகதியாகும்.

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஜயந்த விஜேரத்ன மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினதும் தபால் திணைக்களத்தின தும் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)


## துயர் பகிர்வு

### திரு.சின்னத்தம்பி இராஜரட்ணம்



அரச முதியோர் இல்லம்-கைதடியில் தாதியாக கடமையாற்றும் திருமதி.கே.புவனலோஜினி அவர்களின் அன்புத் தந்தை சின்னத்தம்பி இராஜரட்ணம் அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(3076) உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், அரச முதியோர் இல்லம், கைதடி.


## இராசி பலன்

**மீனம்:** உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், மற்றவர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், போசன நண்மையுண்டு.

**மேடம்:** வாழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வப்படுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**இடபம்:** செய்தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| புத | | | |
| சூரி,சுக் | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம் அதிகாலை 4.40 மணிக்கு கன்னி-சந் | | சந் |
| சனி | குரு,செவ் | | |

**02.03.2018**

மாசி 18, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு

பூரணை காலை 7.02 மணிவரை

பிரதமை பின்னிரவு 5.36 மணிவரை

பூரம் முன்னிரவு 11.22 மணிவரை

சுபநேரம் 6.27-7.57 மணிவரை

இராகுகாலம் 10.57-12.27 மணிவரை

வளவன்

**கடகம்:** தூர தேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** வீண் பழிகள் அகல விரைவில் நடவடிக்கை எடுப்பீர்கள், தடைப்பட்ட காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணத்தால் பலனுண்டு.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், அந்நியர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்:** அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கன்னி:** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத சிறு சஞ்சலங்கள் தோன்றி மறையும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

# 'ஈழத்திலிருந்து சிரியாவுக்கு குரல் பொதுமக்கள் கொல்லப்படுவதை நிறுத்து'

## சிரியா படுகொலைக்கு எதிராக கிளிநொச்சியில் கண்டன கவனயீர்ப்பு



(பரந்தன்)

சிரியாவில் இடம்பெற்று வரும் இனப்படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு, கிழக்கு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந் நிலையில் சிரியாவில் இடம்பெற்று வருகின்ற இனப் படுகொலைகளை கண்டித்து கிளிநொச்சியிலும் நேற்றுக் காலை கண்டன கவனயீர்ப்புப்போராட்டம்ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் பத்து மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இளைஞர்களும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் இணைந்து சிரியா படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டன கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறிப்பாக சிரியாவில் குழந்தைகள் கொல்லப்படுவதற்கு எதிராக தங்களின் எதிர்ப்பை இவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

இதன்போது பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். ஐ.நாவே உனது கள்ள மௌனத்தைக் களை, ஈழத்திலிருந்து சிரியாவுக்குக் குரல், பொதுமக்கள் கொல்லப்படுவதனை நிறுத்து, சிரியாவின் குழந்தைகளுக்கு பாதுகாப்பு வழங்கு, 2009 முள்ளிவாய்க்கால், 2018 இல் சிரியா, போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் கண்டன கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர். (2-312)

**பொன்னகர் கிராமத்தில்**

# இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளில் பாரிய வெடிப்புக்கள்

## கூரைகளும் சேதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட 72 வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்து வரும் மக்கள் குடிநீர் வசதி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

இந்தக் குடியிருப்பில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகளைக்கொண்ட குடும்பங்கள் அதிகளவில் வாழ்ந்து வருவதுடன், தொழில் வாய்ப்புக்கள் இன்றி பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தமக்கு வழங்கப்பட்டிருக்கின்ற வீடுகள் மிகக் குறுகிய காலத்திற்குள் சேதமடைந்துள்ளன.

அதாவது, சுவர்களில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் கூரைகளும் சேதமடைந்துள்ளன.

தமக்கான வீடுகளும் காணிகளும் வழங்கப்பட்டு ஆறு வருடங்களைக் கடந்துள்ள போதும் காணிக்கான ஆவணங்களையும்வழங்கப்படவில்லை எனத்தெரிவித்துள்ளனர். (2-315)




# கேப்பாபிலவு மக்கள் ஜனாதிபதியுடன் சந்திக்க நடவடிக்கை தீர்வு இல்லையேல் வெகுஜன போராட்டத்துக்கு முடிவு

## ஒருவருட பூர்த்தியில் நேற்று அரைமணிநேரம் தியானம், கவனயீர்ப்பு

(பனிக்கன்குளம்)

கேப்பாபிலவு மக்கள் ஜனாதிபதியுடன் சந்திக்க நடவடிக்கை! தீர்வு இல்லையேல் மாபெரும் வெகுஜனப் போராட்டத்துக்கு முடிவு! ஒரு வருட பூர்த்தியில் இன்று அரைமணிநேர தியானம் மற்றும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுப்பு.



கேப்பாபிலவு பூர்வீக கிராமத்தை மீட்பதற்காக கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நில மீட்புப் போராட்டம் நேற்றை தினம் ஒரு வருடத்தை பூர்த்தி செய்து இரண்டாம் வருடத்தில் கால்பதித்த நிலை யில் போராட்டம் தொடர்கின் றது.

இந்நிலையில் தமது காணி விடுவிப்பு தொடர்பில் கலந்துரையாட நேற்று முற்பகல் 10 மணிக்கு அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களையும்மாகாண சபை உறுப்பினர்களையும் தமது போராட்ட இடத்துக்கு வருகை தருமாறு மக்கள் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்நிலையில் இவர்களது அழைப்பை ஏற்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான துரைவிகரன், ஆ.புவனேஸ்வரன் மற்றும் புதிதாக பிரதேச சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள சி.லோகேஸ்வரன், க.விஜிந்தன், க.தவராசா, இ.ரவீந்திரன் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இவர்களிடம் மக்கள் தமது போராட்டம் ஒருவருடம் கடந்த நிலையில் எமது போராட்டத்துக்காக அடுத்த கட்டம் தங்களது நடவடிக்கை தொடர்பில் வினவினர். இதன்போது வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த விடயம் தொடர்பில் மக்களையும் அழைத்து ஜனாதிபதியைச் சந்திக்க எதிர்க் கட்சி தலைவர் இரா.சம்பந்தன் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தற்போது தென் பகுதியில் நிலவும் அரசியல் குழப்பநிலை காரணமாக அதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் விரைவில் அந்த சந்திப்பை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு சாதகமான தீர்வுகளை கொண்டு வராவிடின் மாபெரும் வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்தவும் மக்கள் பிரதிநிதிகள் உடன்பட்டுக்கொண்டனர்

இதனைத் தொடர்ந்து மக்கள் தாம் போராட்டம் மேற்கொண்டுவரும் முல்லைத்தீவு பாதுகாப்பு படைக் கட்டளை தலைமையக வாயிலில் அமைக்கப்பட்டுள்ள கூடாரத்தில் அரைமணி நேரம் தியானம்மேற்கொண்டதோடு கூடாரம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

கேப்பாபிலவு மக்களுக்கு சொந்தமான காணிகளில் படையினர் அபகரித்துள்ள காணிகளில் பலகட்டமாக காணிகளை விடுவித்த அரசு இறுதியாக 133.4 ஏக்கர் காணிகள் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி மக்கள் முன்னிலையில் படைத்தரப்பில் இருந்து மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

குறித்த காணிகளுக்குள் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி மக்கள் சென்றனர்.

இந்நிலையில் இன்னும் தமது காணிகளில் விடுவிக்க வேண்டியுள்ள 104 குடும்பங்களுக்குச் சொந்தமான 181 ஏக்கர் காணிகளை விடுவிக்கும் வரை தமது போராட்டம் தொடருமென தெரிவித்த நிலையில் இந்தப் போராட்டம் நேற்றையதினம் ஒரு வருடத்தை நிறைவு செய்து இரண்டாவது வருடத்தில் காலடி எடுத்து வைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அங்கு கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன், கேப்பாபிலவு மக்களின் அகிம்சை போராட்டம் ஆண்டு ஒன்றினை கடந்துள்ள நிலையில் அரசாங் கத்தின் அராஜகம் ஆனது இன்னும் தீரவில்லை. அடக்கு முறைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என்பது இங்குள்ள வெகுஜன போராட்டங்களை மக்கள் தொடர்ந்து நடத்து வதில் இருந்து அறியமுடி கின்றது.

அராஜக போக்கை அரசு கைவிட்டுவிட்டு கேப்பாபிலவு மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும். அதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்தெந்த இடத்தில் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளதோ அவற்றையும் விடுவித்து மக்களுக்கான நியாயமான தீர்வுகள் கிடைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து வடக்கு விவசாய அமைச்சர் க.சிவநேசன் கருத்துத் தெரிவிக்கையில்,

தெற்கில் இருக்கின்ற மக்களின் பொருளாதாரப் பிரச்சினையையோ வடக்கு,கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினையினையோ தீர்க்க முடியாது பாரிய தோல்வி அடைந்துள்ளது நல்லாட்சி அரசு என அமைச்சர் தெரிவித்தார்.

கேப்பாபிலவில் வாழ்கின்ற அனைத்து மக்களின் காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும். இது அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையாகவுள்ளது.

இன்று எங்கள் நிலத்தினை நாங்களே விலை கொடுத்து வாங்குகின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம் என்பது மிகவேதனைக்குரிய விடயம். புனர்வாழ்வு அமைச்சினால் வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியினை படையினருக்குக் கொடுத்து விட்டு எங்கள் மக்களின் காணிகளை விலைக்கு வாங்கி விடுவிப்பது என்பது மிகவும் ஒரு பிழையான கருத்து என ஏற்கனவே 148 மில்லியன் ரூபா புனர் அமைச்சினால் வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்ட காணி தொடர்பில் இவ்வாறு கூறினார்.

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதன் ஊடாகத்தான் வெற்றி பெறமுடியும் என்றும் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவித்தார். (2-281)

# வட மாகாண கல்வி அமைச்சின் முழுநிலா கலைவிழா

(குருமன்காடு)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நேற்று முழுநிலா கலைவிழா இடம் பெற்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்கள் ரீதியாக இடம்பெற்று வரும் முழுநிலா கலைவிழாவின் மாசி மாதத்திற்கான நிகழ்வே வவு/ புதுக்குளம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது.

வவுனியா வடக்கு மற்றும் தெற்கு கல்வி வலயங்களின், கல்வி பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணனின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தார்.

இதன்போது வவுனியா வடக்கு கல்வி வலய மாணவர்களின் கலை நிகழ்வுகள், வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்திற்குச் சென்ற மாணவர்கள் மற்றும் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இந் நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஆர்.இந்திரராசா, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், ஏனைய வலய கல்விப்பணிப்பாளர்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். (2-250)

# இரணைமடு குளத்தின் நீரைப் பயன்படுத்தி

# 900 ஏக்கரில் நெற் செய்கை, 300 ஏக்கரில் சிறுதானியச் செய்கை

## கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் தற்போதுள்ள நீரின் அளவைக் கொண்டு 900 ஏக்கர் நெற்செய்கையும் 300 ஏக்கரில் சிறுதானியச் செய்கையும் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக நிலவிய கடும் வரட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களின் நீர் மட்டம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில் இரணைமடுக் குளத்தினுடைய நீர் மட்டம் 16அடி வரை காணப்படுகின்றது.

காலபோக அறுவடை நிறைவு பெற்றுள்ள நிலையில் இரணைமடுக் குளத்தின்தற்போதுள்ள நீரின் அளவைக்கொண்டு கடந்த ஆண்டு போல் குறிப்பிட்ட அளவு சிறுபோகச்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரனிடம் வினவியபோது. இரணைமடுக்குளத்தின் நீர் மட்டத்தை குளத்தின் பாதுகாப்பு நிலத்தடி நீர் என்பவற்றைக் கருதி 10அடி வரை பேணுவதாகவும் மீதமாகவுள்ள நீரைப்பயன்படுத்தி மகிழங்காடு கமக்கார அமைப்பிற்குட்பட்ட பகுதியில் 900 ஏக்கர் வரையான நிலப்பரப் பில் நெற்செய்கையை 300 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் சிறுதானியச் செய்கையும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்கின்ற நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதனால் கடந்த ஆண்டு போல விவசாயிகள் தமக்குத் தேவையான விதை நெல்லை உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்குமென தெரிவித்த அவர். இது தொடர்பானகலந்துரையாடல்ஒன்றை அடுத்த வாரத்தில் நடத்த விருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (2-315)

# மாணவர்களுக்கான பேருந்து சேவைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும்

## முல்லைத்தீவு சாலை நிர்வாகம் உறுதி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான பேருந்துச் சேவைகளை எதிர்காலத்தில் நடத்துவதாக இலங்கைப் போக்குவரத்துச்சபையின் முல்லைத்தீவு சாலை நிர்வாகம் உறுதியளித்துள்ளது.

முல்லைத்தீவுமாவட்டச் செயலகத்தில் கடந்த 26 ஆம்திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கரைதுறைப் பற்று பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட மாமூலை கயட்டைப் பிரதேசத்தில் 31 வரையான பாடசாலை மாணவர்கள் கால்நடையாக தினம் மும்முமுள்ளியவளை ரோ.க. தமிழ் வித்தியாலயம், மு/வித்தியானந்தாக்கல்லூரி, மு/கரைமகள் வித்தியாலயம், தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலைகளுக்கு கால்நடையாகச்சென்று கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்கான பேருந்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அந்தப்பகுதி மக்கள் கோரியிருப்பதாக கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலரினால் கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்று ஒருங்கிணைப்புக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கைப் போக்குவரத்துச்சபையின் முல்லைத்தீவு சாலை நிர்வாகம் பாடசாலை சேவைகளை நடத்துமாறு ஒனாதிபதி செயலகத்தினால் பணிப்புரை விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக பாடசாலைச் சேவைகளை இலங்கைப் போக்குவரத்துசபை முல்லைத்தீவு சாலை முன்னெடுக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)




## கிளிநொச்சி குளத்தின் அலைகரைப் பகுதிகளை எல்லையிட்டு

# மண் அணைகளை அமைப்பதன் மூலம் நில அபகரிப்பைத் தடுக்க முடியும்

## நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சிக் குளத்திதைப் புனரமைப்பதற்குரிய நிதி கோரப்பட்டிருக்கின்றது அது கிடைக்கும் பட்சத்தில் குளத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுமென நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள குளமாகவும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய இடமாகவும் இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கான குடிநீர் விநியோகத்திற்கான குடிநீரைப்பெற்றுக்கொள்ளும் இடமாகவும் காணப்படுகின்ற கிளிநொச்சிக் குளம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் குளத்தின் உட்பகுதி மண் நிரம்பிக்காணப்படுகின்றது.

இக்குளத்தைத் தூர்வையாக்கி புனரமைக்குமாறு மாவட்ட விவசாய சம்மேளனம், விவசாய அமைப்புக்கள் என்பன மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் கோரி வருகின்றன.

இதேவேளை இக்குளத்தின் சுற்றாடலைப்பாதிக்கும் வகையில் குப்பைகளைப் போடுதல், கழிவுப் பொருட்களைக் கொட்டுதல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன், குளத்தைச் சூழவுள்ள அலைகரைப் பகுதி மற்றும் இரத்தினபுரம் ஆற்றின் இரு புறமும் உள்ள காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இவ்விடயம் தொடர்பில், கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு வினவியபோது கிளிநொச்சிக்குளம் நகரத்தின் முக்கிய நீர்த்தேக்கமாகக் காணப்படுகின்றது.

இதனை ஆழமாக்கி புனரமைப்பதற்குரிய திட்டமுன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

அதற்கான நிதி இவ்வாண்டு கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் அதன் புனரமைப்பு பணிகளை முன்னெடுக்க முடியும். அத்துடன் இக் குளத்திற்குச்சொந்தமான காணிகள் அபகரிப்பதைத் தடுப்பதற்கு குளத்தின் அலைகரைப் பகுதிகளை எல்லையிட்டு மண்அணைகளை அமைப்பதன் மூலம் நில அபகரிப்புக்களை தடுக்க முடியும் என்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# வடக்கு மாகாணத்திற்கான பெண் நோயியல் வைத்தியசாலை கிளிநொச்சி வைத்தியசாலை வளாகத்தில் அமையப்பெறும்

(கண்டாவளை)


கிளிநொச்சி மாவட்டத்தில் அமையவுள்ள வடக்கு மாகாணத்திற்கான பெண் நோயியல்வைத்தியசாலையை தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற வகையில் கிளிநொச்சி வைத்தியசாலை வளாகத்தில் அமைக்கும் நோக்கில் நிதி வழங்குநர்களுடன் கலந்துரையாடுவதற்கான கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இதில்பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, த.குருகுலராஜா, வை.தவநாதன் மற்றும் அமைச்சின் செயலாளர், வைத்தியர்கள், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த புத்திஜீவிகள் எனப் பலர் கலந்து கொண்டு குறித்த வைத்தியசாலையை கிளிநொச்சி வைத்தியசாலை வளாகத்தில் பொருத்தமான இடத்தில் அமைப்பது என்றும் இதில் ஏற்படுத்தப்பட வேண்டிய சில மாற்றங்கள் தொடர்பில் நிதி வழங்கும் நிறுவனங்களுடன் கலந்துரையாடி குறித்த வைத்தியசாலை கிளிநொச்சியில் அமைப்பது என்றும் திடமான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன் கட்டுமானப் பணிகள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த வாரமும் நடைபெற்றதுடன், அது பற்றிய மற்றொரு கலந்துரையாடல் கடந்த 26ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைபெற்ற நிலையில் மேற்கண்டவாறு முடிவு எட்டப்பட்டது. (2-315)

## புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் நோயாளர், வைத்தியர் விடுதிகள் திறப்புவிழா

### சிரமதானப் பணி நேற்று முன்னெடுப்பு



(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டதையடுத்து இதற்கான வைபவ நிகழ்வும் புதிதாக அமைக்கப்பட்ட நோயாளர் விடுதி, வைத்தியர்களுக்கான விடுதி என்பனவற்றின் திறப்பு விழா நிகழ்வும் எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

இந்த நிகழ்வுகளை முன்னிட்டு வைத்தியசாலை அபிவிருத்தி சபையினரால் சிரமதானப் பணியொன்று நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்த சிரமதானப் பணி புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி ப.சுயானந்தரூபன் தலைமையில் நடைபெற்றது. (2)

# இலக்கண, இலக்கிய ஆய்வு கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

சமூக வலைத்தளங்களில் தமிழால் எழுதுவோரை செம்மையாக்கும் இலக்கண, இலக்கிய ஆய்வு கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் அஸ்திரம் மக்கள் நற்பணி மன்றத்தின் வவுனியா காரியாலயத்தில் கவிஞர் முல்லைத்தீவு வே.தீபனின் நெறியாள்கையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அஸ்திரம் இளைஞர் கழக தலைவர், நா.ஸ்ரீதரன், யுரேனஸ்இளைஞர் கழக தலைவர் சிர்ச மன், வெளி.சஞ்சிகை இதழாசிரியர், ந.அருளானந், அஸ்திரம் மக்கள் நற்பணி மன்ற செயலாளர், ந.கிருஷ்ணமூர்த்தி, பசுமை புரட்சி அமைப்பின் ஸ்தாபகர் ந.விநோதன், வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் சி.கபிலன், நேர்மையின் புகழிடம் அமைப்பின் விநோதினி,பாரதி இளைஞர் கழக தலைவர் கமல், மற்றும் தமிழ் ஆர்வம்கொண்ட இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது வளவாளர் முல்லைத்தீவு வே.தீபனால் வாசிப்பு திறனை மேம்படுத்தும் நோக்கில் ஒரு தொகுதி புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (2-28)

# இரு மாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டடம் அமைப்பு

(கண்டாவளை)

இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் ஒரு பகுதி காணியில் இரு மாடிகளை கொண்ட வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

போதிய இட வசதிகள் இன்றி இப் பாடசாலை இயங்கி வரும் நிலையில் 2017ஆம் ஆண்டு குறித்த பாடசாலைக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதியை இராணுவத் தினர் விடுவித்திருந்தனர்.

இதனையடுத்து மேற்படி காணியில் இரண்டு மாடிகளை கொண்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதியொன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை இதற்கு அண்மையாகவுள்ள விளையாட்டு மைதானக்காணி விடுவிக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டபோதும், தற்போது குறித்த மைதானத்தை இராணுவம் சுவீகரிக்கும் நோக்கில் துப்பரவுப்பணிகளை முன்னெடுப்பதாக பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (2-315)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# சாபமாகி வரும் யாழ்ப்பாணத்து வெளிகள்

கண்ணெதிரே நடக்கும் விபத்துக்கள், வீதியில் தினம் தினம் மரணித்துப் போயிருக்கும் பிராணிகள், அச்சத்தை மூட்டும் சாரதிகள் என கலவரத்துடனேயே கடந்து போகும் தினசரி வீதிப் பயணங்களில் மாறாமல் தினமும் காணும் காட்சியாக மாறிவிட்டது குப்பை கூழங்கள்.



வீதியோரங்களில் நிழலுக்காக மரங்கள், நடப்பட்டு வழிப்போக்கர்கள் இளைப்பாறி வந்தகாலம் ஒன்று இருந்தது. பல சந்ததிகளைப் பார்த்துவிட்ட ஆல.அரச மரங்களினால் பேருந்துத் தரிப்பிடங்கள் அடையாளம் காணப்பட்ட காலம் அது.

"அண்ணா ஆலடி இறக்கம்"

"அண்ணா அரசடி இறக்கம்"

என்று ஒலித்த சத்தங்கள் எல்லாம் "பெற்றோல் செட் இறக்கம், வெள்ளைரோடு இறக்கம்" என மாறிவிட்டது. பல உயிர்களுக்கு அடைக்கலமாகி பல சம்பவங்களின் அடையாளமாய் விளங்கிய மரங்கள் இன்று இருந்த அடையாளம் கூட இல்லாமல் போய் விட்டன. இவ்வாறு மரங்கள் அழிக்கப்பட்டதற்காக வருத்தப்படுவதா? நம் ஊர் முன்னேறி வருவதற்காக சந்தோசப்படுவதா? என சிந்திக்கும் முன்னமே புதிதாய் வீதியோரம் முளைத்து வரும் அடையாளச் சின்னங்கள் கண்முன் வருகின்றன.

என் வீடு, என் மாமன் வீடு, என் உறவு வீட்டு எல்லை தவிர்ந்த அனைத்தும் எனக்குத் தேவையற்றவை என்று மாறி விட்டது மனித மனம். இதனால் இப்பொழுதெல்லாம் அதுவே எம் அடையாளமாகியும் போய் விட்டது.

வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்குள் கட்டடங்கள் காணப்படாத அத்தனை வெளிகளும் கிட்டத்தட்ட குப்பைகளின் வீடுகள்தான். பொலித்தீன் பைகள், வீட்டுக்கழிவுகள் என விதைத்து விட்டிருக்கிறார்கள் எம்மவர்கள்.

சிறு வயதில் எப்பொழுதாவது அரிதாகக் கிடைக்கும் யாழ்ப்பாணப் பயணத்தில் வல்லை வெளிவருகுதாம் என்றதும் அம்மா மடியில் படுத்த நினைவு. "இரண்டு பக்கமும் கடல். நடுவில் சின்னதொரு பாதையால் பேருந்து போகும். சரியான பயம் என மறுநாள் நண்பர்களுடன் பெருமையாக அனுபவப் பகிர்வு மேற்கொண்ட நினைவு.

இன்று அதே ஆள் தான் இரண்டு பக்கமும் குப்பையை கிடக்குது நாய்கள் குப்பையிலே நிண்டுட்டு குறுக்கவரும். சரியான பயம். என்று பேசுகின்ற நிலை. ஏன் இப்படியொரு சாபம் எம் நிலத்திற்கு?

சிந்திக்க அறிவுசார் பின்புலம் இருந்தும் சிந்திக்க மறுக்கும் எம்மவர்கள்தான் வரமாய் கிடைத்தவற்றை சாபமாக்கி விட்டிருக்கிறோம்.

சிறியரக டிப்பர் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்களில் வந்து வீதியோரத்தில் வேகத்தை குறைத்து குப்பைகளை வீசி விட்டு செல்பவர்கள், அவற்றை கண்ணால் கண்டும் கேட்க திராணியற்ற என் போன்றவர்கள், இவற்றை துப்புரவாகப் பேண வேண்டிய பொறுப்பிலிருந்தும் கண்டு கொள்ளாமல் அல்லது நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் அதிகாரிகள் என அனைவரும் பொறுப்புக்கூற வேண்டியவர்களாகிறோம்.

எம் அனைவரினதும் மனச்சாட்சிக்கும் தெரியும் இது தவறு என்பதும் இதனை சீர்செய்ய வேண்டும் என்பதும். ஆனால் நடைமுறைப்படுத்துவது யார்? என்பதுதான் வினாக்குறி.

குப்பைகளை அல்லது குப்பை போடுபவர்களைக் கண்டதும் எம் மனத்தினுள் வெடிக்கும் புரட்சி பட்டாசு போல உடனே ஓய்ந்து விடுவதுதான் பரிதாபம். அந்த நொடிப்பொழுது உணர்வு சிறிது நாட்களுக்கு தாக்குப்பிடிக்குமாயின் மாற்றம் ஒன்றுக்கான அடித்தளம் ஆரம்பமாகலாம். ஆனால், அடுத்த நொடியே அடுத்தவேளை உணவுக்கு எம் மனம் தாவிவிடுகிறதே.

மனதைக் குறைகூறிக்கொள்ளுவோம். "குரங்குமனம்"

எம்மில்தான் எப்போதும் பிழையில்லையே.

ஒரு சிறிய மாற்றம் போதுமானது. வெளிகளை வெளிகளாகப் பார்த்தால் மட்டும் போதும். அதனை சூழவுள்ள இயற்கையும் வளங்களும் எமக்குரியவை எனப்பார்த்தால் போதும். எம் சொத்துக்களை நாம் பேணியாகத்தானே வேண்டும்.



இதெல்லாம் அரசாங்கத்தின் வேலை.... நகர மாநகர சபைகளின் என... வாசிக்கும் ஒருசாரார் முணுமுணுப்பது புரிகிறது. ஆனால், தவறு அவர்களிடம் மட்டும் இல்லையே. தவறுக்கான அடித்தளம் எம்மிடம் இருந்துதானே ஆரம்பமாகின்றது.

சிறந்த கழிவு முகாமைத்துவத்திற்கான திட்டம் நிர்வாகம் சார்ந்தோரிடம் இல்லை என்பது எந்தளவு



உண்மையோ அதே அளவு நாம் பொறுப்பற்றவர்களாக இருக்கிறோம் என்பதும் உண்மை.

ஒரு குறித்த பிரதேசத்தில் கழிவுகளை சேகரித்து வைக்க எம்மால் முடியுமானால் அதனை சேகரித்து அகற்றும்படி பொறுப்பில் உள்ளோரை கேட்கலாம். அதைவிடுத்து வெளியெல்லாம் நின்று பறந்து திரியும் பொலித்தீன் பைகளையும் தினமும் எறியப்படும் குப்பைகளையும் ஏந்துவது அவர்கள் பணி இல்லையே. அது நியாயமும் இல்லை.

வல்லை வெளியில் மட்டும் இந்நிலை இல்லை. யாழ்ப்பாணத்தின் அத்தனை பெருந்தெருக்களின் ஓரங்களும் சுமந்து நிற்கும் வேதனைதான் இது.

ஏற்கனவே காக்கைதீவை குப்பைகளுக்குத் சீதனமாகக் கொடுத்தாயிற்று. இன்னும் கொடுத்தால் தாய் வீடு தாங்காது.

இதற்கான தீர்வு ஆராய்ச்சிக் கட்டுரைகளில் பத்துபதினைந்து பக்கங்களில் வரையப்பட்ட கழிவு முகாமைத்துவ திட்டங்களில் தான் உள்ளது. கல்வியியலாளர்களால் மட்டுமே இதனை நடைமுறைப்படுத்த முடியும் என்பதெல்லாம் இல்லை.

உண்மையான கழிவு முகாமைத்துவம் தனியாள் நடத்தையில் ஆரம்பமாகின்றது. ஒரு வீட்டில் அடித்தளம் இடுவோம். அவ்வீடு எமதாய் இருக்கட்டும் என அனைவரும் நினைப்போம்.

பக்கத்து வீட்டைப் பார்த்து ஆடம்பரமாய் வாழத் துடிக்கும் மக்கள் இத்தனையும் பின்பற்றினால் போதும். ஒருவரிடமிருந்து ஒரு தெரு. ஒரு கிராமம் என பரவி விட்டால் போதும். நிச்சயமாய் இந்நிலைமாறும்.

இது ஒன்றும் கம்பசூத்திரம் அல்ல. சிறிய 1+1=2 கணக்குத்தான்.

சரியான வழியில் அகற்றப்படும் குப்பைகள் + சரியான இடத்தில் அகற்றப்படும் குப்பைகள் = சுத்தமான சூழல். அவ்வளவே.

தலைமைத்துவங்களை நம்பி நம்பி ஏமாந்து போனதெல்லாம் போதும். எம் நிலைமாறும் என வாய் வார்த்தையில் கூறி நம்பி வாழ்ந்ததெல்லாம் போதும். இது ஒரு சிறிய முயற்சி. எம்மை ஆரோக்கியமாய், பாதுகாப்பாய் வைத்துக் கொள்வதற்கான ஒரு பயணம். எம் சந்ததிக்கு நாம் பிறந்தபோது பார்த்த சூழலை அப்படியே வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு. இதற்கான சிந்தனை எம்மனதில் எழுந்தாலே போதும்... இல்லையெனில் நாளை



காலையில் உங்கள் வீட்டுக்குக்கு பக்கத்திலுள்ள வளவும் காக்கைதீவாய் மாறிப்போயிருக்கும், கார்ட்டூன்களில் காட்டப்படுவது போல தலைக்கு மேலே குப்பை வளர்ந்திருக்கும். விழித்துப்பார்த்து அதிர்ச்சியில் மாரடைப்பு வந்தால் நான் பொறுப்பல்ல...

...இது சிரிப்பதற்கானதும் அல்ல... சிந்தித்துச் செயற்பட வேண்டிய நேரம்!!!

**பா. ஷண்முகப்பிரியா**
செய்முறைக்காட்டுநர்,
இரசாயனவியற்றுறை,
விஞ்ஞானபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 205

1984 (Ninteen eighty four) என்ற நூலை எழுதிய நூலாசிரியர் யார்?

புதிர் 205 இற்கான விடைகளை 12.03.2018 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) சிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான
சங்கம்–பிரிவு A.
84,கல்லூரி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 204 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

யோ.விக்டர் அரவிந்தன்
வல்லை வீதி, தொட்டிலடி,
சங்கானை.

**புதிர் 204க்கான கேள்வியும் விடையும்:**

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள்-2018 எந்த நாட்டில். எந்த நகரத்தில் நடைபெறுகின்றன?

Pyeongchang, South Korea

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 205**

சரியான விடை:-..........................................

முழுப்பெயர்:-..........................................

முகவரி:-..........................................

தொ.பே. இல:..........................................

கையொப்பம்:..........................................

# இலங்கையில் மனிதவுரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்

## ஐ.நாவுக்கான அமெரிக்கத்தூதுவர் கத்தரின் வலியுறுத்து

(ஜெனிவா)

இலங்கை உள்ளிட்ட நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும் என்று ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் மேரி கத்தரின் வலியுறுத்தியுள்ளார்.



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடரில் நேற்று முன் தினம் உரையாற்றிய அவர், ஈரான் போன்ற மனித உரிமைகளை மீறும் நாடுகளை ஒரு விதமாகவும், இஸ்ரேல் விடயத்தில் பாரபட்சமாகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நடந்து கொள்கிறது என்றும் குற்றஞ்சாட்டினார்.

"ஏனைய உறுப்பு நாடுகளில் இருந்து இஸ்ரேலை வேறுபட்ட முறையில் கையாளுவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

இலங்கை, வடகொரியா, ஈரான், மியன்மார், தென்சூடான், சிரியா போன்ற நாடுகளில் மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பணியாற்ற வேண்டும்.

இலங்கை விடயம்போன்று, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் வலுவான தீர்மானங்களை நிறைவேற்ற ஒன்றாக முன்வரும் என்று அமெரிக்கா நம்புகிறது.

இலங்கை விடயத்தில் அவ்வாறு ஒன்றுபட்டிருந்ததால் முன்னேற்றங்களைச் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் உறுதியளித்தது" என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## புலிகளுக்கு நிதி உதவி வழங்கிய இரு அமைப்புக்களுக்கு அங்கீகாரம்

### பிரிட்டன் அரசு வழங்கியது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நிதி உதவி வழங்கியதாகக் கூறப்படும் பிரித்தானிய தமிழ் மன்றம் மற்றும் உலக தமிழ் மன்றம் என்பவற்றை பிரித்தானிய அரசாங்கம் உத்தியோகபூர்வ அமைப்புக்களாக அங்கீகரித்துள்ளது.

இந்த அமைப்புக்கள் இரண்டும் புலிகளுக்கு நிதி உதவி வழங்கியுள்ளமைக்கான தகவல்கள் முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தத்தின் பின்னர் கண்டெடுக்கப்பட்ட இரகசிய தகவல்களிலிருந்து தெரியவந்ததையடுத்து, மகிந்த அரசாங்கம் இந்த அமைப்புக்களை தடைசெய்திருந்தது.

இருப்பினும், தற்போதைய அரசாங்கம் இந்த அமைப்புக்கள் மீதிருந்த தடையை நீக்கியமையினால், பிரித்தானியாவின் பொதுநலவாய செயலகமும் இந்த அமைப்புக்களை அங்கீகரித்துள்ளது.

அத்துடன், நாட்டின்வெளியே தமிழீழ அரசு எனும் அமைப்பையும் பிரித்தானியா ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது. (இ-7)

## ஊடகப் பிரிவை சுத்தப்படுத்தும் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஊடகப் பிரிவில் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக (ஊடகம்) பதவி வகித்த நிமல் போபகே அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனையடுத்து ஊடகப் பிரிவின் ஆலோசகராக பணியாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.பீ.லலித் டி சில்வா பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

தனக்கு ஒதுக்கப்பட்ட எந்தப் பணிகளும் ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இல்லை எனவும் அங்கு இருப்பதில் பயனில்லை எனக் கூறி லலித் டி சில்வா, ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்ததுடன் அதற்கு அமையவே அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

லலித் டி சில்வா நுகேகொடையில் உள்ள ஹோட்டல் பாடசாலை ஒன்றின் உரிமையாளராவார்.

மேலும் ஜனாதிபதி ஊடகப் பிரிவில் புகைப்பட பிரிவு சம்பந்தமாகவும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அதில் பணிபுரியும் புகைப்பட ஊடகவியலாளர்கள் சம்பந்தமாக முஸ்லிம் அமைச்சர் ஒருவர் முறைப்பாடு செய்ததை அடுத்து ஜனாதிபதி புகைப்படப் பிரிவு குறித்து கவனம் செலுத்தியுள்ளார்.

போபகே ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் (ஊடகம்) பதவியில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து, அந்தப் பதவிக்கு சரத் சந்திரசிறி என்ற அரச அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## 50 இலட்சம் ரூபா பணத்துடன் விமான நிலையத்தில் இருவர் கைது

(கொழும்பு)

50 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பணத் தொகையினை டுபாய் நாட்டிற்கு கொண்டு செல்ல முயற்சித்த 2 பேர் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களிடம் இருந்து வெளிநாட்டு நாணயத் தாள்கள் உட்பட இலங்கை நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது சிலாபம் மற்றும்கொழும்பு பிரதேசத்தினைச் சேர்ந்த 45 வயது மற்றும் 47 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## தலைமைத்துவ பயிற்சியின் போது அதிபர் மரணம்; 11 அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை!

(கொழும்பு)


தலைமைத்துவப் பயிற்சி வழங்கும் நிகழ்வின் போது, அதிபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக 11 அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு அதிகாரிகள் அவர்களது பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அதிபர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான சுய ஒழுக்கம் மற்றும் தலைமைத்துவப் பயிற்சிக்கான நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வின் போதே அம்பாந்தோட்டை சுச்சி தேசிய பாடசாலையின் அதிபர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தையிட்டி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள புனித அன்னை வேளாங்கண்ணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஊறணி புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினை சேர்ந்த கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் ILO நிறுவனத்தின் அனுசரணையுடன் 14 பயனாளிகளுக்கு 6 இலட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ ILO நிறுவனத்துடன் இணைந்து குறிப்பிட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் அரச அலுவலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். (இ-7)

## அம்பாறையில் ஏற்பட்ட கலவரம் காரணமாகவே சட்டம் ஒழுங்கு அமைச்சு கைமாறுவதில் தாமதம்

### அமைச்சர் கிரியெல்ல விளக்கம்

(கொழும்பு)

அம்பாறையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாகவே சட்டம், ஒழுங்கு அமைச்சு கைமாற்றப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சட்டம், ஒழுங்கு அமைச்சுக்குப் புதிய அமைச்சர் நியமனம் தொடர்பாக ஊடகமொன்று முன்வைத்த கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவி என்பது ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சுப் பதவி. அந்தப் பதவியை யாருக்கு வழங்குவது என்பதை ஐக்கிய தேசியக் கட்சியே தீர்மானிக்கும்.

அம்பாறையில்ஏற்பட்ட இனக்கலவரத்தை கட்டுப்படுத்துவதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரடியாக தலையிட்டதன்காரணமாகவே அமைச்சுப் பதவியை கைமாற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் அடுத்த வாரம் சட்டம், ஒழுங்கு தொடர்பான அமைச்சுக்குப் புதிய அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் அமைச்சர் கிரியெல்ல மேலும் தெரிவித்தார். (இ-7)



கொக்குவில் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த திங்கட்கிழமை கல்லூரி மைதானத்தில் அதிபர் எம்.ஞானசம்பந்தன் தலைமையில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ். திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி நி.சுகுமாரி கலந்து கொண்டார். (படங்கள்:-ஈச்சமோட்டை செய்தியாளர்)

# பாரதம்

## ஸ்டாலினை கண்ணிமை போல் பாதுகாப்பேன் -வைகோ உறுதி



(சென்னை)

கருணாநிதியை பாது காத்தது போல மு.க.ஸ்டாலினை கண்ணின் இமை போல பாதுகாப்பேன் என்று வைகோ தெரிவித்துள்ளார்.

தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாழ்த்தரங்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, வேப்பேரி பெரியார் திடலில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது.

தி.மு.க. இளைஞரணி மதுரையில் ஆரம்பிக்கப்பட்ட போது நான் மு.க.ஸ்டாலினுடன் இருந்திருக்கிறேன். அவரது பேச்சை அன்றில் இருந்தே ரசித்திருக்கிறேன். இன்று நான் உறுதி தருகிறேன். 29 வருடங்களாக கருணாநிதியை ஒரு துரும்பு கூட படாமல்பாதுகாத்தேனோ, அதேபோல மு.க.ஸ்டாலினையும் கண்ணின் இமை போல பாதுகாப்பேன்.

தி.மு.கவுடன் வைகோ கரம்கோர்த்து உள்ளானே? ஏதேனும் உள்நோக்கம் இருக்கலாமோ? என்று அனைவரும் யோசிக்கிறார்கள். எந்த பதவி ஆசையும், பண ஆசையும் எனக்கு இல்லை.

என்நேர்மை உலகு அறிந்தது. தான் அணிந்திருந்த கவசத்தை தர்மத்துக்காக கர்ணன் அவிழ்த்தான். ஆனால் எந்த சூழ்நிலையிலும், எதற்கும் என் நேர்மை எனும் கவசத்தை அவிழ்க்க மாட்டேன்.

தி.மு.கவை அழிக்க பா.ஜ.க. வஞ்சக திட்டம் தீட்டி வருகிறது. திராவிட இயக்கத்தை வேரோடு அழிக்க பார்க்கிறது. இதை நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது.

எங்களது முழு பலத்தையும் தி.மு.கவுக்கு கொடுத்து களத்தில் இறங்குவோம். திராவிடத்தை வெல்ல எந்த முயற்சிக்கும், எந்தவித சக்திகளுக்கும் அனுமதி தர மாட்டோம். தமிழகத்தில் இலட்சியங்கள் வெல்ல, தர்மம் நிலைக்க தி.மு.க. ஆட்சிக்கு வரவேண்டும். முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவி ஏற்கப்போகும் அந்த நாள் வெகு தொலைவில் இல்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## பெங்களூர் சிறையில் சசிகலாவிற்கு சிறப்பு சலுகை இலஞ்சம் வாங்கிய அதிகாரிகளிடம் விசாரணை



(பெங்களூர்)

பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் சசிகலாவுக்கு சிறப்பு சலுகைகள் அளிக்கப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதுகுறித்து அப்போதைய சிறைத்துறை டிஐஜி ரூபா, கர்நாடக அரசிற்கு அறிக்கை தாக்கல் செய்து இருந்தார். இந்நிலையில் முங்கப்பாட்டில் சிறை அதிகாரிகள் 2 பேர் மீது விசாரணை நடத்த ஊழல் தடுப்பு பொலிஸாருக்கு கர்நாடக அரசு உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் உச்சநீதிமன்றத்தால் 4 ஆண்டு சிறைத்தண்டனை பெற்ற சசிகலா மற்றும் இளவரசி ஆகியோர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்கள். சிறையிலிருந்து வெளியே கடைக்குச் சென்று வருவது போன்ற வீடியோ காட்சிகள் வெளியாகி சமூக வலைத்தளங்களில் பரபரப்பை ஏற்படுத்தின.

சிறை அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றதாக சிறைத்துறை அதிகாரி ரூபா தமது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சசிகலாவுக்கு சலுகைகள் வழங்கப்பட்டது தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட வினய்குமார் கமிட்டியின் பரிந்துரைகளின் அடிப்படையில் இலஞ்சம் வாங்கியதாக ரூபாவால் குற்றம் சாட்டப்பட்ட இரண்டு அதிகாரிகளின் மீது வழக்குப் பதிவு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

தமது அறிக்கை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று ரூபா தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமை மனுவில் அரசுத்தரப்பு பதிலில் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. (10)

## சீனாவில் N ற்கு NO

(பீஜிங்)

சீனாவில் ஆங்கிலம், மாண்டரின் ஆகிய இரு மொழிகளிலும் 'என் (N)' என்ற எழுத்தை பயன்படுத்த அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

சீனாவில் மக்கள் அரசுக்கு எதிராக சில வார்த்தைகள் பயன்படுத்தக்கூடாது என கூறி ஆங்கிலம், மாண்டரின் ஆகிய இரு மொழிகளிலும் 'என் (N)' என்ற எழுத்தை பயன்படுத்த அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

சீனா அரசு 'என் (N)' என்ற எழுத்தை பயன்படுத்த தடை விதித்துள்ளது. 'என் (N)' என்ற எழுத்து வரும் எந்த வார்த்தையும் பயன்படுத்த கூடாது என அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலம் மட்டுமல்லாது, சீன மொழியான மாண்டரினிலும் 'என் (N)' என்ற எழுத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், சீன இணையத் தளங்களில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளில் பல வார்த்தைகள் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்த தடை நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது. அரசுக்கு எதிராக எந்த கருத்தும் எழக்கூடாது என்ற நோக்கத்தில் இந்த தடை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இந்த தடை மக்களின் கருத்து சுதந்திரத்துக்கு முற்றிலும் எதிரானது என கூறப்படுகிறது.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் பெயரில் 'என் (N)' என்ற எழுத்து இரண்டு முறை இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## இரசாயன ஆயுதங்கள் ...

## ஐ.நாவுக்கான சிரிய தூ...

(டமாஸ்கஸ்)

இரசாயன ஆயுதங்கள் எங்களிடம் இல்லை .அல் நுஸ்ரா மற்றும் டேஷ் போன்ற பயங்கரவாத குழுக்களே இத்தகைய ஆயுதங்களை வைத்திருப்பதாகவும் சிரியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜெனிவாவில் ஐ.நாவுக்கான சிரிய தூதுவர் ஹுசம் எடின் ஆலா நேற்றுமுன்தினம் புதன்கிழமை கருத்துத் தெரிவிக்கையில்,


இதன்போது, இரசாயன ஆயதங்கள் மற்றும் நச்சு வாயுக்களை சிரியா எங்கு வேண்டுமானாலும் யார் மீதும் பயன்படுத்தலாம் என்ற கருத்தை கண்டனம் செய்வதாக தெரிவித்துள்ள அவர், சிரிய அரசாங்கம் மீதான இரசாயன ஆயுத பயன்பாடுகள் குற்றச்சாட்டுக்களையும் மறுத்துள்ளார்.

அனைத்து இரசாயன ஆயுதங்களையும் சிரிய அரசாங்கம் அதன் கட்டுப்பாட்டிலிருந்து அகற்றிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சியாளர்களின் முற்றுகைக்குட்பட்ட சிரியாவின் கிழக்கு



## போலிக் கடவுச்சீட்டில் சுற்றுப்பயணம் வடகொரிய ஜனாதிபதி விசா மோசடி



(லண்டன்)

மேற்கத்தேய நாடுகளில் விசா பெற வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் பிரேசில் கடவுச்சீட்டைப் பயன்படுத்தியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

உலகில் மிகவும் ஆபத்தான ஜனாதிபதியாக வடகொரியாவின் ஜனாதிபதி ஜிம் ஜாங் உன் கருதப்படுகிறார். உலக அரங்கில் தனிமையான தலைவராக அறியப்படும் ஜிம் ஜாங் உன் மேற்கத்திய நாடுகளில் பயணம் செய்ய பிரேசில் நாட்டு போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி உள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

ஜிம் ஜாங் உன் மற்றும் அவருடைய தந்தை கிம் ஜாங் 1990-களில் மேற்கத்திய நாடுகளில் பயணம் செய்ய போலியான பிரேசில் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி உள்ளனர் என உயர்மட்ட பாதுகாப்பு வட்டார தகவல்கள் வெளியிட்டுள்ளன. அவர்கள் பயன்படுத்திய போலி கடவுச்சீட்டின் புகைப்படங்களும் வெளியாகியுள்ளன.

போலி கடவுச்சீட்டு விவகாரம் அவர்களுடைய பயணத்திற்கான ஆர்வத்தை காட்டுகிறது எனவும் வட கொரியாவில் ஆட்சி செய்யும் குடும்பம் தப்பிக்கும் வழியையும் மேற்கொண்டுள்ளது எனவும் தெரிகிறது என தகவல் வெளியாகி உள்ளது.

பிரேசில் நாட்டில் உள்ள வட கொரியா தூதரகம் இது தொடர்பாக கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது. பிரேசில் வெளியுறவுத்துறை இது தொடர்பாக விசாரிக்கப்பட்டது என தெரிவித்துள்ளது.

போலி கடவுச்சீட்டுக்கள் மூலம் இரண்டு மேற்கத்திய நாடுகளில் விசாவிற்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது என மேற்கு ஐரோப்பிய பாதுகாப்பு வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன.

விசா வழங்கப்பட்டதா என்பது தொடர்பாக தெளிவின்மையே நீடிக்கிறது. பிரேசில், ஜப்பான் மற்றும் ஹொங்கொங்கிற்கு பயணம் மேற்கொள்ள போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தியுள்ளனர்.

கடந்த 1991 ஆண்டு சிறுவனாக ஜிம் ஜாங் உன் பிரேசில் கடவுச்சீட்டுடன் ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டதாக 2011இல் ஜப்பான் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது.

இருவருக்கும் வழங்கப்பட்ட போலி கடவுச்சீட்டில் பிரேசில் நாட்டின் ஸோ போலோவில் பிறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. (10)



# வெளிநாடு


## ...ள் எங்களிடம் இல்லை
## ...தூதுவர் திட்டவட்டம்



ஹௌட்டாவில் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான மோதல்களில் தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக நெதர்லாந்து டென்ஹாக் நகரில் அமைந்துள்ள உலக இரசாயன ஆயுத கண்காணிப்பு குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் சிரியா சார்பில் மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இரசாயன ஆயுதங்கள் மீதான சர்வதேச தடை ஒப்பந்தத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு சிரியா கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது. (10)



## பட்டினியால் வாடும் சிரிய சிறார்கள்



(டமாஸ்கஸ்)

சிரியாவில் இடம்பெற்று வரும் கொடிய போரும் அதனால் அப்பாவி மக்கள் அனுபவித்துவரும் துன்பங்களும் உலகமக்களின் மனச்சாட்சியை உலுப்பியுள்ள போதும் இன்னமும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கூட சென்றடையவில்லை என்ற செய்தியும் அதனால் அப்பாவி சிறுவர்கள் உட்பட பலரும் பட்டினியில்வாடும்அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகிவுள்ளன.

இந்நிலையில்.சிரியாவில் 30 நாட்கள் போர் நிறுத்தம் மேற்கொள்ள ஐ.நா.பாதுகாப்பு அவை கடந்த சனிக்கிழமையன்று வாக்களித்த பின்னர். போர் நடைபெறும் பகுதிகளில் இன்னும் ஒரு நிவாரணம் மற்றும் உதவிப் பொருளைக்கூட கொண்டு சேர்க்க முடியவில்லை என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

உணவு மற்றும் மருந்துப் பொருட்களை நிரப்பிக் கொண்டு, பாதிக்கப்பட்ட பத்து பகுதிகளுக்குள் நுழைய சரக்கு வாகனங்கள் சனிக்கிழமை முதலே காத்திருப்பதாகவும், குறித்த இடங்களில் போர் இன்னும் நீடிப்பதால் அவற்றை தேவைப்



படுபவர்களிடம் கொண்டு சேர்க்க முடியவில்லை என்றும் ஐ.நாவின் அவசரகால உதவிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் மார்க் லோகாக் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் எப்போது அமுலுக்கு வரும் என்றும் அவர் பாதுகாப்பு அவையிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

உதவிப் பொருட்களை வழங்குவதற்காக தினமும் ஐந்து மணிநேரம் போர் நிறுத்தம் மேற்கொள்ளலாம் என்று சிரியா அரசுக்கு ஆதரவாக போரிட்டு வரும் ரஷ்யா ஏற்கனவே தெரிவித்திருந்தது.

ரஷ்யா கூறும் ஐந்து மணி நேர போர் நிறுத்தம் அமலுக்கு வந்தாலும், மக்களுக்கு உதவிப்பொருட்களை வழங்கவும் மீட்புப் பணிகள் மேற்கொள்ளவும், அந்த நேரம் போதாது என்றும் பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு முறையான சிகிச்சையளிக்க போதுமான மருந்துகள் இல்லாததால் பலர் உயிரிழப்பதாக மார் லோகாக் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## அமெ.உயர்மட்ட இரகசியங்களை பாதுகாத்த ட்ரம்ப் மருமகன் குஷ்னர் அந்தஸ்து குறைப்பு



(வோஷிங்டன்)

வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் மருமகன் ஜேரட் குஷ்னரின் அந்தஸ்து திடீரென குறைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் மருமகன் ஜேரட் குஷ்னர் (வயது 37). இவர். ட்ரம்பின் மகள் இவான்கா ட்ரம்பின் கணவர் ஆவார்.

ட்ரம்ப் வெற்றி பெற்று ஜனாதிபதி ஆன பிறகு அவருக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ட்ரம்பின் மூத்த ஆலோசகராக அவர் நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றார். ஜேரட் குஷ்னர், மத்திய கிழக்கு நாடுகளின் சமாதான நடைமுறைகளை கவனித்து வருகிறார். இப்போது திடீரென அவரது அந்தஸ்து குறைக்கப்பட்டுள்ளது. அதற்கான குறிப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை உயர்மட்ட அளவிலான இரகசிய அறிக்கைகள் அவரது பார்வைக்கு அளிக்கப்பட்டு வந்தன. இப்போது அது நிறுத்தப்பட்டு உள்ளது. அவரது பின்னணி பற்றிய பரிசோதனைகள் இன்னும் முடிவு பெறாததே இதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேரட் குஷ்னரின் அந்தஸ்து குறைக்கப்பட்டாலும் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதிக்கு உரித்தான சிறப்பு அதிகாரத்தைக் கொண்டு அவர் தகுதியானது என கருதுகிற எந்த ஒரு இரகசியத்தையும் அவருடன் பகிர்ந்துகொள்ள முடியும்.

அந்தஸ்து குறைப்பு நடவடிக்கை குறித்து ஜேரட் குஷ்னரின் சட்டத்தரணி அப்பே லோவெல் கருத்து தெரிவிக்கையில்,

ஜேரட் குஷ்னரின் அந்தஸ்தை குறைத்து இருப்பது, ஜனாதிபதி அவருக்கு ஒதுக்கித் தருகிற எந்த ஒரு பணியையும் செய்கிற திறனை பாதிக்காது என தெரிவித்துள்ளார். (10)

## ரயிலிலிருந்து கழன்று சென்ற பெட்டிகள் சரக்கு ரயிலுடன் மோதியதில் 15 பேர் பலி



(கெய்ரோ)

எகிப்து நாட்டின் பெஹேய்ரா மாகாணத்தில் பயணிகள் ரயிலில் இருந்த இரண்டு பெட்டிகள் தனியே கழன்று சரக்கு ரயிலில் மோதியதில் 15 பயணிகள் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்து நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள பெஹேய்ரா மாகாணத்தில் பயணிகள் ரயிலில் இருந்த இரண்டு பெட்டிகள் தனியே கழன்று பக்கத்து தண்டவாளத்தில் சென்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியதில் 15 பயணிகள் உயிரிழந்ததுடன் 40 பேர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

எகிப்தில் உள்ள ரயில் போக்குவரத்தில் பாதுகாப்பு நடைமுறைகள் சரியாக கடைப்பிடிக்கப்படுவது இல்லை என பயணிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு இதே போன்ற ரயில் விபத்தில் 42 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## மைனஸ் 12 டிகிரியில் பனிப்பொழிவு உறைந்துபோன விமான ஓடுதளம்



(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளில் பெய்துவரும்வரலாறுகாணாத பனிப்பொழிவினால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது. இங்கிலாந்து மற்றும் அயர்லாந்தில் மைனஸ் 12 டிகிரிக்கும் கீழ் குளிர் நிலை பதிவாகியுள்ளது. லண்டனில் பனிப்பொழிவு உச்சக் கட்டத்தை அடைந்ததால் வீதிகளில் பல அடி உயரத்திற்கு பனித்துகள்கள் கொட்டிக் கிடக்கின்றன. இதனால் வாகனம் மற்றும் ரயில் போக்குவரத்து கடும் பாதிப்பை சந்தித்துள்ளது. ஸ்கொட்லாந்தில் உச்சக் கட்டமாக 40 செ.மீ. அளவுக்கு பனி ஏரிகளாக மாறியுள் ளன. ஸ்கொட்லாந்தின்கிளாஸ்கோ விமான நிலையத் தில் கொட்டித் தீர்த்த பனிப் புயலால் விமான ஓடுதளம் முழுவதும் வெறும் பனிமாயமாக காட்சியளிக்கிறது. ஏராளமான விமானங்கள் இரத்து செய்யப்பட்டதால் ஆயிரக்கணக்கான பயணிகள் விமான நிலையத்திலேயே காத்து கிடக்கின்றனர். (10)

# பதின்ம வயதுப் பெண் போன்று இலங்கை தொடர்பில் இந்திய அரசாங்கம் தவறான புரிதல்களைக் கொண்டிருந்தது

## மகிந்த ராஜபக்ஷ பெங்களூரில் விசனம்

(பெங்களூர்)

இலங்கையில் துறைமுகங்களைக் கட்டவோ, நெடுஞ்சாலைகளை அமைக்கவோ இந்தியா ஆர்வம் காட்டவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திருப்பதி ஏழுமலையான் ஆலயத்திற்குச் சென்ற மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் அதிகாலை வழிபாடுகளை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பியுள்ளார்.

இந் நிலையில் பெங்களூர் விமான நிலையத்தில் 'த ஹிந்து' செய்தியாளருக்கு சீனாவின் திட்டங்களின் மீது அதிகரித்துள்ள ஆர்வம் குறித்து அளித்துள்ள செவ்வியில்,

"துறைமுகங்கள், நெடுஞ்சாலைகளை அமைக்கும் பணிகளை முதலில் நாங்கள் இந்தியாவுக்கே வழங்கினோம்.

ஆனால், அம்பாந்தோட்டையில் துறைமுகத்தை அமைக்க அவர்கள் ஆர்வமாக இருக்கவில்லை. போர் நடந்து கொண்டிருந்த நேரம் என்று நினைக்கிறேன்.

வேறென்ன செய்வது? நாங்கள் சீனாவிடம் சென்றோம். இதனைப் பற்றிக் கூறினோம். அந்தத் திட்டத்தை அவர்கள் உடனடியாகவே ஏற்றுக் கொண்டார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அது ஒரு வணிக பரிமாற்றம் மட்டுமேயாகும்.

அவர்களுக்குத் தெரியும் இதனை எப்படித் திருப்பிச் செலுத்துவார்கள் என்று. எமக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முக்கியத்துவம் தெரியும்.

துரதிர்ஷ்டவசமாக தற்போதைய அரசாங்கம் எல்லாவற்றையும் விற்றுவிட்டது. எமது கொள்கை தனி



யார் மயமாக்கலுக்கு எதிரானதாக இருந்தது. தற்போதைய அரசாங்கம் 99 ஆண்டு குத்தகைக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்று விட்டது.

இந்தியாவுடன் எனது நாடு நல்ல உறவைக் கொண்டிருக்கிறது. ஆனால் அவர்கள் கடந்த காலங்களில் எம்மைப் பற்றி தவறான புரிதல்களைக் கொண் டிருந்தனர்.

இந்தியா ஒரு பதின்ம வயது பெண் என்று ஒரு இந்தியத் தூதுவர் எனக்குக் கூறினார், ஏனென்றால், பதின்ம வயதுப் பெண்கள் தவறான புரிந்தல்களைக் கொண்டிருப்பார்கள். இதனைக் கூறியவர் இந்தியாவின் முன்னாள் தூதுவர் நிருபமா ராவ்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை சிறந்ததாக இருந்த அதேவேளை, சில விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது" என்றும் அவர் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# மகேந்திரனை இலங்கை அழைத்து வரும் எந்தத் தேவையும் ரணிலுக்கு இல்லை



## ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை நாட்டிற்கு அழைத்துவர பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எந்தவித தேவையும் இல்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனயின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# லசந்த விக்கிரமதுங்க கொலை விவகாரம் முன்னாள் பொலிஸ்மா அதிபரை கைதுசெய்ய இடைக்காலத் தடை

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை வழக்கு தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்னவை கைது செய்வதை தடுத்து உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்கால தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

முன்னாள் பொலிஸ்மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

முன்னாள் பொலிஸ்மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த மனு மீதான விசாரணை முடிவடையும் வரை இந்த இடைக்கால தடை உத்தரவு அமுலில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வசீம் தாஜுடீனின் கணனிகளை பரிசீலிக்க நீதிமன்றம் உத்தரவு



(கொழும்பு)

ரக்பி வீரர் வசீம் தாஜுடீன் பயன்படுத்திய லப்டொப் கணனி மற்றும் டெஸ்க்டொப் கணனி என்பவற்றிலுள்ள தரவுகளைப் பரிசீலனை செய்து அறிக்கையொன்றை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் சாந்தனி டயஸ் அரச இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோதே அவர் இதனைக் கூறியுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

## தேவையற்ற பொய்கள்

ஒரு நன்மை நடக்கும் என்றால் பொய் கூட உண்மையாகக் கருதப்படலாம் என்று வள்ளுவரே "லைசன்ஸ்" தந்துவிட்டார். அதற்காக ஒன்றுமில்லாத விடயங்களுக்கெல்லாம் பொய் சொல்ல வேண்டுமா என்ன?

ஊரிலிருந்து எப்ப வந்தே, எப்படி வந்தே? என்று ஒருவர் கேட்டால் இன்றைக்குக் காலையிலேதான் வந்தேன். ரயிலிலே முதல் வகுப்பில வந்தேன் என்று உடனே ஒரு பொய்யைத் திணிக்கிறவர்கள் உண்டு. முதல் வகுப்பில் வந்ததாகச் சொன்னால்தான் இவருடைய மதிப்பு உயருமாம்.

பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்பார்கள். தாங்களே முரண்பாடாக தகவல்களை அளித்து வலிய மாட்டிக் கொள்கிறவர்கள் அதிகம்.

பொய் சொல்ல சாமர்த்தியம் நிறைய வேண்டும். தவறு! சொன்ன பொய்யை இறுதிவரை மறைக்க நிறைய சாமர்த்தியம் வேண்டும். நம்மில் பலருக்கு இது இருப்பதில்லை.

பொய்யைச் சொன்னால் என்ன பொய் சொன்னோம் என்பதை நன்றாக நினைவில் வைத்திருக்க வேண்டும். பொய் சொல்வதற்குக் கற்பனை வளம் நிறைய வேண்டும். எந்தக் கோணத்திலிருந்து அணுகினாலும், எத்தனை கேள்வி கேட்டாலும் சிக்கிக் கொள்ளாதபடி அந்தப் பொய்யைக் காப்பாற்ற வேண்டும். இந்த மூன்று திறமைகளும் நம்மில் பலருக்குப் போதுமான அளவு இருப்பதில்லை. எனவே சிக்கிக் கொண்டு அவமானப் படவோ அல்லது ஏற்படுத்திக் கொண்ட நல்ல அபிப்பிராயத்திலிருந்து படுபாதாளத்திற்குப் போய் விழவோ தயாராக வேண்டும். இது தேவையா?

தன்னைப் பற்றிய நல்லெண்ணத்தை மற்றவர்களிடம் உருவாக்குவதற்கு ஒருவன் ஒரு பொய் சொல்கிறான் என்றால் அதன்மூலம் அவனைப் பற்றி ஒரு 10 மதிப்பெண்கள் உயரலாம். ஆனால் உண்மை வெளிப்படுத்துகிறபோது 50 மதிப்பெண்களோ அல்லது அதற்கும் கீழோ குறைத்து விடுகின்றன என்பதே உண்மை.

இந்த உலகத்திடம் ஓர் இயல்பு உண்டு. எல்லாவற்றையும் எல்லோரையும் சந்தேகப்படுவது என்பதே அது. இந்தக் கண்ணோட்டத்தில் உண்மையை நம்பவைக்கவே நாம் படாதபாடு படவேண்டும் என்கிற போது பொய்யை எப்படி நம்ப வைப்பது?

பொய்களால் விளையும் நன்மைகள் மிகக் குறைவு. இதற்காகக் கஷ்டப்பட்டுச் சேமித்த நல்ல பெயரை நாம் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்பது மகா முக்கியம்.

நம்மைப் பற்றி நாம் தெளிவாக இருக்கிறோமோ இல்லையோ இந்த உலகம் தெளிவாக இருக்கிறது. இவனோ அண்டப்புளுகனாச்சே! அவனா! அவன் வாயைத் திறந்தால் பொய்யைத் தவிர வேறு எதுவும் வராதே! இவனா? சின்ன சின்ன பொய் நிறைய சொல்வானே! என்றெல்லாம் தெளிவாக எடை போட்டு வைத்திருக்கிறது. இந்த அபிப்பிராயங்களை மெல்ல மாற்ற முயற்சி செய்ய வேண்டுமே தவிர இவன் மாறவே இல்லை என்கிற அபிப்பிராயத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கக் கூடாது.

லேனா தமிழ்வாணன்

# பொலிஸாரால் கைது செய்யப்பட வேண்டியவருக்கு பொலிஸ் அமைச்சு- ரணில் மீது அநுர குற்றச்சாட்டு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்வதற்குப் பதிலாக தேர்தலுக்குப் பின்னர் நடைபெற்றதோ வேறொன்று என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட வேண்டிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சை தன்னிடம் எடுத்துக் கொண்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தற்பொழுது நாட்டில் ஒரு வகையான அராஜக நிலையொன்று உருவாகியுள்ளது. தேர்தல் முடிவடைந்து 3 வாரங்கள் ஆகியுள்ள நிலையில் உள்ளூராட்சி சபையை நிறுவ முடியாமல் போயுள்ளது. நாட்டில் அரசாங்கமொன்று இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கத்திலுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் குழுவும், மைத்திரிபால சிறி சேனவின் குழுவும் தமது அதிகார போட்டிக்காக ஒரு வரையொருவர் குற்றம் சாட்டிக் கொள்கின்றன. இது சிலபோது ஆவேசமாக மாறி விடும். சிலபோது பொது அரசியல் மேடைக்கு வந்து விடும்.





தேர்தல் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கும் போது ஐ.தே.க.வுடன் இணைய மாட்டோம் என்றனர். தேர்தலின் பின்னரும் பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை விலக்குவதாக ஜனாதிபதி கூறிவந்தார்.

இவ்வாறு பதவி விலக்குவதற்குரிய பிரதமருக்கே தற்பொழுது அவரிடம் இருந்த பதவிக்கும் மேலதிகமாக ஒரு பதவியையும் வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த இரு குழுக்களும் மக்களின் தேவையை நிறைவு செய்வதற்குப் பதிலாக தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதிலேயே முனைப்போடு உள்ளதாகவும் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தேசிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு 100 கடன் திட்டங்கள் முன்மொழிவு

## அரச வங்கிகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி பணிப்பு



(கொழும்பு)

தேசிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வியாபாரிகளை வலுவூட்டும் இணைந்த 100 கடன் முன்மொழிவுத் திட்டங்களை உள்ளடக்கிய விரிவான நிகழ்ச்சித்திட்டமொன்றை இன்னும் சில மாதங்களில் நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் அரச வங்கிகளின் தலைவர்களுக்கு பணிப்புரை வழங்கினார்.

அரச வங்கிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்தார்.

தேசிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், வர்த்தகர்களை வலுவூட்டி நாட்டின் தேசிய கைத்தொழில் துறையில் புத்தெழுச்சியை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும். இன்னும் சில மாதங்களில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டம் குறித்த அறிக்கையொன்றை எதிர்வரும் இரண்டுவார காலப்பகுதியில் தனக்கு சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி நிதி அமைச்சிடம் தெரிவித்தார்.

அரச வங்கிகளினூடாக ஈட்டப்படும் இலாபங்கள் எவ்வளவு தூரம் மக்களைச் சென்றடைகின்றது என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டுமெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, குறித்த நன்மைகள் பொருளாதார செயன்முறையில் சாதாரண மக்களையும் தொழில் முயற்சியாளர்களையும் சென்றடைவதற்கான திட்டங்கள் அவசியமாகும் என்றும் தெரிவித்தார்.

இந்த கடன் முன்மொழிவு முறைமை தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு விரிவான பிரசார நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுக்கவேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி விளக்கினார். பெரும்பாலான தொழில் முயற்சியாளர்கள் முகங்கொடுத்துள்ள முக்கிய பிரச்சினையாக அமைவது கடன் பெற்றுக்கொள்கின்ற போது விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளும் பிணை ஆவணங்கள் தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகளுமாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, கடன் பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகள் மற்றும் பிணை ஆவணங்களை குறைந்த மட்டத்தில் பேணி அசௌகரியங்களின்றி தொழில் முயற்சியாளர்கள் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பின்புலத்தை ஏற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

வேலையற்ற பட்டதாரிகளை தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் நோக்குடன் விசேட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். அரசியல் பேதங்களின்றி இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் நன்மைகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, இந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது கிராம சேவகர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார்.

அரச வங்கிகள் மக்கள் நட்புடையவையாக இருக்க வேண்டும் என்பதுடன் கடன் பெற்றுக்கொள்வதற்கு அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வருகின்ற பொது மக்களுடன் மிகவும் சுமுகமாக செயற்பட்டு அவர்களது தேவைகளை நிறைவேற்றுவது குறித்து பணிக்குழாமினரைத் தெளிவுபடுத்துமாறும் ஜனாதிபதி அரச வங்கிகளின் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

இலங்கை அரச வங்கிகள் வர்த்தகமயப்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால் சமூகப் பிரச்சினைகளை அறிந்து கொள்ளுதல் மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான கடனை வழங்குதல் என்பன சிறந்த அளவில் பேணப்படுவதில்லை எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி உள்ளிட்ட நிதி அமைச்சின் கீழுள்ள அரச வங்கிகளினூடாக தேசிய, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்காக தற்போது நடைமுறைப்படுத்தும் கடன் முன்மொழிவு முறைமை தொடர்பாக விபரங்களை கேட்டறிந்த ஜனாதிபதி, தொழில் முயற்சியாளர்கள் மேற்கொள்கின்ற முன்மொழிவுகளைக் கருத்திற் கொண்டு இக்கடன் முன்மொழிவு முறைமையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அமைச்சர்களான மங்கள சமரவீர, லக்ஷ்மன் கிரியெல்ல, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரவீந்திர ஹேவா விதாரண, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, தேசிய பொருளாதார சபையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் லலித் சமரகோன் ஆகியோரும் அரச வங்கிகளின் தலைவர்கள், பணிப்பாளர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

# சுகாதார அமைச்சை ஏற்க மனமின்றி கண்ணீர் வடித்தார் மைத்திரிபால

## அமைச்சர் ராஜித தகவல்

(கொழும்பு)

கடந்த 2010 ஆம் ஆண்டு அமைச்சரவையில் மைத்திரி சுகாதார அமைச்சை ஏற்க மனமின்றி கண்ணீர் வடித்ததாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.



தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித, 2010ஆம் ஆண்டு அமைச்சரவை நியமனத்தின் போது எனக்கு மீன்பிடி அமைச்சு கிடைத்திருந்தது. அதில் எனக்கு அறவே விருப்பமிருக்கவில்லை.

அதேபோன்று சுகாதார அமைச்சைப் பொறுப்பேற்க மைத்திரிபால சிறிசேனவுக்கும் விருப்பமிருக்கவில்லை. அவர் கலங்கிய கண்களுடன் காணப்பட்டார். மறுபுறத்தில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் ஜோன் செனவிரத்ன உள்ளிட்டவர்களும் அவ்வாறான நிலைப்பாட்டிலேயே காணப்பட்டனர். எவருமே தாங்களுக்கு கிடைக்கப்பெற்ற அமைச்சுப் பதவி குறித்து திருப்தியுடன் காணப்படவில்லை. ஆனால் அவர்கள் அனைவருமே எனக்கு சிறந்த அமைச்சுப் பதவி கிடைத்துள்ளதாக வாழ்த்தினார்கள். அதுபோன்றே ஒவ்வொரு அமைச்சரவை மாற்றத்தின் போதும் ஒருசிலர் ஏமாற்றமடைவது நடக்கவே செய்யும். எதிர்பார்த்தது கிடைக்காமல் போனால் அந்த ஏமாற்றத்தை சிலரால் தாங்கிக் கொள்ள முடியாது. அமைச்சரவை மாற்றங்கள் பலவற்றுக்கு முகம் கொடுத்தவன் என்ற வகையில் அந்த அனுபவம் எனக்குண்டு என்றும் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். (இ-7)

# நஸ்பி- நாமல் சந்திப்பு



(லண்டன்)

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரான லோட் நஸ்பியை. நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சந்தித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் லண்டனில் இடம்பெற்று வருகின்றது.

இதில் பங்கேற்றுள்ள போது, குறித்த இருவருக்கும் இடையில் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

லோட் நஸ்பி எப்போதும் இலங்கையின் உண்மையான நண்பன் என்றும், முக்கியமான தருணங்களில் அவர் இலங்கைக்கு ஆதரவாக இருந்தார் என்றும் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது 7 ஆயிரம் பேரளவிலேயே கொல்லப்பட்டதாக லோட் நஸ்பி அண்மையில் தகவலொன்றை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசில் சட்டம் ஒழுங்கு அமைச்சை ஏற்கும் தகுதி யாருக்கும் இல்லை

(கொழும்பு)

நல்லாட்சியில் சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு எவருக்கும் தகுதிகள் கிடையாது. ஏனெனில் நிர்வாகத்தின் பிரதானியான பிரதமர் மீது தற்போது பாரிய இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு பகிரங்கமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகத்தின் முக்கிய நபரின் ஆட்சியில் இடம் பெற்றுள்ள பாரிய மோசடிகள் வெறுமனே மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தப்படுவது மாத்திரமே தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

குறித்த குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளும் சுயாதீனமாக மேற்கொள்ளப்படுகின்றதா? என்ற பாரிய சந்தேகம் தற்போது மக்கள் மத்தியில் எழுந்துள்ளது என ஐக்கிய சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் கபில கமகே தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவை மாற்றத்தில் சட்டம், ஒழுங்கு அமைச்சு பதவி பாரிய சவால்களுக்கு உட்பட்டதாக காணப்படுகின்றமை தொடர்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 350 பொலிஸாருக்கு இடமாற்றம்

(ஏறாவூர்)

வருடாந்த இட மாற்றத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சுமார் 350 பொலிஸார் நாட்டின் இதர பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.ஜே.ஜாகொட ஆராச்சி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஜனவரி மாத ஆரம்பம் தொடக்கம் இந்த வருடாந்த இடமாற்றம் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் நடைபெற்று முடிந்து உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டிருந்ததன் பின்னர் இந்த இடமாற்றம் தற்போது உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த வார இறுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் மேலும் கூறினார்.


மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நகரப் பிரதேசங்களான மட்டக்களப்பு நகரம், ஏறாவூர், வாழைச்சேனை, காத்தான்குடி உள்ளிட்ட மாவட்டத்திலுள்ள 12 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய சுமார் 350 இற்கு மேற்பட்ட பொலிஸார் வழமையான இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆண், பெண் அதிகாரிகளான பிரதான பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் சார்ஜன்ட், பொலிஸ் உத்தியோகத்தர்கள் வரை இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் இதர பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய அதே எண்ணிக்கையிலான பொலிஸார் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பெரிய நீலாவணையில் மினி சூறாவளி

## மக்கள் தவிப்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை சுனாமி தொடர்மாடி குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீசிய மினி சூறாவளி காரணமாக வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெரிய நீலாவணை சுனாமி தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தில் வீசிய மினி சூறாவளி காரணமாக வீட்டுத்திட்டத்திலுள்ள மேற்கூரைகள் பறந்து சிதறி கீழே விழுந்துள்ளதுடன் அப்பிரதேசத்தில் மின்சாரமும் தடைப்பட்டுள்ளது.

வீட்டுத்திட்டத்திலுள்ள மக்கள் மிகுந்த அச்சத்துடன் இருப்பதுடன் பலர் அங்கிருந்து உறவினர், அயலவர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு திடீரென வீசிய மினி சூறாவளி காற்றே இந்த அனர்த்தத்திற்குக் காரணமாகும்.

இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்குமிடம், மின்சாரம், குடிநீர் இல்லாமலும் சமைத்துண்ண முடியாமலும் நிர்க்கதியான நிலையில் உள்ளனர்.

சுனாமியாலும் வேறு அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட சுமார் 500 குடும்பங்கள் இந்த குடியிருப்புக்களில் வசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் ஏற்பட்ட அனர்த்தத்தால் இந்த குடியிருப்புக்களின் மூன்றாவது மாடி கூரைகள் பெரும் சேதமடைந்துள்ளதுடன் வீட்டின் உள்ளே இருந்த வீட்டுத் தளபாடங்களும் சேதமடைந்துள்ளதுடன் இவ்வீடுகள் கூரையில்லாது உள்ளதால் மழைகாலம் என்பதாலும் இம்மக்கள் திருத்தும் வரை அங்கு வசிக்க முடியாத நிலையே தற்போது காணப்படுகிறது. (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1344

Search for people, places and things    Nagendram    Home

### பிரியா


கோவில் உண்டியலில் கோடி கோடியாய் கொட்டுவதை விட



அநாதைக் குழந்தைகளுக்கு வயிறார ஒருவேளை உணவளியுங்கள்

### தர்மா

கணவனின் மூளை | மனைவியின் மூளை



### ரவிசங்கர்

வாழ்வின் ஒவ்வொரு முறையும்... உங்களைத் தூக்கி எறிந்தவர்களுக்கு நன்றி சொல்லுங்கள் அவர்கள் தான் உங்களை முளைக்கச் செய்தவர்கள் - விதைகள்



### தாமிரா

கல்லூரி காலம் வரை மட்டுமே நாம் நினைத்த மாதிரி வாழ முடியும்...



அதன்பிறகு வாழ்க்கை நினைத்தமாதிரித்தான் நாம வாழமுடியும் என்பதே கசப்பான உண்மை!!!


### தன்யா




நம்ம காதலிச்ச பையன் நல்லா இருக்கானும் தான் பல பெண்கள்... வீட்டில பார்க்கிற பையனையே கல்யாணம் பண்ணிக்கிறாங்க

### சாருகேஷ்

பெண்களுக்கு கரடி பொம்மை பிடிக்கிற அளவுக்கு



கரடி கலர்ல இருக்கிற பசங்கள ஏன் பிடிக்க மாட்டேங்குதுன்னு தெரியல

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இந்து ஆலயங்கள் சேதப்படுத்தப்படுவதை தடுத்து நிறுத்தக்கோரி நல்லூரில் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இந்து ஆலயங்கள் உடைத்துச் சேதமாக்கப்படும் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தக் கோரி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர்க் கந்த சுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஆதீன முதல்வர்கள், துறவிகள் முன்னிலை வகிக்க சைவ ஆலயங்களின் பரிபாலன சபையினர், தர்மகத்தா சபைகள் ஒன்றிணைந்து கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இப் போராட்டத்தின் நிறைவில் வடமாகாண முதலமைச்சரிடம் நேரில் சென்று மகஜர் கையளிக்கப்படவுள்ளதுடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு வடமாகாண ஆளுநர் ஊடாகவும் இந்து கலாசார அமைச்சருக்கு இந்து கலாசார திணைக்களப் பிரதிநிதி ஊடாகவும் மகஜர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. தாய் மதத்தை, மனிதத்தை மதிக்கும் சகலரும் இதில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 10வது வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 10 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக மண்டபத்தில் வீ.எஸ்.வீரசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அதில் விருந்தினர்களாக உதவி பிரதேச செயலர் எஸ்.ரஜீவ் , செயலக கணக்காளர் எஸ்.சிவரஞ்சன், யாழ். மாவட்ட ப.சே.ஓ.ந.நி.தலைவர் பி. கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)





யாழ். சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் ஆரம்பப்பிரிவு விளையாட்டு விழா நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் அதிபர் நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ஆர்.உதயரத்னம், கௌரவ விருந்தினராக பழைய மாணவர் எஸ்.புவிராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தாக்குதல்களுக்கு இலக்கான இந்து ஆலயங்களுக்கு நட்டஈடுகளை வழங்கி அரசாங்கம் புனரமைக்க வேண்டும்

## யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் மாநகர சபைக்குட்பட்ட ஏ-9 வீதியும் செம்மணி வீதியும் இணைக்கும் சந்தியில் மிகப் பழைமையானதும் காலாகாலமாக பிரசித்தி பெற்று விளங்கும் பிள்ளையார் கோவிலையும் அக்கோவிலில் வீற்றிருந்த இந்துக்களின் முதற்கடவுளாக விளங்கும் பிள்ளையார் சிலையினையும் கடந்த 23.02.2018 ஆம் திகதி அன்று விஷமிகளால் இடித்துச் சேதமாக்கியமை மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

அதேபோன்று மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இவ்வாறான மோசமான செயல்கள் இந்துக்களின் உரிமைகளையும் மதச் சுதந்திரத்தையும் பாதிப்படையச் செய்கிறது. எமது நாட்டின் அரசியல் யாப்பின் பிரகாரம் ஒவ்வொரு நபர்களும் அவரவர் மதங்களின் அனுஷ்டானங்களை ஏற்று நடப்பதற்கு ஜனநாயக உரிமையுள்ளது. அதனடிப்படையில் விஷமிகளின் இவ்வாறன செயற்பாடுகள் மனித உரிமை மீறுவதாகவே உள்ளது.

மேற்படி விஷமிகளின் செயல்களினால் மதங்களுக்கிடையிலும், இனங்களுக்கிடையிலும் நிலவிவரும் நல்லெண்ணம் புரிந்துணர்வு . சட்டத்தை மதிக்கும் செயற்பாடுகளுக்கு குந்தகத்தை விளைவிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. இவ்வாறான கீழ்த்தரமான அருவருக்கத்தக்க மிலேச்சத்தனமான செயல்கள் நாகரிக உலகில் நடக்கக்கூடிய விடயங்களாக கருத முடியாது.

இச்சம்பவங்கள் போன்று கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுபவர்கள் பொலிஸாரால் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அத்தோடு ஆலயங்களைப் பாதுகாக்கும் கடமை அரசாங்கத்திற்கே உள்ளது. அதனை அரசாங்கம் சமீப காலங்களில் முறையாகச் செயற்படுத்தத் தவறியுள்ளது. மேற்படி தாக்கப்பட்ட ஆலயத்திற்கான நட்டஈடுகளை வழங்கி ஆலயங்கள் புனரமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென யாழ் மாவட்ட சர்வமத பேரவை வலியுறுத்தியுள்ளது. (இ)

## விஸ்டத்தின் வெற்றி விழா நாளை

(யாழ்ப்பாணம்)

விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்று க.பொ.த.(உ/த) பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் விஸ்டத்தின் வெற்றி விழா நாளை 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியின் சபாலிங்கம் அரங்கத்தில் விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் க.ரவிக்குமார் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக தொழில்நுட்ப பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினரும் தமிழ்த்தேசியபசுமை இயக்கத் தலைவருமான பொ.ஐங்கரநேசன், கௌரவ விருந்தினராக யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் சதா.நிமலன் ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-7)

## உடுவிலில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் தென் மேற்கு ஜே/182 மற்றும் உடுவில் மத்தி ஜே/184 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்டவர்களுக்கான நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை மல்வம் ஞானப்பிரகாசர் சனசமூக நிலையத்தில் இடம்பெறும். இந்த நடமாடும் சேவையில், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலக எல்லையில் வசிக்கும் அனைத்து மக்களும் தங்களுடைய வீடுகள், கடைகள், காணிகள் உட்பட்ட ஒவ்வொரு ஆதனமும் பிரதேசசபை ஆதனப்பதி வேட்டில் தங்களது பெயரில் பதியப்பட்டுள்ளதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

ஆதனப் பதிவேட்டில் தங்களது பெயரில் தங்களது ஆதனம் இல்லாமல் இருந்தால் தங்களுடைய பெயருக்கு மாற்றிக் கொள்வது அவசியமானதாகும். தங்களது ஆதனம் வேறு ஒருவரது பெயரில் இருந்தால் அதற்கு பிரதேச சபை பொறுப்பாக மாட்டாது என்பதுடன் தங்களுடைய பெயருக்கு மாற்றுவதற்காக குறிப்பிட்ட ஆதனம் தங்களுடையது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை தாங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

தங்கள் ஆதனங்களுக்குரிய ஆதனவரியை செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

தங்களது ஆதனம் சம்பந்தமான முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும். வியாபார உரிமம் சம்பந்தமான முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும்.

வியாபார உரிமம் சம்பந்தமான சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-10)



அம்மன் அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் அதிபர் வே.பரமேஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மருதங்கேணி பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிவகுப்பை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் பிரதம விருந்தினர் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- கரணவாய், பொற்பதி செய்தியாளர்கள்)

## விளையாட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு கிடையிலான விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் காரைநகர் பிரதேச செயலர் ஈ.தாயளுபன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி நா.கமலரூபன், கௌரவ விருந்தினர்களாக பிரித்தானிய காரைநகர் நலம்புரிச் சங்கத்தலைவர் ப. தவராஜா, யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கே. விஜிதரன், காரைநகர் சக்தி கல்வி மேம்பாட்டு நிலைய இயக்குநர் நா. இந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

## வழிகாட்டல் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

வேலும்மயிலும் பவுண்டேசன் நிறுவனத்தினரால் போட்டிப் பரீட்சையை எதிர்நோக்கியிருப்போருக்கான இலவச வழிகாட்டல் வகுப்புகள் நேற்று வியாழக்கிழமை முதல் இடம்பெற்றுள்ளது.

முகாமைத்துவ உதவியாளர், முன்பள்ளி ஆசிரியர் போன்றவற்றுக்கான போட்டிப் பரீட்சையை எதிர்நோக்கியிருப்போருக்கான வழிகாட்டல், உளச்சார்பு மற்றும் நுண்ணறிவு வகுப்புக்களும் முன்மாதிரிப் பரீட்சைகளுமே வடமராட்சிப் பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற ஆசிரியர்களால் வியாழக்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

இவ் இலவச வகுப்பில் இணைய விரும்புவோர் 021 226 1933 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அஷ்ரப்பின் மரண விசாரணை அறிக்கையின் பிரதி தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் மரணம் தொடர்பிலான இறுதி விசாரணை அறிக்கையின் பிரதி, தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத்திணைக்களம் ஜனாதிபதி செயலகத்திடம் வழங்கியிருந்த அறிக்கையை ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் லக்ஷ்மி ஜயவிக்ரம கடந்த செவ்வாய்க்கிழமை ஆணைக்குழுவிடம் ஒப்படைத்துள்ளார்.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழுவின் அறிக்கையை கோரி தகவல் அறியும் ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தகவல் அறியும் ஆணைக்குழுவின் நான்காவது விசாரணை அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அஷ்ரப் மரண விசாரணை அறிக்கை குற்றப்புலனாய்வுப் பிரிவு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் விமானப்படை ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதன் பிரதியை யாவது பெற்றுத்தருமாறும் தகவல் அறியும் ஆணைக்குழுவின் உறுப்பினரும் ஓய்வுபெற்ற நீதியரசருமான ரோஹினி வெல்கம கடந்த அமர்வின் போது சுவடிகள் திணைக்களத்திற்கு கூறியிருந்தார்.

அதன்படி, அறிக்கையை வழங்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கடந்த 5 ஆம் திகதி ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கடிதம் ஒன்றின் மூலம் கோரியிருந்தார்.

பின்னர் கடந்த 14 ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அந்த அறிக்கையை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பியுள்ளது.

அவ்வாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் வழங்கியிருந்த மர்ஹூம் அஷ்ரப்பின் மரணம் தொடர்பிலான விசாரணை அறிக்கையை ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர், தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் நேற்று ஒப்படைத்ததாக முறைப்பாட்டாளர்கள் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி ஏ.எல். மொஹமட் ஆசாத் நியூஸ்பெஸ்டிற்குத் தெரிவித்தார்.

2003 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் மேலதிக செயலாளர் W.J.S. கருணாரத்ன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பியிருந்த அறிக்கையின் பிரதியே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் பிரதியை இன்று வெள்ளிக்கிழமை முறைப்பாட்டாளர்களுக்கு வழங்குவதாக கடந்த 27ஆம் திகதி அறிவிக்கப்பட்டதாக தேசிய சுவடிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி நதீரா ரூபசிங்க தெரிவித்தார்.

எனினும், எம்.எச்.எம். அஷ்ரப்பின் மரண அறிக்கையின் இறுதி அறிக்கை தமது திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லையென அவர் குறிப்பிட்டார்.

சாதாரணமாக விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானால் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் தமது திணைக்களத்திற்கு அதன் பிரதி அனுப்பப்பட வேண்டும் என தேசிய சுவடிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

எனினும், இந்த சம்பவத்தில் அவ்வாறு இடம்பெறவில்லையென அவர் சுட்டிக்காட்டினார்.


2000 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி கொழும்பிலிருந்து அம்பாறை நோக்கி பயணித்த இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் அரநாயக்க பகுதியில் வெடித்துச் சிதறியதில் எம்.எச்.எம். அஷ்ரப் உள்ளிட்ட 14 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

அதன் பின்னர், தலைவர் அஷ்ரப்பின் மரணம் தொடர்பில் விசாரணை செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் 2001 ஆம் ஆண்டு ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 16 வருடங்களுக்கு மேலாக அந்த ஆணைக்குழுவின் கண்டறிதல்கள் எதுவும் பொதுமக்களுக்கு வெளியிடப்படவில்லை.

இந்தப் பின்புலத்திலேயே 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி 3 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தகவல் அறியும் சட்டத்தின்படி ஆணைக்குழுவின் அறிக்கையைப் பெற்றுத்தருமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளர் பஷீர் சேகு தாவூத் மற்றும் சர்ஜூன் ஜமால்டீன் ஆகியோர் கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கரை ஒதுங்கிய டொல்பின்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளைக் கடற்கரையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை சிறிய டொல்பின் ஒன்று உயிருடன் கரை ஒதுங்கியுள்ளது. இதனை அவதானித்த கடற்கரையில் நின்ற இளைஞர்கள் டொல்பினைப் பிடித்து மீண்டும் கடலில் விட்டுள்ளனர். (இ-7)

# அம்பாறை அடாவடிக்கு சம்பந்தன் கண்டனம்

(கொழும்பு)

அம்பாறை வன்முறைச் சம்பவத்தின் குற்றவாளிகளுக்கெதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.



அதேவேளை இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதனை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாறையில் முஸ்லிம்களுக்கு எதிராக ஏற்பட்ட வன்முறைச் சம்பவம் தொடர்பாக அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனது அறிக்கையில், "கடந்த காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றதனையும் அத்தகைய ஏற்றுக்கொள்ள முடியாத நடவடிக்கைகளினால் ஏற்பட்ட பாதக விளைவுகளையும் நாம் அனுபவித்திருக்கின்றோம்.

எனவே நான் பொலிஸாரிடமும் ஏனைய அதிகாரிகளிடமும் இத்தகைய சம்பவங்களுக்கு எதிராக பாகுபாடின்றி சட்டத்தினை அமுல்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தப் பிரதேசங்களிலே சமாதானமும் அமைதியும் பேணப்படுவதனை சமயத் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டுமென நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இச்சம்பவங்களின் நிமித்தம் கடும்போக்காளர்களின் கைகள் ஓங்காமல் இருப்பதனை உறுதி செய்யுமாறும் வேண்டிக்கொள்கிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டும் வகையில் அமைதியைக் கடைப்பிடித்து நடந்துகொள்ளுமாறு அம்பாறை மற்றும் ஏனைய பிரதேசங்களிலுள்ள மக்களிடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

பிரிவினையை உருவாக்கும் வகையில் இத்தகைய விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோர் மக்களிடையே இன முறுகலைத் தோற்றுவிக்கும் வகையிலான நடவடிக்கைகளில் இருந்து விலகி நிற்க வேண்டுமென நான் வற்புறுத்த விரும்புகின்றேன்" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# பள்ளிவாசல் மீது தாக்குதல் இதுவரை ஐந்து பேர் கைது

## உணவு மாதிரிகள் இரசாயன பகுப்பாய்வுக்கு

(கொழும்பு)

அம்பாறை நகரில் ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் 5 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த வன்முறைக்கு வந்த குழுவினரை அடையாளம் காண பிரதேசத்தின் பல முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கண்காணிப்பு கமரா பதிவுகளை பெற்று அதனை ஆராய்ந்து வரும் சிறப்பு பொலிஸ் குழு, சம்பவத்தின் போது சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்புக்களை மையப்படுத்தியும் சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் தொலைபேசி பகுப்பாய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து அந்த அறிக்கையினை பெறவும் அதனை மையப்படுத்தி மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவும் பொலிஸார் நீதவானின் அனுமதியையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர விசாரணைகளை முன்னெடுக்க வேண்டிய கோணங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகளை தெளிவுபடுத்தியுள்ள நிலையில் கிழக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கபில ஜயசேகர, மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெதசிங்க ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சமந்த டி விஜேசேகரவின் நேரடி கட்டுப்பாட்டில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

நேற்று முன்தினம் மாலை வரை இடம்பெற்ற விசாரணைகளில் 30 க்கும் மேற்பட்ட முக்கிய வாக்கு மூலங்களைப் பெற்றுள்ள பொலிஸார், பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக தொடர்ந்தும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து செயற்படுவதாக பிரதேசத்தின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் தாக்குதலுக்குள்ளான பள்ளிவாசல் நேற்று முன்தினம் மீண்டும் தொழுகை நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டதுடன் பள்ளிவாசலின் பாதுகாப்புக்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வன்முறை சம்பவங்களின் பின்னணியில் இருந்து செயற்பட்டோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனைகளையும் பெற உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் தொடர்கின்றன. (இ-7)

# பட்டதாரிகள் நியமனத்தில் எவ்வித அநீதியும் இழைக்கவில்லை

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள பட்டதாரிகள் நியமனத்தில், எவ்வித அநீதியும் இழைக்கப்படவில்லையென, கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ.ஜீ.திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, "நான் அறிந்தவரை, நியமனத்தில் அநீதிகள் இடம்பெறவில்லை. நீதியின் பக்கமே நான் நிற்கின்றேன். அதனால் நியமனம் வழங்கும் விடயத்தில், யாரும் அதிருப்தியடையத் தேவையில்லை.

"கிழக்கு மாகாண சபையால், 2017ஆம் ஆண்டு 1,440 பேருக்கு நியமனம் வழங்குவதற்கு அனுமதி கிடைத்தது. அதில் தமிழ் மொழி மூலமாக 1,050 பேருக்கு அனுமதி கிடைத்தது. சிங்கள மொழியில் 390 பேருக்கு நியமனம் வழங்க அனுமதி கிடைத்தது.

"இதில் முதற்கட்டமாக 958 பேருக்கு, தமிழ்மொழி மூலமாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சிங்கள மொழியில் 169 பேருக்கும், மொத்தமாக 1,127 பேருக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

"இதனையடுத்து, இரண்டாம் கட்டமாக, நாளை 3ஆம் திகதி, சிங்கள மொழி மூலமாக 222 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளதுடன், தமிழ்மொழி மூலமாக 91 பேருக்கு என, மொத்தமாக 313 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

"ஒன்பதாம் இடத்தில் காணப்படும் கிழக்கு மாகாண கல்வித்துறையை மேம்படுத்தும் நோக்கிலே, அதிகளவில் பற்றாக்குறையாகக் காணப்படும் பாடசாலைகளுக்கே, இந்நியமனங்கள் வழங்கப்படுகின்றன" எனத் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை சுகாதாரத்துறை சிறப்பாக செயற்படுகிறது

## உலக சுகாதார நிறுவனம் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் சுகாதாரத்துறை மிகச் சிறப்பான முறையில் செயற்பட்டுக் கொண்டிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

மிகக்குறைந்த நிதிவளத்தைக் கொண்டு கூடுதலான சுகாதார சேவைகளை முன்னெடுப்பதில் இலங்கை சுகாதாரத்துறை முன்மாதிரியாகவுள்ளது.

அத்துடன், இலங்கையின் சுகாதாரத்துறை மேற்கொண்டு வரும் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் காரணமாக போலியோ போன்ற நோய்கள் முற்றாக ஒழிக்கப்பட்டு ஆரோக்கியமான தலைமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் தாய்-சேய் இறப்பு வீதம் இலங்கையில் மிகவும் சொற்பமாகவேயுள்ளது.

கடந்த ஆண்டு குழந்தைகள் இறப்பு வீதம் மிகவும் குறைவான அளவிலேயே பதிவாகி இருந்தது.

இவ்வாறாக இலங்கையின் சுகாதாரத்துறையின் சேவைகள் ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியாக இருப்பதாகவும் உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# சிரியா குழந்தைகளின் கதறல் உலக நாடுகள் காதில் விழவில்லையா?

(சென்னை)

சிரியாவில் கடந்த 9 நாட்களில் நடந்த தாக்குதலில் மட்டும் சுமார் 700 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தக் கோரச் சம்பவம் குறித்து நடிகர் விவேக் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில், சிரியா குழந்தைகளின் கதறல் உலக நாடுகளின் காதில் விழவில்லையா? ஐ.நாவுக்கு கண் இல்லையா? இதை விவாதிக்க சர்வதேச நீதி அமைப்புகளுக்கு வாய் இல்லையா? இந்தக் கொடுமை தீர வழி இல்லையா? அன்று ஸ்ரீலங்கா இன்று சிரியா! ஆக, யாருக்குமே இதயம் இல்லையா? I feel guilty to witness "tis cruelty என பதிவிட்டுள்ளார். (இ-7)



# பாலியல் துஷ்பிரயோகத்தின் பின் 9 வயதுச் சிறுவன் படுகொலை

## விசாரணைகளில் தகவல்

(கொழும்பு)

சிலாபம், இரணவில காட்டுப்பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட 9 வயதுச் சிறுவன் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 25 ஆம் திகதி காணாமல்போன 9 வயது பாடசாலை மாணவன் சிலாபம், இரணவில சமிந்துகம காட்டுப் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

குறித்த சிறுவன் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், கொலை செய்யப்படுவதற்கு முன்னர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து அறிய முடிகிறது. சிலாபம் பொது வைத்திய சாலையின் விசேட மரண விசாரணை அதிகாரியினால் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் ஏற்கனவே இவ்வாறு குழந்தை ஒன்றை கொலை செய்துள்ளமை விசாரணைகளின் மூலம்தெரியவந்துள்ளது. (இ-7)

# கிழக்கு பட்டதாரிகள் நியமனத்தில் அநீதி



(ஏறாவூர்)

கிழக்கு மாகாண ஆளுநர், பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாக, அதிகளவான சிங்கள மொழி மூல பட்டதாரிகள் உள்வாங்கப்படவுள்ளனர் எனவும், உள்வாங்கியவர்கள்கூட சித்தியடைந்தவர்கள் அல்லாமல், சுற்று நிருபத்துக்குப் புறம்பாக உள்வாங்கப்படவுள்ளனர் எனவும், மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் எஸ்.சிவகாந்தன் தெரிவித்தார்.

இதனால் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், தமது தொழில் உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், மட்டக்களப்பு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தால் மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.சிவகாந்தன் உட்பட அதன் உறுப்பினர்கள் சென்று, தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தனர்.

அதனைத்தொடர்ந்து தமது நிலைமைகள் தொடர்பிலும், மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தனர்.

இதன்போது சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவிக்கையில், "மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் தொழில் உரிமைப் போராட்டம், கடந்த ஒரு வருடகாலமாக இடம்பெற்றதன் பிரகாரம், கிழக்கு மாகாண சபையால் கடந்த காலங்களில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கப்பட்டிருந்தது.

"ஆனால், தொடர்ந்தும் பட்டதாரிகளின் போராட்டத்துக்குச் செவிசாய்க்காத மத்திய, மாகாண அரசாங்கங்கள், எமக்கான அநீதியையே இழைத்துக் கொண்டிருக்கின்றன.

"தற்போது கிழக்கு மாகாண சபையால் வழங்கப்படவுள்ள 387 நியமனங்களும், கிழக்கில் உள்ள பட்டதாரிகளுக்கு ஓர் அநீதியான முறையிலே வழங்கப்படுகின்றமையை உணரக் கூடியதாகவுள்ளது.

"தற்போது எம்மால் ஜனாதிபதியிடம் மகஜர் கையளித்ததன் பிரகாரம் கிழக்கிலுள்ள 2,000 பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு. நிதி அனுமதியை வழங்குவதாக உறுதியளித்துள்ள நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர், எதிர்வரும் மாதம் 387 பட்டதாரிகளை நியமிப்பதற்கு ஆயத்தமாகி வருகின்றார்.

"இந்த நியமனமும் அநீதியான முறையிலேயே இடம்பெற இருக்கிறது. இந்நியமனத்தின்மூலம் தமிழ்மொழி மூல பட்டதாரிகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் 28 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 10 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 44 பேரும் நியமிக்கப்பட உள்ளனர். ஆனால், சிங்களமொழிமூல பட்டதாரிகள் அம்பாறை மாவட்டத்தில் 122 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 127 பேரும் நியமிக்கப்பட உள்ளமை, எமது தமிழ் மொழிமூல பட்டதாரிகளுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும்.

"இந்த அநீதியை எதிர்த்து, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நாங்கள் முறைப்பாடு செய்துள்ளோம். அத்தோடு, பிரபல சட்டத்தரணி ஊடாக, கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளோம்.

"இவ்வாறான நடவடிக்கைகளை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இவ்வாறான நிலை தொடருமாயின், எதிர்வருகின்ற மாகாண சபைத் தேர்தலிலே, பட்டதாரிகளாகிய நாங்கள், எமக்கான அநீதியை எதிர்க்கும் பொருட்டு, தேர்தலில் களமிறங்கி, எமக்கான பலத்தை நாங்கள் இந்த மாகாண சபைக்கு எதிராக நிரூபிப்போம்" எனத் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸார்- பொதுமக்கள் மோதல்

## கைது செய்யப்பட்ட 57பேருக்கும் 5ஆம் திகதி வரை விளக்கமறியல்

(கொழும்பு)

தம்புத்தேகம பொலிஸ் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் இதுவரையில் 57 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு தம்புத்தேகம நீதவான் நீதிமன்றின் நீதிபதி சமீலா நதிஷானி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, தம்புத்தேகம பொலிஸ் சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசி தாக்குதல் மேற்கொண்டதில் 4 பொலிஸார் காயடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அம்பாறை இனக்கலவரம் தொடர்பாக ஜனாதிபதியிடம் அதாவுல்லா முறைப்பாடு



(கொழும்பு)

அம்பாறையில் இடம்பெற்ற இனக்கலவரம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் முறையிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் குறித்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

அம்பாறையில் ஏற்பட்ட இனக்கலவரம் நன்கு திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டதென்பதை ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டிய அதாவுல்லாஹ், அங்கு சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களின் உடைமைகளையும் வீடியோ பதிவுக் காட்சிகள் மூலமாக ஜனாதிபதிக்கு காண்பித்துள்ளார்.

இனக்கலவரத்தின் போது முற்றுமுழுதாக சேதமடைந்த அம்பாறை பள்ளிவாசலை அரச செலவில் மீள் நிர்மாணம் செய்ய வேண்டுமெனவும், சேதங்களுக்குள்ளான முஸ்லிம் வர்த்தகர்களின் உடைமைகள், சொத்துக்களுக்கு நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# 2 மாதங்களில் 800 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில், ஜனவரி மாதம் முதல் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள், டெங்கு தொற்று நோய் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம், இதுவரை 800 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில், இதில் ஒருவர் மரணித்துள்ளதாகவும், கம்பஹா மாவட்ட தொற்று நோய்ப்பிரிவின் விசேட வைத்தியர் எஸ்.ஆர். ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு, அத்தனகலை, தொம்பே, களனி ஆகிய பிரதேசங்களிலேயே ஆக்கூடுதலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தற்போது மழை காலம் ஆரம்பமாகியுள்ளது. இந்நிலையில், டெங்கு தொற்று நோய் மேலும் பரவி, பேராபத்தை விளைவிக்கக்கூடும் என்பதால் பொதுமக்கள்தமது வீடு மற்றும் சுற்றுச் சூழல் என்பவற்றில் அக்கறை கொண்டு, எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு முன்வர வேண்டும் என்றும் வைத்தியர் ஆலோசனை வழங்கியுள்ளார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## அம்மாவுக்கு மகள் சொன்ன கதை



இரவு பத்து மணி. இன்னமும் தூங்காமல் கதை சொல்லச் சொல்லி அம்மாவை நச்சரித்தாள் கவின் குட்டி. இரண்டாம் வகுப்பு படிக்கும் சுட்டி.

சாப்பிட வேண்டும், தூங்க வேண்டுமென்றால் அவளுக்குக் கதை சொல்லியாக வேண்டும். கதை கேட்காமல் அவளுக்குப் பொழுதே விடியாது. கதை சொல்ல ஆரம்பித்து விட்டால் தலையாட்டிக்கொண்டே எது சொன்னாலும் கேட்பாள். கதை சொல்லாவிட்டால் பிடிவாதம்தான். அம்மாவும் சலிக்காமல் ஏதாவது ஒரு கதையைக் கவினுக்குத் தினமும் சொல்லிவந்தாள்.

அன்றைக்குக் கவினுக்குச் சொல்வதற்கு அம்மாவிடம் கதையே இல்லை.

படுக்கப் போனதும், "கதை சொல்லுமா..?" என்றாள் கவின்.

"இன்னிக்கு ஒருநாள் மட்டும் பொறுத்துக்கடா. நாளைக்குப் புதுசா கதை சொல்றேன்!" என்றாள் அம்மா. கவின் கேட்பதாயில்லை.

"நாளைக்கு நீ கதை சொன்ன பிறகு, நான் தூங்குறேன்" எனச் சொல்லிக்கொண்டே, படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்துவிட்டாள்.

கவினை வழிக்குக் கொண்டுவருவதற்காக, "செல்லம், அம்மாவுக்கு இம்புட்டுத்தான்டா கதை தெரியும். நீதான் பள்ளிக் கூடம் போறியே. நீ அம்மாவுக்கு ஒரு கதை சொல்லேன்?" என்று கேட்டாள் அம்மா.

"எப்பவுமே அம்மாதான் குழந்தைக்குக் கதை சொல்லணும். குழந்தை போய் அம்மாவுக்குக் கதை சொல்லுமா?" என்று எதிர்கேள்வி கேட்டாள் கவின்.

"உனக்காக அம்மா எம்புட்டு கதை சொல்லியிருப்பேன். அம்மாவுக்காக ஒரேயொரு கதை சொல்லக் கூடாதா?" என்று அம்மா கேட்டாள்.

அம்மா இவ்வளவு தூரம் சொன்னதும், கவினும் அம்மாவுக்குக் கதை சொல்லத் தொடங்கினாள்.

அது ஒரு அழகான கிராமம். அந்தக் கிராமத்து ஓரமா ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றோரமா ஒரு முயலும் ஆமையும் வாழ்ந்தன.

ஒருநாள், விவசாயி ஒருவர் தோட்டத்தில் விளைந்த காய் கறிகளைச் சந்தையில் விற்பதற்காகக் கொண்டுபோனார். போற வழியில், ஆற்றோரமாய்ப் பசியோடு இருந்த முயல், ஆமை இரண்டையும் பார்த்தார்.

தனது கூடையிலிருந்த முட்டைக்கோஸ் ஒன்றை எடுத்து, "இருவரும் இதைப் பகிர்ந்து சாப்பிடுங்கள்..!" என்று சொல்லிவிட்டுப் போனார்.

முயலுக்கு நல்ல பசி. ஆமைக்குத் தராமல் தான் மட்டுமே முழுசா சாப்பிட ஆசைப்பட்டது முயல். "ஆமையாரே! இந்த் முட்டைக்கோஸை முழுவதுமாகச் சாப்பிட்டால்தான் சக்தி கிடைக்கும். ஒரு போட்டி வைப்போம். அதில், யார் வெற்றி பெறுகிறார்களோ, அவர்களே முழு முட்டைக்கோஸையும் சாப்பிடலாம்!" என்றது.

"மறுபடியும் போட்டி வைக்கிற உன் பழக்கத்தை ஆரம்பிச்சிட்டியா?" என்று மனசுக்குள் நினைத்தபடியே, "ம்! சொல்லு. என்ன போட்டி?" என்று கேட்டது ஆமை.

**தொடரும்...**

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

03.2018
02

- ❖ 986-பிரான்சின் மன்னனாக ஐந்தாம் லூயி முடிசூடினான்.
- ❖ 1815- கண்டி ஒப்பந்தம் என வழங்கப்படும் ஒப்பந்தத்தின் மூலம் கண்டி இராச்சியம் பிரித்தானியருக்குக் கொடுக்கப்பட்டது. சிறைபிடிக்கப்பட்ட ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் என்ற கண்ணுச்சாமி தென்னிந்தியாவில் உள்ள வேலூர்க் கோட்டைக்கு அனுப்பப்பட்டான்.
- ❖ 1930-மகாத்மா காந்தி உப்புச் சத்தியாகிரகம் ஆரம்பிப்பதற்காக அகமதாபாத்திலிருந்து குஜராத் கடலோரத்தில் இருந்த தண்டி நோக்கி 240 மைல் நடைப் பயணத்தை துவக்கினார்.
- ❖ 1941- இரண்டாம் உலகப் போர்: முதலாவது ஜேர்மனியப் படைகள் பல்கேரியாவினுள் நுழைந்தனர்.
- ❖ 1958-தி.மு.க.மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது.
- ❖ 1962- பர்மாவில் இராணுவ ஜெனரல் நெவின் (Ne Win) இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- ❖ 1972-நாசாவின் பயனியர் 10 விண்கலம் வெளிக் கோள்களை ஆராய்வதற்காக புளோரிடாவில் இருந்து ஏவப்பட்டது.
- ❖ 1991-இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தொலைவில் இருந்து இயக்கிய கார் குண்டு ஒன்றின் மூலம் கொலை செய்யப்பட்டார்.
- ❖ 1990-ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவராக நெல்சன் மண்டேலா தெரிவு செய்யப்பட்டார்.
- ❖ 1992-உஸ்பெக்கிஸ்தான், மல்தோவா ஆகியன ஐநாவில் இணைந்தன.
- ❖ 1995- யாஹூ! தொடங்கப்பட்டது.
- ❖ 1998-ஜூப்பிட்டரின் சந்திரனான "யூரோப்பா"வில் அடர்ந்த பனிக்கட்டியின் கீழ் திரவ நிலையில் கடல் இருப்பதாக கலிலியோ விண்கலம் தகவல் அனுப்பியது.

### பிறப்புகள்

- ❖ 1920-கே.கணேஷ், இலங்கை மலையக எழுத்தாளர் (இ. 2004)
- ❖ 1923- சுந்தரிபாய், தமிழக நகைச்சுவை நடிகை
- ❖ 1935- குன்னக்குடி வைத்தியநாதன், வயலின் இசைக்கலைஞர் (இ. 2008)
- ❖ 1949-தினேஷ் குணவர்தன, இலங்கை அரசியல்வாதி
- ❖ 1963-வித்தியாசாகர், இந்தியத் திரைப்பட இசையமைப்பாளர்

### இறப்புகள்

- ❖ 1949-சரோஜினி நாயுடு, இந்தியாவின் முதல் பெண் ஆளுநர், இந்தியக் கவிஞர், செயற்பாட்டாளர் (பி. 1879)
- ❖ 2016- இரா.செல்வக்கணபதி, தமிழறிஞர், பேச்சாளர், எழுத்தாளர் (பி. 1940)

### சிறப்பு நாள்

- ❖ வான்படை நாள் (இலங்கை)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 70 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 65 | 70 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 60 | 70 | 100 | 50 |
| தக்காளி | 80 | 20 | 25 | 40 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 60 | 60 | 60 | 70 |
| கரட் | 80 | 100 | 80 | 100 | 160 | 70 |
| பூசணி | 60 | 40 | 40 | 50 | 60 | 50 |
| புடோல் | 80 | 100 | 40 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 80 | 60 | 45 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 110 | 120 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 120 | 100 | 120 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 100 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 55 | 60 | 60 | 50 |
| பயற்றங்காய் | 120 | 100 | 60 | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 150 | 200 | 140 | 160 | 200 | 180 |
| பீற்றூட் | 60 | 40 | 40 | 50 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 80 | 60 | 100 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 400 | 400 | 800 | 600 |
| போஞ்சி | 80 | 160 | 75 | 80 | 200 | 120 |
| சத்தரிதம்பளை | 60 | 40 | 60 | - | 80 | 50 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 60 | 40 | 70 | 40 | 80 | 40 |
| தேங்காய்(ஒன்று) | 90 | 100 | 40-90 | 90 | 75 | 90 |
| இராசவள்ளி | 150 | 160 | 140 | 170 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 50 | 70 | 100 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 40 | 30 | 60 | 40 | 30 |
| பொன்னாங்காணி | 90 | 40 | 10 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 40 | — | 30 | 80 | 70 |

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு
சீவன் போகுது.

*~ தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உலகமே பார்த்திருக்க சிரியாவில் மனிதவதை நடக்கிறது

சிரியாவில் நடக்கும் கொடும் போர் கண்டு நெஞ்சம் வெடித்துவிடும் போல் உள்ளது.

அதிலும் விமானக் குண்டு வீச்சு மூலம் பச்சிளம் குழந்தைகளைக் கொன்று குவிக்கும் கொடூரமும் கண்டு என்னே மனித வாழ்க்கை என்று எண்ணத் தோன்றும்.

ஐ.நா சபை முதல் மனிதநேய அமைப்புகள் என ஏகப்பட்ட சர்வதேச பொது நிறுவனங்கள் இயங்குகின்ற போதிலும் மனிதவதையைத் தடுக்க முடியவில்லை எனும்போது,

இந்த அமைப்புகள் எல்லாம் எதற்கானது என்ற கேள்வி எழுவதில் நியாயம் இருக்கவே செய்யும்.

உலக வல்லரசுகள் தங்கள் ஆயுதங்களின் சக்தியைப் பரிசோதிப்பதற்காக தாங்கள் உற்பத்தி .செய்த குண்டு ஒரே தடவையில் கொன்றொழிக்கக் கூடிய மனித உயிர்களின் எண்ணிக்கைகளைக் கணக்கெடுப்பதற்காக சிரியாவைத் தெரிந்தெடுத்து, அங்கு மனித வேட்டையாடுகின்றன.

அறிவியல் உச்சமடைந்துவிட்டது. தகவல் தொழில்நுட்பம் வானைத் தொட்டுவிட்டது என்று பெருமிதம் அடைகின்ற இந்தக் காலத்தில்,

யுத்த விமானங்கள் கொட்டுகின்ற குண்டு மழையில் கொன்றொழிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் குவியல் குவியலாக கிடக்கின்ற அட்டூழியத்தை இறைவனும் இயற்கையும் ஒரு போதும் மன்னிக்கப் போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

அதிகாரப் போட்டியும் நாடுகளுக்கிடையிலான சர்வாதிகாரப் போக்கும் ஏழை நாடுகளையும் அந்த நாடுகளில் வாழும் மக்களையும் தங்களின் யுத்த ஆய்வுகூடத்துக்குத் தவளைகளாக்கியுள்ளனர்.

இதனால் ஒவ்வொரு நாளும் நேரம் குறிக்கப்பட்டு இந்த நேரத்தில் சிரிய நாட்டு மக்கள் கொல்லப்படலாம் என அனுமதியும் அங்கீகாரமும் எழுதி வழங்கப்பட்டுள்ளது.

நீதி, நேர்மை, மனித உரிமை, சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு, பெண்கள் பாதுகாப்பு என்றெல்லாம் உலகச் சட்டங்கள் தத்தம் நிறுவனங்களில் கொடிகளாகப் பறக்கின்றன.

ஆனால் சிரியாவில் சிறுவர்கள் கொன்றொழிக்கப்படுகின்றனர். மனிதவதை தாராளமாக செய்யப்படுகின்றது எனும்போது,

ஜெனிவாவிலும் அமெரிக்காவிலும் லண்டனிலும் பறக்கின்ற அந்தக் கொடிகள் எதற்கானது என்பதே நம் கேள்வி.

அன்று இலங்கையில் மிகக் கொடும் போர் நடந்தது. எங்களைக் காப்பாற்றுங்கள் என்று தமிழ் மக்கள் அழுகுரல் எழுப்பி சர்வதேசத் தொண்டு நிறுவனங்களைக் கெஞ்சி மன்றாடினர்.

ஆனால் நீங்கள் செத்து மடியுங்கள் நாங்கள் தப்பிப் போகின்றோம் என்பதாக சர்வதேச தொண்டு அமைப்புக்கள் ஓடிச் சென்றன.

யாருமற்ற நிலையில் முள்ளிவாய்க்காலில் எங்கள் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட கொடூரத்தை கண்டும் காணாமல் இருந்தவர் அன்றைய ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன்.

இன்று சிரியாவில் பெரும் மனிதக் கொலை நடக்கிறது. இப்போது சர்வதேசமும் பாராமுகமாகவே இருக்கிறது.

என்ன செய்வது! வல்லரசுகள் நினைத்தாலன்றி சிரியாவில் இடம்பெறும் மனிதவதை நிற்கப் போவதில்லை என்பதே உண்மை.

# உள்ளூராட்சி ஆட்சி குறித்து உத்தியோகபூர்வ பேச்சுக்கள் இன்னும் நடைபெறவில்லை

## ஈ.பி.டி.பி.அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் வாக்குறுதி களை வழங்கி வாக்குகளைக் கேட்டவர்கள் மக்கள் வழங்கிய ஆணையை மதித்து மக்களுக்கு சேவையாற்ற முன்வர வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் முடிந்த கையோடு மக்களை மறந்து அர்த்தமற்ற அறிக்கைகளை வெளியிடுவதும் அரசியல்காழ்ப்புணர்ச்சிகளை உமிழ்வதும் வாக்களித்த மக்களுக்கு எவ்வித மான பயனையும் பெற்றுத் தரப் போவதில்லை.

கிடைக்கப்பெற்ற மக்கள் ஆணையை நாடாளுமன்றத்திலும், மாகாண சபையிலும் அர்த்தமற்றதாக்கியதைப் போன்று உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் முடக்கும் விதமாக எவரும் செயற்படக் கூடாது.

தமக்கு சேவைகளாகப் பலன் கொடுக்க வேண்டுமென மக்கள் வழங்கிய வாக்குகள் மீதான நம்பிக்கையை ஒவ்வொருவரும் உணர்ந்து செயலாற்ற முன்வர வேண்டும். அந்த வகையிலேயே நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆட்சி அமைக்கக் கூடிய முயற்சி எடுக்கக் கூடியவர்கள் ஆட்சி அமைக்க முன்வர வேண்டும் என்றும் அத்தகையவர்கள், மக்கள் நலன் சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் போது அதற்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம் என்றும் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தோம். எமது அறிவி ப்பைத் தொடர்ந்து ஆட்சி அமைக்க சிலர் முயற்சித்தாலும் அதற்கான பேச்சு வார்த்தைகள் உத்தியோகப்பற்றற்ற வகையிலேயே இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

அந்த முயற்சிகள் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் காலத்தை கவனத்தில் கொண்டு அர்த்தமுள்ள உத்தியோகபூர்வமான பேச்சுக்கள் நடைபெறுவது அவசியமானது. அதற்கான கதவுகள் இன்னமும் திறந்தேயிருக்கின்றன. பல்வேறு தேவைகளுடனும், கோரிக்கைகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும எமது மக்களுக்கு சேவை செய்ய அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாலும் செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சுமங்கலிப் பெண்கள் நெற்றியில் குங்குமம் இடுவதன் இரகசியம்?

திருமணமான பெண்கள் நெற்றியில் குங்குமம் இடுவதால் மகாலட்சுமியின் நீங்காத அருளைப் பெறுகிறார்கள்.

மாங்கல்யம், நெற்றி, தலைவகிடின் ஆரம்பம் ஆகிய மூன்று இடங்களிலும் ஸ்ரீலக்ஷ்மிதேவி உறைகின்றாள், இந்த மூன்று இடங்களிலும் குங்குமத்தை இடுவதே உத்தமமானது.

படிகாரம், சுண்ணாம்பு தண்ணீர், மஞ்சள் ஆகிய மூனறையும சேரததுதான குங்குமம தயாரிககபபடுகின்றது.

**நெற்றியில் குங்குமம் இடுவதால் நன்மைகள**

மாங்கலிப்பெண்களின் தலை வகிட்டின் நுனியை சீமந்த பிரதேசம் என்பார்கள். அம்பிகையின் வகிட்டில் உள்ள குங்குமம் பக்தர்களுக்கு சேமத்தைக் கொடுக்கும்.

சுமங்கலிப் பெண்களின் சீமந்த பிரதேசம் ஸ்ரீ மகாலடசுமியின இருபபிடம சுமங்கலிகளின சகதி குங்குமத்தில் உள்ளது.

வீட்டிற்கு வரும் சுமங்கலிகளுக்கு குங்குமம் கொடுப்பது, தருபவர் பெறுபவர் இருவருக்கும் மாங்கல்யத்தின் பலத்தைப் பெருக்கும்.

குங்குமம் ஆரோக்கியமான நினைவுகளை தோற்றுவிக்கும். குங்குமம் அணிந்த எவரையும் வசியம் செய்வது கடினம். (தொடரும்)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அன்புதான் உங்களுடைய வாழ்க்கை

யாராவது உங்களிடம் அளவற்ற அன்பு காட்டுகிறாாகள எனறு வைததுககொணடால நங்கள எனன செய்வீர்கள்?

அவ்வன்பிற்குப் பதிலாக என்ன செய்வது என்று நீங்கள் அறிவதில்லை

நங்கள கடமைபபடடவராகவும கடடுபபடடவராகவும உணர்கிறீர்கள்

நீங்கள் சுருங்குகிறீர், அமர்கிறீர்கள் அல்லது நாணுகிறீர்கள்

நீங்கள் முட்டாள்தனமாகவும் அருவருப்பாகவும் உணர்கிறீர்கள்

உண்மையானதாக இல்லாத போதும்கூட, நீங்கள் பதில் அன்பு செலுத்த முயற்சி செய்கிறீர்கள்

உங்களிடம் காட்டப்பட்ட அன்பையும் நீங்கள் அவ்வன்பிற்குரியவரா என்றும் சந்தேகிக்கிறீர்கள்

மரியாதையை இழந்து விடுவோமோ என்று அச்சம் கொள்கிறீர்கள். ஏனெனில் மரியாதை எனும் போது அது இருவரிடையே இடைவெளியை நிலை நிறுத்துகிறது. அன்பு இருவரிடையே இடைவெளிக்கு இடம் கொடுப்பதில்லை.

உங்களுடைய ஆணவம் திடமாகிறது. அது அன்பைப் பெறுவதறகும பதிலாக அனபு காடடுவதறகும இடம கொடுப்பதில்லை.

இன்னும் வேறு ஏதாவது

அன்பைக் கொடுக்கும் திறமையோடு தான் அன்பைப் பெறும் திறமை வருகிறது. அனுபவத்தில் எந்த அளவிற்கு ஆன்மாவில் உள்ளீர்களோ, நீங்கள் தான் அன்பு என்பதை அறிகிறீர்களோ அந்தளவிற்கு எவ்வளவு அன்பு எந்த வகையால் காட்டப்பட்டாலும் நீங்கள் இயல்பாக உணர்கிறீர்கள். இதை உள்ளாழத்தில் நீ அறிவீர்கள்.

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 17ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுச்சங்கத்தின் 17 ஆவது ஆண்டு பொதுக்கூட்டம்நாளை 3 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் ரி.எம்.செல்வராஜா தலைமையில் நடைபெறும்.

அங்கத்துவ விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்யவுளளோர் ஓய்வூதிய அட்டை, தேசிய அடையாள அட்டை, ஓய்வூதியம் பெறும் வங்கிக்கணக்கு புத்தகத்தின் முற்பக்க நிழல் பிரதி ஆகியவற்றை எடுத்துவருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.(இ-9)

## இரத்ததான முகாம் நாளை

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் 6 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் இரத்ததான முகாம்களின் வரிசையில் 5 ஆவது ஆண்டில் 10 ஆவது இரத்ததான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை கலைமகள் படிப்பகத்தில் காலை 9 மணி முதல் நடைபெறும். இதன்போது தொடர்ச்சியாக எமது இரத்ததான முகாமகளில்கலந்து கொண்டு குருதிக் கொடையளித்த குருதிக் கொடையாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறும். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை சனி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில் ஏ9 வீதியில் (புங்கன் குளத்திலிருந்து கச்சேரி நல்லூர் வீதி சந்தி வரை), பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, பேரின்பநாயகம் வீதி, காட்டுக்கந்தோர் வீதி, மண்டைதீவு, மண்கும்பான், அல்லைப்பிட்டி, வேலணை ஒரு பகுதி, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு இலங்கை வெலுசுமண கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### உழைப்பை மதியுங்கள்

✦ உழைப்பாளிகளின் வியர்வை உலர்வதற்கு முனபே அவரகளின கூலியைக கொடுதது விடுவராக.

✦ உழைபபாளிகளின கூலியை காலதாமதமாகக கொடுப்போர் அநியாயகாரர்களாகும்.

✦ அலலாஹவுககும, தன முதலாளிககும கடடுபபடடு முறையோடு கடமைகளைச் செய்யும் உழைப்பாளிகள், கியாமநாளில இரு மடஙகு நனமைகள அடைவார்கள.

✦ குறையுள்ள பொருளை ஒருவன் அதைப் பற்றி தெளிவுபடுத்தாமல் விற்பனை செய்தால் அவன் அலலாஹவின கோபததிறகு ஆளாகி விடடான அலலது வானவர்கள் அவனைச் சபிக்கின்றனர்.

✦ செத்த ஆட்டுக்குரியவன் அதன்மீது வைக்கும் அளவு கூட இறைவன் இந்த உலகத்தின் மீது மதிப்பு வைககவிலலை.

✦ உலகத்தை அல்லாஹ் கொசுவின் ஒரு சிறகுக்கு சமமாக மதித்திருந்தால், தன்னை நிராகரிப்பவருக்கு தாகம் தீர்ப்பதற்கு தண்ணீரைக் கூட வழங்கி இருக்க மாட்டான்.

# மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவு செய்தது ஓல்ட்கோல்ஸ்

மானிப்பாய் பரீஸ் லண்டன் கிளையின் 10வது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் துடுப்பாட்ட தொடரில் ஓல்ட்கோல்ஸ் அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது. 11பேர்கொண்ட 10 பந்து பரிமாற்றங்களை கொண்ட இத் தொடரில் மானிப்பாய் பரிஸ், கே.சி.சி.சி, ஓல்ட் கோல்ஸ், திருநெல்வேலி YMHA, டிறிபேக்ஸ்ரார், யூனியன் ஆகிய 6 அணிகள் பங்குகொள்கின்றன.




இத்தொடரில் முதலாவது போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணியை எதிர்த்து மானிப்பாய் பரீஸ் அணியினர் பங்கு கொண்டனர். முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணியினர் 10 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களை பெற்றனர். துவாரகசீலன் 27, சாந்தன் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் நிலக்ஸன்-3 ஜிந்துஸன், சிறிகுகன்,நிரோஸன் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 9.3 ஓவர்களில் 2 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைபெற்று 8 இலக்குகளால் வெற்றிபெற்றனர்.

சிறிகுகன் 26, பிரியலக்ஸன் ஆட்டமிழக்காது 22, ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் கனிஸ்ரன் 2 இலக்குகளை கைப்பற்றினர். இத்தொடர் வெள்ளை நிற ஆடை, சிவப்பு பந்து கொண்ட போட்டிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (க)







துறனு சிரம சக்தி மக்கள் அபிவிருத்தி கருத்திட்டத்திற்கமைய இலங்கை இளைஞர் தேசிய சேவை மன்றத்தினால் வழங்கப்பட்ட ரூபாய் 1,50,000 நிதியினாலும் மற்றும் மக்களிடம், இளைஞர்களிடம் திரட்டிய 1,50,000 ரூபாய் நிதியினையும் இணைத்து குருநகர் யாழ்.கே.கே.பி. இளைஞர் கழகம் உருவாக்கிய யாழ்.கே.கே.பி. இளைஞர் உடற்பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. (க)

# மாகாண மட்ட கராத்தே போட்டி முல்லைத்தீவு அணி முதலாமிடம்

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மாகாண ரீதியிலான கராத்தே போட்டி நிகழ்வில் 1ஆம் இடத்தை முல்லைத்தீவு மாவட்ட அணியினர் பெற்றுக் கொண்டனர்.





மன்னார் உள்ளக விளையாட்டு அரங்கில் 24.02.2018 சனிக் கிழமை அன்று நடைபெற்ற மாவட்டங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மாகாண கராத்தே போட்டி நிகழ்வில் 6 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை பெற்று முல்லைத்தீவு மாவட்ட அணியினர் வடமாகாணத்தில் முதல் இடத்தைப் பெற்று கொண்டனர்.

அணி வீரர்களான கேசவன் (உடையார்கட்டு), K.தயாளன் (றெட்பானா), K. சசிதரன் (றெட்பானா) ஆகியோர் குழு காட்டா நிகழ்வில் தங்கப்பதக்கங்களையும், P.குமார (மணலாறு) தனிக்காட்டா நிகழ்வில் 1ஆம் இடத்தையும் K. ஆதவன் (உடையார்கட்டு), P. குமார (மணலாறு) ஆகியோர்குமுத்தே போட்டியில் தங்கப்பதக்கங்களையும், S.அஜபன் (விசுவமடு), S. சஞ்ஜீவன் (சுதந்திரபுரம்) ஆகியோர் வெள்ளி பதக்கங்களையும், P.தமிழ்செல்வன் (உடையார்கட்டு), K.சசிதரன் (றெட்பானா) ஆகியோர் வெண்கலப் பதக்கங்களையும் பெற்று முல்லைத்தீவு மாவட்ட அணியினர் மாகாணத்தில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

3 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை பெற்று யாழ்ப்பாண மாவட்ட அணியினர் 2ஆம் இடத்தையும், 2 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை பெற்று கிளிநொச்சி மாவட்ட அணியினர் 3ஆம் இடத்தினையும், வவுனியா மாவட்ட அணியினர் 4ஆம் இடத்தையும் பெற்று கொண்டனர். (க)



## மென்பந்தாட்டப் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கலைநகர் விளையாட்டு கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு 7 பேர் 6 பந்தும் பரிமாற்றங்கள் கொண்ட மாபெரும் மென்பந்து சுற்றுப் போட்டி கழகத்தை பதிவு செய்ய இன்றே 077 663 6520, 077 922 6529, 075 041 1358 என்னும் இலக்கத்துக்கு அழையுங்கள். நுழைவு கட்டணம் 1200. எதிர்வரும் ஞாயிறுக்கிழமைக்கு முன்னதாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (க)

# சாதிக்கத் துடிக்கும் இலங்கையின் இளம் அணி

இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகள் பங்குபெறும் முத்தரப்பு இருபது-20 தொடர் எதிர்வரும் 6 ஆம் திகதி இலங்கையில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இத் தொடருக்கான 20 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டது.

இதில் மத்யூஸ் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் காயம் இன்னும் முழுமையாக குணமடையாத காரணத்தினால், தொடரிலிருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.





இதையடுத்து 20 பேர் கொண்ட இலங்கை அணியில் 15 பேர் கொண்ட இறுதியான இலங்கை அணி இன்று அறிவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தது.

அதன்படி இறுதியான 15 பேர் கொண்ட இலங்கை அணியை, இலங்கை கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

இதில் விக்கெட் கீப்பரான நிரோசன் டிக்வெல்லா ஒரு நாள் தொடரில் சிறப்பாக விளையாடினாலும், இருபது -20 தொடரில் அவரின் செயற்பாடு திருப்தியாக இல்லாத காரணத்தினால் அவர் முத்தரப்பு தொடருக்கான அணியில் இடம் அளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்தரப்பு தொடருக்கான 15 பேர் கொண்ட இலங்கை அணி விபரம்.

சந்திமால் (அணித்தலைவர்), தரங்க, குணதிலக, மெண்டிஸ், சனங்க, குசால் பெரேரா, திசர பெரேரா, ஜீவன் மெண்டிஸ், சமல், இசாரு உடான, தனஞ்சய, அமில, பிரதிப், சாமர, டிசில்வா. (க)



முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு பிரிவினரால் கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான மாவட்ட ரீதியிலான கராத்தே போட்டி நிகழ்வில் 1ஆம் இடத்தைப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அணியினரும், 2ஆம் இடத்தைப் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணியினரும், 3ஆம் இடத்தினை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அணியினரும் பெற்றுக்கொண்டனர். (க)

## ஐ.நா சபையிடம்...

ஐக்கிய நாடுகளிடம் நீதி கோரி ஐரோப்பிய நாடாளுமன்றத்திலிருந்து ஐ.நா நோக்கிய ஈருருளிப்பயணம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெல்ஜியம் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒழுங்கமைப்பில் பெல்ஜியம், நெதர்லாந்து, ஜெர்மன் மற்றும் பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களின் பங்கேற்புடன் இப் பயணம் நடைபெறுகின்றது.

இந்தப் பயணத்தை 15 இற்கும் மேற்பட்ட மனிதநேயப் பணியாளர்கள் முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் ஈருருளிப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தெற்காசிய பிரிவுகளுக்கான அரசியல் அதிகாரிகளையும், ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார பிரிவில் இலங்கைக்கான அதிகாரிகளையும் மற்றும் தெற்காசிய பிரிவுகளுக்கான அதிகாரிகளையும், ஐரோப்பிய ஒன்றியத்தின் சில அங்கத்துவ நாடுகளுடனும் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தலைவரையும் சந்தித்து உரையாடியதோடு ஈருருளிப் பயணம் தொடர்பான மனுவையும் குறித்த குழுவினர் கையளித்தனர்.

அதில் ஐந்து அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மனித உரிமைகள் விடயம் தொடர்பில் அனைத்துலக நீதிமன்ற விசாரணை, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் நில ஆக்கிரமிப்பை தடுத்தல், சுய நிர்ணய உரிமை, அரசியல் அபிலாசைகள் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பை விடுதலை இயக்கமாக அங்கீகரித்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். (ம-4)

## முன்னாள் போராளிக்கு...

சர்வதேச ஊடகமாக "தி கார்டியன்" வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த மாதம் 22ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் இருந்து விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியான சாந்தரூபன் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட அவர், குற்றப் புலனாய்வு பிரிவினரால் நான்கு மணிநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து விடுதலை செய்யப்பட்ட சாந்தரூபன் வீடு திரும்புவதற்கு பாதுகாப்பாக உணரவில்லை. இந்நிலையில், அவர், யாழ்ப்பாணத்தின் வடகிழக்கு கடற்கரை கிராமத்தில் வசித்து வருகின்றார்.

அவர் தங்கியிருக்கும் வீட்டிற்கு பாதுகாப்பு படையினர் இரண்டு முறை சென்றுள்ளனர். முதலாவது விஜயத்தின் போது உள்நாட்டு யுத்தத்தின் போது 9 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தவற்றை விசாரித்துள்ளனர்.

இரண்டாவது விஜயத்தின் போது சாந்தரூபனின் மனைவி மற்றும் குழந்தைகள் பற்றிய விபரங்களை பெற்றுக்கொண்டுள்ளனர்.

யாழ்.பருத்தித்துறை கடற்படை முகாமில் இருந்து அதிகாரிகள் சாந்தரூபனின் வீட்டிற்கு சென்றுள்ளனர். ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்விகளை சாந்தரூபனிடம் கேட்டிருந்ததாக அவரின் மனித உரிமைகள் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா சென்றிருந்த சாந்தரூபன் விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டு மீண்டும் கைது செய்யப்பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தமையின் காரணமாக யுத்தம் நிறைவுக்கு வந்திருந்த போதிலும் அரச படையினரின் விளைவுகளுக்கு சாந்தரூபன் அஞ்சியிருந்தார்.

எனினும், அவரது அகதி அந்தஸ்து கோரிக்கை அவுஸ்திரேலியா அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டது. இது குறித்த வழக்கு ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்தை ஈர்த்திருந்தது.

இதனையடுத்து, சாந்தரூபனை நாடுகடத்த வேண்டாம் என ஐ.நா சபை கோரிக்கை விடுத்திருந்த போதிலும், கடந்த 22ஆம் திகதி அவர் நாடு கடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## ஐ.நா மனிதவுரிமை...

களிடம் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தேர்தலுக்கு பின்னர் கூடியுள்ளோம். நடைபெற்று முடிந்த தேர்தல் தொடர்பாக பல விடயங்களை பேசியிருந்தோம். இதுவரை காலமும் தமிழ்த் தலைமைகள் கூறி வந்திருந்த கருத்துக்களில் தேர்தலின் பின்னர் எவ்வாறான மாற்றங்கள் வேற்றுமைகள் ஏற்பட்டுள்ளன என்பன தொடர்பாக கலந்துரையாடியிருந்தோம்.

மேலும் தமிழ் மக்கள் பேரவையானது மக்கள் இயக்கமாகவே இருக்க வேண்டும் என்பதுடன் கட்சி ரீதியாக எந்த விதத்திலும் செல்ல மாட்டோம் தொடர்பான விடயங்களை கலந்துரையாடியிருந்தோம். இதுவரை காலமும் தமிழ் மக்கள் பேரவையானது ஓர் யாப்பை கொண்டிருக்காத நிலையில் அதற்கான ஒரு யாப்பை கட்டுமானத்தை உருவாக்குவதற்கான 11 பேரினை கொண்ட குழுவினை அமைத்துள்ளோம்.

இக் குழு அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அத்துடன் மக்களுக்கு அரசியல் தொடர்பான விளக்கங்களை கொடுப்பதற்காக திருகோணமலையில் அடுத்த கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்படவுள்ளதுடன் இளைஞர் அணி ஒன்றை உருவாக்குவது தொடர்பாக பேசப்பட்டிருந்தது எனத் தெரிவிததார். இதேவேளை தற்போது இடம்பெற்று வரும் ஜெனிவா கூட்டம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்ட போது, அங்கு தமிழ் மக்கள் பேரவையில் இருந்து சிலர் பேசுவதற்காக செல்லவுள்ளதாக தெரிவித்தார். (ம-4)

## பறக்கவிடப்பட்ட...

கல் பாலத்தில் சுமார் 22 அடி உயரத்தில் சிவப்பு வர்ண கொடி ஒன்று நேற்று பறக்க விடப்பட்டுள்ளது.

200 மீற்றர் நீளமுடைய வட்டுவாகல் பாலம் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்பு செய்யப்படவில்லை.

ஒருவழி பாதையாக காணப்படும் இந்தப்பிரதான வீதி பாலத்தில் பல்வேறு விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. இதில் பலர் காயமடைந்துள்ளதுடன் உயிரிழப்புக்களும் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த பாலத்தின் நடுவே 22 அடி உயரத்தில் சிவப்பு வர்ணக்கொடி ஒன்று நேற்று பறக்கவிடப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-4,250,281)

## 10 கிலோ கஞ்சாவுடன்...

துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் வதிரி தேவரையாளிப் பகுதியில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து தேவரையாளிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினை திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டுள்ளனர். இதன் போது 10 கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டதுடன் அதை கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் ஏறாவூரைச் சேர்ந்த இருவர், நல்லூரைச் சேர்ந்த ஒருவர், அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஒருவர், கொற்றாவத்தையைச் சேர்ந்த ஒருவர் என ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து கூலர் வாகனம் ஒன்று, மோட்டார் சைக்கிள் ஒன்று, முச்சக்கர வண்டி என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. கஞ்சா விற்பனை செய்தவர்கள் தப்பி ஓடியுள்ளதாக பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன. (ம-4,60)

## பொன்சேகாவுக்கு...

முடியாது என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சரத்பொன் சேகாவுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. அவ்வாறு அவ்வமைச்சு பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டால், கூட்டு எதிர்க் கட்சியினருக்கு ஆபத்தாக அமையுமா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். (ம-4)

# முல்லையில் மக்களின் போராட்டங்களை முடக்க பொலிஸார் நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் மக்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை முடக்க பொலிஸார் தீவிரமாக செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்படுகிறது

முன்னைய ஆட்சிக்காலங்களில் வெள்ளை வான் கடத்தல், கொலைகள் என அச்சுறுத்தப்பட்டது. இப்போது நல்லாட்சி என்ற இந்த அரசில் புதிய உத்தியாக பொலிஸார் மற்றும் இராணுவ புலனாய்வாளர்களால் தந்திரமாக அச்சுறுத்தப்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது

நேரடியாக இராணுவம் மற்றும் வெள்ளை வான் கடத்தல்கள் இல்லையே தவிர அச் சுறுத்தல் புதுவடிவம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

குறிப்பாக ஜநா கூட்டத்தொடர் ஆரம்பித்த நிலையில் போராட்டங்களை முடக்க பொலிஸார் மற்றும் இராணுவ புலனாய்வாளர்களால் செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது

குறிப்பாக கேப்பாபுலவு மக்களது காணி விடுவிப்பு போராட்டத்தை முடக்க பொலிஸார் கேப்பாபுலவு மக்களை இரண்டு தடவை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்

கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற வட்டுவாகல் காணி அளவீட்டு எதிர்ப்பு போராட்டம் நடைபெற்ற போது கலகம் அடக்கும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டனர்

அதன்பின்னர் 26ஆம் திகதி இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது நடைபெற்ற மக்கள் போராட்டங்களை முடக்க வீதித்தடைகள் மற்றும் பொலிஸாரை குவித்திருந்தனர்

அதன் பின்னர் வட்டுவாகல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தமை, நீதிமன்றில் நிறுத்தியமை மற்றும் நேற்றையதினம் இடம்பெற்ற கேப்பாப்புலவு மக்களின் காணி விடுவிப்பின் ஓராண்டு நிறைவு போராட்டம் போன்றவற்றில் பொலிஸார் தீவிரமாக கவனம் செலுத்தி இருந்தனர்

இவ்வாறு மக்கள் போராட்டங்களை முடக்க பொலிஸார் செயற்படுவது போன்று புலனாய்வாளர்கள் போராட்ட இடங்களுக்கு அண்மையில் முழு நாளாக தரித்து நிற்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ம-281)

## தீட்சை வழங்கல்

உலக சைவ திருச் சபையின் ஏற்பாட்டில் யாழ்.கல்வியியற் கல்லூரியில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நாளை 3ஆம் திகதி காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதில் திருச்சபை அங்கத்தவர்கள் மற்றும் சைவ சமயிகள் கலந்து கொண்டு தீட்சை பெற்றுக்கொள்ள முடியும் என திருச்சபை அறிவித்துள்ளது. (ம)

# பிரதமர் ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணைக்கு

## ஐ.தே.கவின் பிரபலங்கள் பலர் ஒப்பம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள எதிர்பாராத சில பிரபலங்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தற்பொழுதும் ஐ.தே.கவின் எதிர்பார்க்க முடியாத பலர் ஆதரவு வழங்கி கையொப்பமிட்ட வண்ணமுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் சம்பந்தமுள்ளதாக தெரிவிக்கப்படும் அர்ஜுன் அலோசியசை நாட்டுக்கு அழைத்து வராமல் இருக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் பிரதமர் தலைமையிலான குழு முன்னெடுத்து வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். பிரதமர் பதவி இருக்கும் வரையில்தான் அர்ஜுன் அலோசியஸ் வருவதைத் தடுக்க முடியும்.

பிரதமர் பதவி பறிபோனால் அர்ஜுன் அலோசியஸை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு அர்ஜுன் அலோசியஸ் வந்தால், பிணை முறி தொடர்பான உண்மைகள் வெளிவரும். இதனைத் தடுக்கவே ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுகின்றது எனவும் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில் மகிந்தானந்த அலுத்கமகே குறிப்பிட்டார். (ம-4)

## காணாமல்போனோ...

வீட்டில் வைத்து வெள்ளைவானில் கடத்தப்பட்டார். அதன்பின்னர் கடந்த 12வருடங்களாக தனது மகனை தேடி அலைந்துள்ளார்.

இந்த காலப்பகுதிகளில் ஆணைக்குழுக்கள் பலவற்றில் சாட்சியமளித்திருந்ததோடு, போராட்டங்களிலும் கலந்து கொண்டு தனது பிள்ளைக்கு என்ன நடந்தது என்பதை அறிய போராடி வந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திடீர் நெஞ்சுவலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

குறித்த வயோதிப தந்தையின் மகனுக்கு திருமணம் நடந்து 15 நாட்களான நிலையில் கடத்தப்பட்டதில் பெரும் மன உளைச்சலை சந்தித்த அவர் மகனுக்கு என்ன நடந்தது என்பதை அறியாமலேயே உயிரிழந்துள்ளது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. காணாமல் போனோரை தேடிவரும் உறவுகளில் இது வரை ஏழு பேர் உயிரிழந்த நிலையில் இவ் உயிரிழப்பு எட்டாவதாக அமைந்துள்ளது. (ம-4)

## இரு முன்னாள்...

தவர்களின் கருத்துக்கள் எதுவும் உள்வாங்கப்படவில்லை.

அந்த அலுவலகத்துக்கான உறுப்பினர்களில் இருவர் முன்னாள் இராணுவ அதிகாரிகள் என்று நாம் அறிகின்றோம்.

இராணுவத்தில் இருந்தவர்கள் அங்கம் வகிக்கும் ஒரு அமைப்பால் எமக்கு நீதியை பெற்றுத்தர முடியாது. இது இராணுவத்தை பாதுகாப்பதற்காக அரசு எடுக்கும் நடவடிக்கையாகும்.

காணாமற்போனோர் அலுவலகத்தின் உறுப்பினர்களாக எம்மால் சிலரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டன. அவர்கள் எவருக்கும் இந்த அமைப்பில் இடம்தரப்படவில்லை" என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் சார்பில் லீலாதேவி ஆனந்தராஜா தெரிவித்தார்.

இந்த விடயத்தில் அரசு மிகவும் மெத்தனமாக நடப்பதாக கூறும் கொழும்பில் உள்ள பெயர் குறிப்பிடாத வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர், அலுவலகம் அமைக்கப்பட்டு இவ்வளவு காலம் தாமதித்து அலுவலகர்கள் நியமிக்கப்படுவதே அதற்கு உதாரணம் என்றார். (ம-4)

## சித்திரவதைகள்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகள் கடந்துவிட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டையுடைய அரசை அவர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

சர்வதிகாரமற்ற ஆட்சியை முன்னெடுப்பேன் என மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார். எனினும் தமிழர்களுக்கு எதிரான சித்திரவதைகள் தற்போதும் தொடர்கின்றன என்பதற்கான ஆதாரங்கள் அல்ஜஸிராவுக்குக் கிடைத்துள்ளன.

லண்டனிலுள்ள அல்ஜஸிராவின் பிரத்தியேக நிருபர் பரணாபை பிலிப்ஸ் இந்த ஆதாரங்களைச் சேகரித்துள்ளார் என்றுள்ளது.

இதேபோன்ற ஆதாரங்களை ஏஎப்பி சர்வதேச ஊடகம் சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தது. அண்மையில் வெளிநாடுகளுக்கு சென்றவர்களிடம் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பெற்றுக்கொண்ட வாக்குமூலங்களே இவையாகும். (ம-4)

FRENCH LANGUAGE CENTRE

FRENCH வகுப்புக்கள்

V. ஜெகன் (Trained in France- 2007)

Diploma Classes : DELF A1, A2, B1, B2.

40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 10.03.18 சனி காலை 10மணி.

181, பிரதான வீதி, நெல்லியடி 021 320 2973 ஆரம்பம் 12.03.18 மாலை 3.30மணி

திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(சி-1741)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(3027)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

A/L தொழில்நுட்ப பிரிவு

A/L 2018 Day Class மாணவர்களுக்கான

உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்

Paper Class / Past Paper Class } சனி, ஞாயிறு 12.00 - 2.00

செயல்முறை வகுப்பு

2.30 - 4.30 (சனி, ஞாயிறு)

(ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)

பிரபல ஆசிரியர் : கலைதீபன்

(யா/நெல்லியடி மத்திய கல்லூரி)

(கடந்த 3 வருடங்களில் 72 மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிய பெருமையுடன்)

(சி-1756)

Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)

தொடர்பு:077 326 1648


## காணாமல் ஆக்...

காணாமற்போனோர் அலுவலகத்துக்கான தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நியமனக் கடிதங்களை வழங்கியிருந்தார்.

இதுதொடர்பாக அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், தமது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், வலுவான, சுதந்திரமான, காணாமற்போனோருக்கான அலுவலகத்தின் உருவாக்கமானது, இலங்கையின் அனைத்து மக்களுக்கும், குறிப்பாக தமது அன்புக்குரியவர்கள் தொடர்பான பதிலைத் தேடுகின்ற மக்களுக்கு, நிலையான அமைதி, மீள நிகழாமை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கு ஒரு முக்கியமான நகர்வாகும் என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## ஊழல், மோசடிகளுக்கு...

யாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். மக்களுக்கு தேவையான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முறைகேடுகள் இன்றி சரியாகவும், வெளிப்படை தன்மையுடன் முன்னெடுக்க தேவையான வேலைத்திட்டங்களை எதிர்காலத்தில் உருவாக்க உள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். மேலும் உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவான உறுப்பினர்களுக்கு கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக 50 லட்சம் ரூபாயை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும். அந்த பணத்தில் ஊழல் செய்யாது சிறப்பாக பணியாற்றுவோருக்கு 100 லட்சம் ரூபாய் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## தொட...

பொது மக்கள் மனம் தளராமல் தமது உரிமைக்கான போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என தெரிவித்தார் என கேப்பாப்புலவு போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கேப்பாப்புலவு காணிகளை விடுவிப்பதற்குரிய அதிக பட்ச முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. மிக விரைவில்நல்லதொரு முடிவினை மக்களுக்கு பெற்றுத்தருவதாகவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.(ம)


விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg

கனடா-1050*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

தொடர்புகளுக்கு: 0768226240

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

VZ TRAVELS (C-1727)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்

Banking Courses

IABF & DABF

(Tamil & English Medium)

Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.

கணக்காளர் கற்கை நெறிகள்

Chartered Accounting Courses

Executive Level & Business level

(Tamil & English Medium)

Qualification:- G.C.E. A/L 3 Passes.

Certificate Course in English

16 Batches have successfully Completed the course Register your names before 10/03/2018

Further Details: Jaffna College Undergraduate Dept. 464, Hospital Road, Jaffna. 0212223382 / 0212229149

(சி-1708)

அறிமுகம் - Rs. 250/=

சிக்கன் பிரியாணி

ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்

Fried Chicken - Rice & Bites

யாழ் பாடியில்

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

வேலைவாய்ப்பு

நீங்கள் தொழில் தேடுபவரா?

உலகளாவிய ரீதியில் விஸ்தரித்து இயங்கி வரும் எமது சர்வதேச கம்பனிக்கு O/L, A/L படித்த இளைஞர் யுவதிகள் தேவை.

- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசத்தினர் விரும்பத்தக்கது
- வயதெல்லை 18 - 30
- தங்குமிட வசதிகள் உண்டு.

(3082)

தொடர்பு: 076 666 8385

உடனடி வேலைவாய்ப்பு

யாழ் போதனா வைத்தியசாலைக்கு எதிரில் SINGER காட்சியறைக்கு மிக அருகில் உள்ள ஆரோக்கியமான இரசாயன கலப்பற்ற பழங்கள், உடனடி பழ இரசங்கள். காலை, மதியம், மாலை சிற்றுண்டிகள் விற்பனை செய்யும் தரமான விற்பனை நிலையத்துக்கு திறமையான, ஆர்வமுள்ள, சுகாதாரத்தில் அக்கறையுள்ள பணியாளர்கள் தேவை. முன்அனுபவம் அவசியம் இல்லை. (ஆண், பெண் இருபாலாரும்) தொடர்பு: 0770780240

(3048) நேர்முகத் தேர்வு: 03,04 பங்குனி 2018 572, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு வாழ் மக்களுக்கு யமஹா வழங்கும் மாபெரும் வாகன சந்தை 2018

எவ்வகையான உங்கள் பழைய மோட்டார் சைக்கிளையும் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு உரிமையாளர் ஆகுங்கள்.

பழையதை கொடுத்து புதியதை எடுத்து செல்லுங்கள்



கிளிநொச்சி டிப்போ சந்தி அருகாமை

மார்ச் 02,03,04

021 228 5253

071 315 9891

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

முல்லைத்தீவு டிஜிற்றல் யமஹா காட்சியறை முன்றலில்

மார்ச் 09,10,11

077 779 5800

Yarnaha Garden

No.31, A9 Road, Karadippokku, Kilinochchi.

077 755 5115

Digital Electronics

Main Street, Mullaitivu.

077 662 3824

எம்மிடம் லீசிங் மூலம் பெற்றுக் கொள்பவர்களுக்கு 15 லீற்றர் பெற்றோல், SLS ஹெல்மற்-01 இலவசம்

(சி-1753)

Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)

A/L தொழில்நுட்ப பிரிவு

A/L 2020 மாணவர்களுக்கான செயல் முறை வகுப்புகள் ஆரம்பம் 03.03.2018

A/L 2019, 2018 மாணவர்களுக்கான செயல்முறை பண்ணை பொறிமுறைப்படுத்துகை

ஒவ்வொரு மாணவ, மாணவியும் இரண்டு, நான்கு சக்கர வாகனம் (2wheel, 4wheel tractor) ஓட்டுவதற்கு தனியாக கற்பிக்கப்படும்.

(சி-1754)

அனுமதி இலவசம் - 03.03.2018

077 017 5346 இடம்: சங்குவேலி வயல்



கண்ணீர் அஞ்சலி



திருமதி நாகலிங்கம் இராசம்மா (அளவெட்டி)

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் அதிபர் திரு.நாகலிங்கம் கேதீஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி நாகலிங்கம் இராசம்மா அவர்களின் மறைவால் துயரடைந்துள்ள குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோட்டக்கல்வி அலுவலரும், தெல்லிப்பழைக் கோட்ட அதிபர்களும், அதிபர்கள் சங்கம், தெல்லிப்பழை

(3083)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.